துளிர் விடும்

2016

Thalir

# தளிர்

தமிழின் தனித்துவம் காப்போம்!

மலர் - 10

சித்திரை - ஆனி

$2





வாகரை முதல் முள்ளிவாய்க்கால் வரை!



நேர்காணல் - அகஸ்ரின் ஜீவானந்தன்!



ஐரோப்பாவின் மிதக்கும் நகரம் மூழ்குகிறது!



தொல்காப்பியமும் திணைக்கோட்பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMPUTEK COLLEGE

EST. 1991

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Registered as a Private Career College under the Private Career Colleges Act,2005

சில மாதங்களிலே வேலை வாய்ப்பு!



## DIPLOMA COURSES

| | |
|---|---|
| Enterprise Network Engineering | 50 Weeks |
| Int. Application Development | 50 Weeks |
| Community Services Worker | 50 Weeks |
| Personal Support Worker | 32 Weeks |
| Accounting & Payroll Admin | 35 Weeks |
| Early Childcare Assistant | 38 Weeks |
| Medical Office Admin | 28 Weeks |
| Network Engineering | 35 Weeks |
| Computerized Accounting | 26 Weeks |
| Business Administration | 26 Weeks |

## CERTIFICATE COURSES

Bank Teller, Food Handler, AccPac, Quickbooks
Simply Accounting, MS Office

New 20,000 Sq.ft Location

**Celebrating 25 Years of**
**Quality Education**

**Now Accepting International Students!**

Computek College is approved as a Designated Learning Institution (D.L.I) by Citizenship and immigration Canada.

**Laid Off or Unemployed?**

Second Career and Other Financial assistance may be available for those who qualify.

**Call for Details.**

Markham Campus
Markham/Steeles
905.471.3344

Toronto Campus
Kennedy/Eglinton
416.321.9911

www.computek.edu | info@computek.edu


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாண்டு சமூக இலக்கிய தமிழ் சஞ்சிகை


## Thalir

Chief Editor
**Sivamohan Sivalingam**

Sub Editors
**Nanthini Mohan**
**Moorthy Sellathurai**

Managing Editor
**Prof. E. Balasundaram**
**Dr. Paul Joseph**

Media Cordinator
**Dr. Paulraj Pandian**
**G digital photography Gopu**

Advisors
**Shankar Manikkam**
**Shan Thayaparan**
**Rudy Ruththran**
**Thava Elayathamby**
**Arul Chellaia**
**P.Rankanathan**
**S.Krishna Gopal**
**K.Rameshkumar**
**B. Nesathurai (Nishan)**

Design & Artwork
**Thalir Design**

Advertisements
**S.Mohan, S.Pushpan**



43 Andover Cresent, Scarborough, ON.
M1E 2X2 Tel: 647 657 0910,
647 345 3022 | Fax: 647 345 3022
Email: thalir.thalir@yahoo.ca


## தளிரில் மலர்வது...


திருக்குறள் ........ 03
நாம் தமிழர் ........ 04
இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ் ........ 07
வெரோனிக்காவின் முக்காடு ........ 08
தொல்காப்பியமும், திணைக்கோட்பாடும் ........ 12
விமானம் ஓட்டும் நாய்கள் ........ 16
மாண்புறு கணினிகள் ........ 17
சங்க கால வரலாறு ........ 20
கருவேப்பிலையில் இத்தனை நன்மைகளா? ........ 24
கணித மேதை சினிவாச ராமானுஜம் ........ 26
சங்க காலத்துக் கூத்துக்கலை ........ 28
எமக்கென்றொரு வட்டம் புது உலகம் படைக்கும் ........ 32
உலகின் பிரபல குத்துச்சண்டை வீரர் முகமது அலி ........ 38
ஐரோப்பாவின் மிதக்கும் நகரம் மூழ்குகிறது ........ 42
பட்டங்களும் பாராட்டுகளும் ........ 45
தளிரில் படர்ந்த நிகழ்வுகள் ........ 46
பழைய கண் புதிய பார்வை ........ 58
கவித்தளிர் ........ 64
முக்கர்ணர்கள் ........ 66
சமூக சேவகருடன் ஒரு சந்திப்பு ........ 71
கல்வி வலயத்திற்கு நிதியுதவி ........ 74
சமைப்போம்! சுவைப்போம் ........ 76
சூரியன் தொட்டு விடும் தூரம் தான் ........ 78
சிரி.. சிரி... சிரி... ........ 79
பூந்தளிர் ........ 80
அஜித்தின் தல 57ல் டபுள் கொண்டாட்டம் ........ 87
வாகரை முதல் முள்ளிவாய்க்கால் வரை ........ 88
ஆனந்த யாழை மீட்டுவது யாரோ? ........ 90



Disclaimer:- All rights reserved the opinion/views expressed by the contributors are their own and do not reflect those of the publisher. The Publisher assumes no responsibility of any kind of publication.



**Published by: Thalir Publication, Member of National Ethinic Press Media**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு உள்ளவரை

# துளிர் விடும் தளிர்!

**மரம், செடி, கொடி, பறவைகள், விலங்குகள், மனித இனம் ஆகிய அனைத்துக்குமே உயிரும், வாழ்க்கையும் உண்டு. வாழ்க்கை என்பது சொர்ப்பனத்தில் காண்பது போன்று பஞ்சணையில் படுத் துறங்கி இன்பக் கனாக் காணும் சொகுசான காரியமல்ல. கல்லும், முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையினூடாக பாதணிகளின்றி வெறுங்கால்களுடன் நடந்து வலிகளையும், வேதனைகளையும் தாங்கி பொறுமையுடன் கொண்ட கொள்கையை கைவிடாது பயணத்தை தொடர்ந்து குறிப்பிட்ட இடத்தை சென்றடைவது தான் வாழ்க்கை.**

பொறுமையும், பொறுப்புணர்வும், சவால்களையும் எதிர்த்து சமாளிக்கும் துணிவும் கொண்டு வாழ்வில் ஏற்படும் சோதனைகளையும், வேதனைகளையும் சமாளித்து துணிச்சலுடன் மேலேறிச் செல்பவர்கள் தான் சாதனையாளர்கள். பகுத்தறிவற்ற செடிகளும், விருட்சங்களும் சுயநலம் கொண்டவையல்ல! மனோரம்மியமான மலர்களையும், தித்திப் பான கனிகளையும் பிரதிபலன் கருதாது பிறரின் மகிழ்ச்சிக்காக தானம் செய்து பரம திருப்தி அடைபன. ஆனால் பகுத்தறிவுவாதி எனத் தன்னைத் தானே கூறி பெருமைப்பட்டுக் கொள்ளும் மனி தனோ பிறரைப் பற்றி எள்ளளவும் எண்ணாது தன்னலமே குறிக்கோளாகக் கொண்டு சுயநலவாதியாக குருட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

பிறப்பின் போதே ஒவ்வொரு உயிருக்கும் இறப்பு நிட்சயிக்கப்பட்டு விட்டதனை யாரும் அறியாமல் செயல் படும் பகுத்தறிவு படைத்த மனிதாபிமானமற்ற மனிதர்களின் கபட நாடகங்களை பார்த்து இயற்கை கூட வெட்கப் படுகிறது. முத்திங்களுக்கு ஒருமுறை மலரும் செடி தான் எமது 'தளிர்' இதழுமாகும். இலாப நோக்கமற்ற நோக்கு டன் 'தளிர்' காலாண்டுக்கொரு முறை இரண்டு வருடங்களையும் தாண்டி வெளி வந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயமே.! புலம் பெயர்ந்த நாட்டில் எமது தமிழ் மொழி தமிழினை இலக்கிய இதிகாசங்களுடன் பல தமிழ் அறிஞர்களின் ஆக்கங்களுடனும், பல்வேறு விடயங்களையும், எமது எதிர்கால குழந்தைகளின் தமிழாக்கவியல்களை யும் வெளியிட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

இந்த இலக்கிய இதழை வெளியிடுவதில் பல்வேறுபட்ட சிரமங்களுடனும், பல தடைகளையும் தாண்டி சவால் களுடன் பயணிக்கும் பயணமானது விளம்பரதாரர்களின் பெரும் ஆதரவினை உரமாக்கி தனது உயிர்ப்போடு துளிர் விட்டுக்கொண்டிருக்கின்றது. வாசகர்களின் ஆதரவும் தளிர் உறுப்பினர்களின் அன்பினாலும் வளர்ச்சி பெற்று இணையத்தளத்தினையும் உருவாக்கி பத்தாவது சிறப்பிதழுடன் மொன்றியலிலும் எமது ஈழத்தின் மண்ணிலும் வெளி வருவது ஒரு சவாலின் முதற்படி. இயற்கையோடு போராடி வளரும் செடி ஓங்கி வளரும். உயிர்ப்பு உள்ளவரை துளிர்த்துக்கொண்டே இருக்கும்.

"தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை", தொண்டர்களும் சோதனைகள், வேதனைகளுக்கு மத்தி யிலும் தமது அன்றாட பணிகளை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார்கள். அதுதான் அவர்களுக்கு ஆத்ம திருப்தி. அதனால் தான் ஔவை, திருவள்ளுவர், தொல்காப்பியர், கம்பர், வால்மீகி போன்ற அறிஞர்களாலும் எம் மாவீரர்களாலும் தமிழும் வீரமும் இன்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. சோதனை மேல் சோதனை களும், வேதனை மேல் வேதனைகளும் தடைக் கற்களாக வந்தாலும் அவற்றினை படிக்கற்களாக மிதித்தும், வானமே வறண்டாலும் அந்த வரட்சியையும் மீறி தமிழுணர்வு கொண்ட வள்ளல்களின் கருணை மழைத் துளிகளை உறிஞ்சி 'தளிர்' மீண்டும் மீண்டும் துளிர் விடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எனவே எமது அன்பு வாசகர்களே, உங்களது அன்பு வரிகளை எமக்கு எழுதுங்கள். வர்த்தக பிரமுகர்களே, தொடர்ந்து எமது இலக்கிய பயணத்திற்கு கைகோர்த்து செயற்படுங்கள். மீண்டும் சந்திப்போம் நல்லதோர் துளிர்ப்பில்.

என்றும் உங்களுடன் 'தளிர்' பிரதம ஆசிரியர்

**சிவமோகன் சிவலிங்கம்**


**editor.thalir@yahoo.ca | (647) 657 0910 | www.thalirrhythm.com**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

அதிகாரம் / **Chapter / Adhigaram:** நீத்தார் பெருமை, பால் / **Section / Paal:** அறத்துப்பால் / **Virtue / Araththuppaal 1,** இயல் / **Chapter Group / Iyal:** பாயிரவியல் / **Prologue / Paayiraviyal**

*உலகப் பொதுமறையாம் திருக்குறளை உங்கள் அனைவருக்கும் விளங்கும்படி ஆங்கிலத்திலும், தமிழிலும் இங்கு தந்துள்ளோம். இது எமது தமிழ் மொழியில் திருவள்ளுவரால் ஆக்கப்பெற்ற உலகம் வியக்கும் ஒரு நூல். எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய பல கருத்துக்களை உள்ளடக்கியதும், பெரிய விடயத்தை இரண்டே வரிகளில் அழகு தமிழில் எழுதப்பட்டதுமான ஒரு பொக்கிஷம்... எல்லாத் தமிழர்களும் அறிந்திருக்கவேண்டிய ஒரு நீதி நூல்.*



**குறள் 51**

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

**விளக்கம்:** பிறந்த, புகுந்த குடும்பங்களுக்கு ஏற்ற நல்ல குணம், நல்ல செயல்களை உடையவளாய்த், தன்னை மணந்தவனின் வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கையை அமைப்பவளே மனைவி.

**Couplet 51:** As doth the house beseem, she shows her wifely dignity; As doth her husband's wealth befit, she spends: help & meet is she

**Explanation**

She who has the excellence of home virtues, and can expend within the means of her husband, is a help in the domestic state

**Transliteration**

Manaikdhakka Maanputaiyal Aakiththar Kontaan
Valaththakkaal Vaazhkkaith Thunai

**குறள் 52**

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்

**விளக்கம்:** நல்ல குணமும் நல்ல செயல்களும் மனைவியிடம் இல்லாமற் போனால் அவ்வாழ்க்கை எத்தனை சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் பெறாததே

**Couplet 52:** If household excellence be wanting in the wife, Howe'er with splendour lived, all worthless is the life

**Explanation:** If the wife be devoid of domestic excellence, whatever (other) greatness be possessed, the conjugal state, is nothing

**Transliteration:** Manaimaatchi Illaalkan Illaayin Vaazhkkai, Enaimaatchith Thaayinum Il

**குறள் 53**

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை

**விளக்கம்:** நல்ல குணமும் நல்ல செயல்களும் உடையவனாய் மனைவி அமைந்துவிட்டால் ஒருவனுக்கு இல்லாததுதான் என்ன? அமையாவிட்டால் அவனிடம் இருப்பதுதான் என்ன?

**Couplet 53:** There is no lack within the house, where wife in worth excels, There is no luck within the house, where wife dishonoured dwells

**Explanation:** If his wife be eminent (in virtue), what does (that man) not possess ? If she be without excellence, what does (he) possess ?

**Transliteration:** Illadhen Illaval Maanpaanaal Ulladhen Illaval Maanaak Katai?

**குறள் 54**

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்

**விளக்கம்:** கற்பு எனப்படும் மன உறுதி மட்டும் பெண்ணிடம் இருக்குமானால் மனைவியைக் காட்டிலும் மேலானவை எவை?

**Couplet 54:** If woman might of chastity retain, What choicer treasure doth the world contain

**Explanation:** What is more excellent than a wife, if she possess the stability of chastity ?

**Transliteration:** Pennin Perundhakka Yaavula Karpennum, Thinmaiun Taakap Perin

**குறள் 55**

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

**விளக்கம்:** பிற தெய்வங்களைத் தொழாமல் கணவனையே தெய்வமாகத் தொழுது வாழும் மனைவி, பெய் என்று சொன்னால் மழை பெய்யும்.

**Couplet 55:** No God adoring, low she bends before her lord; Then rising, serves: the rain falls instant at her word

**Explanation:** If she, who does not worship God, but who rising worships her husband, say, "let it rain," it will rain

**Transliteration:** Theyvam Thozhaaal Kozhunan Thozhudhezhuvaal, Peyyenap Peyyum Mazhai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாம் தமிழர்

## ஆக்கி அறைந்தோன் மு.க.தமிழ்

திங்களொடும் செழும்பரிதி தன்னொடும்
விண்ணோடும் உடுக்களோடும்

மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன்
பிறந்தோம் நாங்கள்

நாம் நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமை கொண்டவர். தமிழ் ஐம்பதினாயிரம் ஆண்டு தொன்மையான மொழி. இறைவன் பேசிய மொழி தமிழ். எல்லா உயிர்களை சரிநிலைப்படுத்தியவர் தமிழர். உலக மக்களை உறவினராக உரிமை கொண்டாடியவர் தமிழர். அனைத்து உயிர்களுக் கும் பகிர்ந்துண்ட பண்புக்கு உரிமை கொண்டவர் தமிழர். பாண்டிய அரசின் அவையில் பொய் குற்றம் சாட்டப்பட்ட கணவனுக்காக நீதி கேட்ட கண்ணகி வழிவந்த தமிழர் நாம். தமிழர் இன்றுவரை மானமும் அறிவும் ஆற்றலும் வீரமும் கொண்ட தமிழர்கள் மண்டியிடாத மானத்தோடும் வீழ்ந்துவிடாத வீரத்தோடும் தமிழின் எழுச்சிக்காக தமிழை மீட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனப்பெருமையும் மொழிப் பெருமையோடும் தமிழை மீட்போம்.

### திராவிடர்:

யார் திராவிடர். திராவிடம் என்றால் என்ன ஒரு இனமா ஒரு மரபினமா ஒரு மொழியா. திராவிடம் என்பது தமிழர் களை அழிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சொல். திராவிடக் கட்சிகள் தமிழனை ஆளவும் தாம் சிறப்பாக வாழ்வதற்கும் திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தி தமிழனையும் தமிழையும் அழித்திருக்கின்றார்கள்.

தமிழர்களின் வரலாற்றுப் பதிவுகளில் தமிழர் ஆரியர் பற்றிய குறிப்பு உண்டு. திராவிடம் பற்றிய செய்தி தமிழர் களுடைய வரலாற்றுப் பதிவுகளில் எதுவும் இல்லை. சங்க இலக்கியங்களில் திராவிடம் என்ற சொல்லே இல்லை. தமிழ்க் காப்பியங்களில் பக்தி இலக்கியங்களில் திராவி டம் என்ற சொல்லுக்கான சான்று ஒன்றுமே இல்லை. ஆரியத்தை எதிர்ப்பது தமிழரின் பண்பாடுகளில் ஒன்று. ஆரியத்தை எதிர்க்கும் வல்லமை தமிழுக்கு மட்டுமே உண்டு. ஆரியம் தமிழர்களுக்கு பரம்பரை எதிரி.

ஆரியம் ஏன் தமிழர்களுக்கு எதிரி. இறைவழிபாட்டில் ஏன் ஆரியம் முன் நிற்கிறது. நீண்டநெடிய வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழர் என்ற தேசிய இனம் செல்வச் செழிப்போடு அறம், அன்பு, அழகு, நட்பு, விருந்தோம்பல், உறவு, கொள்கை, வீரம், ஆற்றல், மானம், அறிவு, பெருமை, புகழ், எழுச்சி, விரியம், வெற்றி, சான்றோரை போற்றுதல் என அனைத்திலும் சிறப்பாக வாழ்ந்தவர் தமிழர். இன்றும் தமிழர்கள் அதை உலக பந்தில் உறுதிப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஆரியத்தின் ஆளுமை தமிழர்களை ஏமாற்றி தமது வாழ் வையும் வளத்தையும் பெருக்குவது. தமிழ் அரசர்களை கடவுளைச் சொல்லி ஏமாற்றி அரசர்களிடத்திலிருந்து தங் களை உயர்த்திக் கொண்டார்கள். அரசர்கள் ஆரியத்தின் ஏமாற்றுகளின் உண்மைத் தன்மையை அறியாதது தமிழினத் திற்கு கிடைத்த இழிவாகும்.

திருஞான சம்பந்தர் ஆரிய இனத்தைச் சேர்ந்தவர். ஆரிய இனத்தைச் சார்ந்த சம்பந்தர் தன்னை தமிழர் என்று முத்திரை குத்தினாரே தவிர ஆரியர் என்று சொல்ல வில்லை. திருநாவுக்கரசு நாயனார் சிவனை தமிழும் கண்டாய் ஆரியம் கண்டாய் என்று சொன்னாரே தவிர திரா விடம் கண்டாய் என்று சொல்லவில்லை. சேக்கிழார் சுவாமி கள் திராவிடத்தைப் பற்றி சொல்லவில்லை. சித்தர்கள் திரா விடத்தைப் பற்றிச் சொல்லவில்லை.

ஆரிய பார்ப்பனர்கள் தங்கள் பெயருக்கு பின்னால் திராவிட என்ற சொல்லை பயன்படுத்தி வந்துள்ளார்கள். ராகுல் திராவிட என்ற மட்டைப்பந்து விளையாட்டு வீரரை தொலைக்காட்சி நேர்காணலில் திராவிடர் என்ற சொல்லு எனது பேரனார் வைத்துக் கொண்டார். அதனால் அதை நாம் இப்போதும் பின்பற்றுகிறோம் என்கிறார்.

திராவிடம் என்பது தென்நாட்டில் வாழும் பிராமணரைக் குறிக்கும் சொல். ஆரியர்; சிந்துவெளிக்குள் நுழையும் பொழுது தமிழர் செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தனர். தமிழர் என்ற சொல்லை உச்சரிக்க முடியாமல் திரமிரர் திரா விடர் என உச்சரித்தனர். ஞானசம்பந்தரை ஆதிசங்கரர் திராவிட சிசு என்று அழைத்தார். ஞானசம்பந்தருடைய சம காலத்தவர்கள் எவரும் ஞானசம்பந்தரை திராவிடர் என அழைக்கவில்லை.

திராவிடக்கட்சிகளின் பிறப்பே தமிழின அழிப்புக்கா னது. திராவிடர் கழகத்தில் தமிழர் யாராவது தலைவனாக இருந்திருக்கிறார்களா, திராவிட முன்னேற்றக் கழகத்தில் தமிழர்கள் யாராவது தமிழர்கள் தலைவராக இருந்திருக் கிறார்களா, அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா
## தங்க நகை அடைவு மாடம்



# AMMA PAWN BROKER

**வர்த்தக துறையில் 20 வருடங்கள் முன்னோடியான எமது நிறுவனத்தின் சேவைகள்:**

* உங்கள் நகைக்கு கூடிய பெறுமானம் , குறைந்த வட்டி வீதம்
* உங்கள் பழைய நகைகள் வாங்க, விற்க நியாயமான விலை
* நகை திருத்த வேலைகள் + புதிய நகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டியுடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.

☆ நம்பிக்கை
☆ நாணயம்
☆ உத்தரவாதம்

**1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)**




* அம்மாவுக்கு நிகரான சேவை அம்மா நகை மாடமே
* உங்கள் பழைய நகைகளை அதி உயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
* கனடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவு சேவை

Scan me

**$15000**ற்கு மாதாந்த வட்டி **$225** மட்டுமே
வேறு கட்டணங்கள் இல்லை

உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்

**$1000**ற்கு மாதாந்த வட்டி **$20** மட்டுமே
வேறு கட்டணங்கள் இல்லை

**Scarborough**
416-757-0034 | 416-994-3861

**Downtown**
416-921-0034

**105A-2425 Eglinton Ave E, Scarborough, ON. M1K 5G8**
**ammapawnbroker@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் யாராவது தமிழர்கள் தலைவராக இருந்திருக்கிறார்களா மாறாக பார்ப்பனியப் பெண் தலைவராக இருக்கிறார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் தமிழர்கள் தலைவராக இருந்திருக்கிறார்களா, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தில் யாராவது தமிழர்கள் தலைவராக இருக்கின்றார்களா, திராவிடம் என்ற சொல்லு தமிழர் அல்லாதோர் தமிழரை ஆழ்வதற்கும் தமிழரின் வளத்தை சுரண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட சொல்.

மறைமலையடிகள் திரு.வி.க சோமசுந்தரபாரதி அண்ணல் தங்கோ இன்னும் பல தமிழ் அறிஞர்கள் மொழிக்காக தங்களை ஈகம் செய்த வரலாறு உண்டு. தமிழர்களின் ஈகங்களை மூடி மறைப்பதற்காக தந்தை பெரியாரால் தொடங்கப்பட்ட திராவிடக் கொள்கை.

தந்தை பெரியாரின் கடவுள் மறுப்பு சமூகநீதிக் கொள்கை எழுச்சியானது தமிழர்களின் ஆரிய எதிர்ப்பு. இதையே கர்நாடாகவிலோ கேரளாவிலோ ஆந்திராவிலோ தந்தை பெரியார் முன்னெடுத்திருந்தால் ஆள் சேர்ந்திருக்க மாட்டார்கள். பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிராக குரல் கொடுத்தார் தந்தை பெரியார். அதை மதிக்கிறோம். போற்றுகிறோம். பார்ப்பன ஏமாற்று வித்தைகளை முறியடிக்கக் கூடிய வலிமை தமிழுக்கும் தமிழனுக்கும் மட்டுமே உண்டு.

## இறைவன் பேசிய மொழி


என் உயிருக்கு மேலான தமிழ் உறவுகளே!


இறைவன் பேசிய மொழி தமிழை இறைவழிபாட்டில் பயன்படுத்த தயங்கும் எவரையும் நம்பி ஏமாறாதீர்கள். விளங்காத மொழியில் பூசை செய்வதை முற்றாக தமிழர்கள் புறக்கணிக்கவேண்டும். தமிழர்களின் பணம் தேவை தமிழர்களின் பொருட்கள் தேவை. ஆனால் தமிழை பயன்படுத்த மறுப்பதன் உள்நோக்கம் என்ன.

எமது தாய்மொழியை மீட்டு தமிழின் அடையாளத்தை உறுதிப்படுத்தி தமிழை மீட்டு தமிழை எழுச்சி கொள்வோம்.

தமிழ் பேசி தமிழனாக வாழ்

தமிழின் மீட்சியே தமிழின் எழுச்சி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்

- புஷ்பா கிறிஸ்ரி

உன் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும் நீ முயன்றால். அது உன் கையில் தான்.. உனக்கு எது தேவையோ அதை நீயே தேர்ந்து எடுத்துக் கொள். பின் அதனை மன நிறைவுடன் ஏற்று வாழப் பழகிக் கொள். வாழ்க்கை வாழ் வதற்குத் தான்.. என்றுமில்லாதவாறு அன்று அந்த பேரா சிரியர் மகிழ்ச்சியாக இருந்தார். அன்று அவரது பழைய மாணவர்கள் சிலர் அவரிடம் வந்தனர். வந்த அந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சிலர் தங்கள் முன்னாள் பேராசிரியரைச் சந்தித்து தங்களின் வாழ்க்கை பற்றியும், தொழில் பற்றியும் பகிர்ந்து கொண்டிருந்தனர். வாழ்க்கை இயந்திரத்தனமாகவும், அமைதி இன்றியும், மன உளைச்சலைத் தரக்கூடியதாகவும் உள்ளது எனச் சொல்லி ஆதங்கப்பட்டனர். திடீரென்று சமையலறைக்குச் சென்ற பேராசிரியர், சிறிது நேரம் கழித்து ஒரு பாத்திரத்தில் நிறைய காபி கொண்டுவந்து வைத்தார். கூடவே காபி குடிப்பதற்காக விதவிதமான கோப்பைகளையும் கொண்டு வந்தார். அவற்றில் ‘வெள்ளி, பீங்கான்’, போன்ற விலையுயர்ந்த கோப்பைகள் முதல் ‘கண்ணாடி, பிளாஸ்டிக், காகிதம்’ போன்ற சாதாரண கோப்பைகள் வரை பல வகைகள் இருந்தன. அனைவரையும் அழைத்து கோப்பைகளை எடுத்துக் கொண்டு நீங்களே காபியையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று பேராசிரியர் கூற, முதலில் இருந்தவர்கள் விலை உயர்ந்த கோப்பைகளை தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அடுத்து வந்தவர்களுக்கு சாதாரண கோப்பைகளே கிடைத்தன. மிகச் சாதாரண கோப்பைகள் யாராலும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அனைவரும் தங்களுக்குக் கிடைத்த கோப்பையில் காபி எடுத்துக் கொண்டனர். அப்போது பேராசிரியர், பேசலானார், “உங்கள் கைகளில் உள்ள கோப்பைகளைப் பாருங்கள். உங்களுக்கு மிகச் சிறந்தது வேண்டுமென்று விரும்புகிறீர்கள். கிடைக்காத பட்சத்தில் கிடைத்த தில் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கிறீர்கள். அது இயல்புதான் என்றாலும் அவைதான் மனஅழு த்தம், ஏமாற்றம் போன்ற பிரச்சனைகளுக்கு காரணம். சிந்தித்துப் பாருங்கள்.

கோப்பை எத்தனை விலை உயர்ந்ததாக இருந்தாலும் அவை காபியின் தரத்தை மாற்றப் போவதில்லை. விலை குறைந்ததாக இருந்தாலும் காபியின் சுவை குறைந்து விடப் போவதில்லை. உண்மையில், சில கோப்பைகளில் உள்ளே என்ன உள்ளது என்பதுகூடத் தெரியாது. களைத்துப் போய் இருக்கும் நேரத்தில் நம் தேவை காபிதான். ஆனால் நாமோ கோப்பைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம். அது மட்டுமல்ல. நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்தவர் கையில் என்ன கோப்பை இருக்கிறது என்பதையும் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அடுத்தவரிடம் உள்ளது விலை உயர்ந்தது என்றால் நமக்கு அது கிடைக்கவில்லையே என்ற வருத்தமும், அது சாதாரணமானது என்றால் உங்களுக்குக் கிடைத் ததில் மகிழ்ச்சியும் அடைந்திருப்பீர்கள். வாழ்க்கையும் காபி போன்றதுதான். பதவி, பணம், சமூகநிலை போன் றவை கோப்பைகளாகும். அவை வாழ்க்கைக்கு உதவும் வெறும் கருவிகளே. அவைகளே வாழ்க்கை ஆகி விடாது. கோப்பையின் மீது நாம் செலுத்தும் அதீத கவனத்தால் காபியின் சுவையை நாம் அனுபவிக்கத் தவறி விடுகி றோம். கோப்பையை ஒதுக்கி காபியைப் பாருங்கள். மகிழ்ச்சியாக வாழ்பவர்கள் எல்லாவற்றிலும் சிறந்ததைப் பெற்றிருப்பதில்லை. தாம் பெற்றிருப்பதைச் சிறந்ததாகக் கருதுகிறார்கள். அதனால் அவர்களை கவலைகளும் அழுத் தங்களும் அதிகமாக நெருங்குவதில்லை. “எளிமையாய் வாழுங்கள்! கருணையுடன் பேசுங்கள், அனைவரையும் அன்பு கூறுங்கள்! வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருக் கும்” என்றார் பேராசிரியர். மாணவர்கள் மீண்டும் கல்லூரிக்குள் சென்று வந்த மகிழ்வில் மன நிறைவுடன் சென்றனர். வாழ நினைத்தால் வாழலாம்.. வாழ்ந்து பாருங்களேன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெரோனிக்காவின் முக்காடு

(பகுதி 5.2)

- ராஜ்சிவா

இது லியர்னாடோவிற்குக் கிடைத்த மாபெரும் அதிர்ஷ்டமென்றே சொல்லலாம். யாருக்கும் வாய்க்க முடியாத ஒரு சந்தர்ப்பம். லியர்னாடோ அந்தத் தேவதையை வரைய ஆரம்பித்தார். ஆனால் வெரோக்கியோ வரைந்ததுபோல அவர் வரையவில்லை. அவர் பாவனை செய்த வர்ணக் கலவைகளையும்கூட அவர் பயன்படுத்தவில்லை. முட்டையின் மஞ்சள் கருவுடன், நிறங்களைக் கலந்து வரைவதையே வெரோக்கியோ வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆனால் அதைத் தவிர்த்துவிட்டு, முதன்முதலாக எண்ணெய் வர்ணத்தைப் (Oil Painting) பயன்படுத்தி அந்தத் தேவதையை வரைந்து முடித்தார் லியர்னாடோ டா வின்சி.

இந்த முயற்சி தோற்கும் பட்சத்தில் லியர்னாடோவின் மிகப்பெரிய முட்டாள்தனமாக அது இருந்திருக்கும். ஆனாலும், எந்தக் கவலையும் இல்லாமல், எந்தச் சிந்தனையுமில்லாமல் இளம் லியர்னாடோ, அதை



ஆயில் வர்ணங்களினாலேயே வரைவதென்ற முடிவையெடுத்து வரைந்தான். ஓவியத்தைப் பார்த்த வெரோக்கியோ பிரமித்துப் போய்விட்டார். அப்படியொரு அழகான உயிரோட்டமுள்ள தேவதையை அவர் அந்த ஓவியத்தில் கண்டார். தேவதையின் கூந்தல் அலையலையாக நிற வித்தியாசங்களுடன் இறங்கிவருவது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அனைத்துச் சீடர்களையும் அழைத்துக் காட்டினார். அவரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லாமல் இருந்தது. அந்த ஓவியம் 'The Baptism of Christ' என்னும் பெயரில் ஃபுளோரன்ஸில் இருக்கும் 'உஃபிட்சி' (Uffizi) கண்காட்சிச்சாலையில் இன்றும் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

எப்போது அந்தத் தேவதையின் முகத்தை லியர்னாடோ டா வின்சி அவ்வளவு அழகாக வரைந்தாரோ, அப்போதிருந்தே அங்கிருக்கும் அனைத்து ஓவியங்களிலுள்ள முகங்களையும் அவரே வரைய வேண்டுமென வெரோக்கியோ கேட்டுக் கொண்டார். அதுமட்டுமில்லாமல், அதன்பின்னர் எந்தவொரு ஓவியத்தையும் வெரோக்கியோ வரையவில்லை. அனைத்தையும் லியர்னாடோவே வரையவேண்டுமென்று முடிவெடுத்தார். லியார்னாடோவின் புகழ்பெற்ற ஓவியங்கள் பிறப்பதற்கான அடிக்கல் அங்கு நாட்டப்பட்டது. தனது முப்பது வயது வரை ஃபுளோரன்ஸிலேயே வாழ்ந்தவர், அதன் பின்னர் 'மிலான்' (Milan) நகருக்குக் குடிபெயர்ந்தார். மிலான் அந்தக் காலங்களில் போருக்கான அறிகுறிகளைக் கொண்டவொரு இடமாக இருந்தது. மிலானின் தலைவனிடம் லியர்னாடோ பணிக்கமர்ந்து கொண்டார். படிப்படியாக, மிலானிலுள்ள பல கட்டடங்களை வடிவமைப்பதற்கும், போர்ச் சாதனங்களை வடிவமைப்பதற்கும் உதவினார். இந்தக் காலங்களில்தான் பல எந்திரங்களை வடிவமைக்கும் தன்மைகளுடன் வரைந்து முடித்தார்.

கண்ணுக்கும், சூரியவொளிக்குமிடையில் நடைபெறும் நிகழ்வுகளையும் சரியாகக் கணித்துக் கொண்டார். ஒளியானது கண்களுக்குள்ளாக ஊடுருவிப் பின், அது மூளைக்கு அனுப்பப்படுகின்றது என்பதைப் படங்கள் மூலமாகக் குறித்து விளக்கியிருந்தார். அத்துடன் சூரியவொளி கண்ணாடியில் பட்டு நிறங்களாகப் பிரிகிறது என்பதையும் அவதானித்தார். அறிவியலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# SHAN THAYAPARAN

Sales Representative

**Dir: 416.567.7675**

**Bus: 416.321.2228**

## Buy or Sell...
## Call us first and Compare




SHAN'S

Home Team

www.shan123.com

Re/Max Vision Realty Inc. Brokerage

INDEPENDENTLY OWNED & OPERATED

Not intend to solicit property currently listed for sale or individuals under contract

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொல்லப்பட்டிருக்கும் அனைத்து விசயங்களையும் லியர்னாடோ முயன்று பார்த்திருக்கின்றார். அதில் குறிப்பாக மிலானில் நடைபெற்ற போரின்போது பயன் படுத்துவதற்காக 'யுத்தத் தாங்கி' (War Tank) ஒன்றையும் வடிவமைத்திருந்தார் என்றால் அவரின் கண்டுபிடிக்கும் திறமையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். மிலானில் லியர்னாடோ டா வின்சி வசித்த காலங்களில், பலவித கண்டுபிடிப்புகளைப் பற்றிய குறிப்புகளை எழுதி வைத்தி ருக்கிறார்.

மிலானுக்குத் தலைவனாக இருந்தவன், மிகப்பெரிய வேலையைச் செய்யும்படி லியர்னாடோவிற்குக் கட்டளை யிட்டான். அதுவே இன்று மிகவும் பிரபலமாகவும், மர்மங்கள் நிறைந்ததாகவும் சொல்லப்படும் படைப்பாக இருக்கிறது. 1494ம் ஆண்டளவுகளில், இயேசுநாதரின் 'கடைசி இராப் போசனம்' (The Last Supper) என்னும் ஓவியத்தை அங்குள்ள மண்டபத்தின் சுவரில் வரையும்படி லியர்னாடோவுக்குச் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட 9 மீட்டர்கள் நீளமும் நான்கரை மீட்டர்கள் உயரமும் கொண்ட மிகப்பெரிய ஓவியமாக அந்த இராப் போசன ஓவியத்தை வரைவதற்கு முடிவெடுத்தார் லியர்னாடோ. மிகத்திறமையாகவும், அழகாகவும், தத்ரூபமாகவும் அந்த ஓவியத்தை வரைந்து முடித்தார். ஆனால், எத்தனையோ திறமைகள் வாய்ந்த செயல்களை முன்கூட்டியே கணித்துச் செய்திருந்த லியர்னாடோ, சறுக்கிவிட்ட இடமாக அந்த ஓவியத்தைச் சொல்வார்கள். மிலானிலுள்ள 'சாந்தா மரியா' தேவாலயத்தின் சுவரில் வரையப்பட்ட அந்த ஓவியத்தின் ஸ்திரத்தன்மையைப் பற்றித் தவறான கணிப்பை, லியர் னாடோ போட்டுவிட்டாரென இப்போது விமர்சிக் கிறார்கள். வழமையாக ஓவியங்கள் துணிகளிலேயே வரையப்படுகின்றன. ஆனால், இந்த ஓவியமோ சுவரில் வரையப்பட்டது. இத்தாலியின் காலநிலை மாற்றங்களினால் சுவர்களில் ஏற்படும் மாற்றங்கள் ஓவியத்தையும் பாழடித்துவிடும் என்பதைக் கணிக்கத் தவறிவிட்டார் லியர் னாடோ. இதுபோன்ற பல சுவரோவியங்களை அவர் வரைந்திருந்தாலும், குறிப்பிட்ட இந்தச் சுவரில் வரைந்த ஓவியம் அதிகக் காலம் தெளிவாக இருக்கவில்லை. ஓவியம் வரைந்த நான்கைந்து ஆண்டுகளிலேயே அது பழுதடையத் தொடங்கிவிட்டது. இப்போது மிகவும் மோசமான நிலையில் அந்த ஓவியம் இருந்தாலும், கூடியவரை அதற்கான பாதுகாப்புக் கொடுத்துப் பார்த்துக் கொள்கிறார்கள்.

கடைசி இராப் போசன ஓவியம் பழுதடைந்தாலும், அது ஏற்படுத்திய தாக்கம் மிகப்பெரியது. இந்த ஓவியத்தின் அடிப்படையிலேதான், டான் பிரவுன், 'டா வின்சி கோட்' என்னும் நூலை எழுதிக் கத்தோலிக்க மதத்தினரின் நம்பிக்கையில் மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தினார். லியர்னாடோ அந்த ஓவியத்தில் பல மர்மங்களைக் குறியீடுகளாகத் தெரிவித்திருக்கிறார் என்று தன் புத்தகத் தின் மூலம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார். பன்னிரண்டு சீடர்களும் மூவர் மூவராகப் பிரிக்கப்பட்டு அந்த ஓவியத்தில் காணப்படுகிறார்கள். அங்கு காணப் படுவது பன்னிரண்டு சீடர்களல்ல, பதினொரு சீடர்கள் மட்டுமேயென்றும், பனிரெண்டாவதாக இருப்பது ஒரு பெண்ணென்றும். அவர்தான் மரிய மக்டலேனா என்றும் சந்தேகங்களை இந்த ஓவியத்தின்மூலம் எழுப்பி யிருக்கிறார். இந்த மர்மங்கள் லியர்னாடோவின் மேலும் பல ஓவியங்களிலும் இருப்பதாகவே சொல்லப்படுகின்றது. அத்துடன், ஏன் மூவர் மூவராக சீடர்களைப் பிரித்து வரைந் தார்? என்ற கேள்வியும் கேட்கப்படுகிறது.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KAPITAL CARE
MORTGAGE INC. Lic:-12623

# MORTGAGE & LOANS

வீட்டுக்கடன், வியாபாரக்கடன்
உங்கள் மோட்கேஜ் சம்பந்தமான
அனைத்து தேவைகளுக்கும்
இன்றே அழையுங்கள்.

Arul Chelliah
(LIC. # M08001849)
Mortgage Agent

5200 Finch Ave. East, Unit 306
Toronto, ON. M1S 4Z5

Call : 416.788.3528



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொல்காப்பியமும், திணைக் கோட்பாடும்

தொடர் - 3

பேராசிரியர் இ. பாலசுந்தரம்
(அண்ணாமலை கனடா வளாகம், ரொறன்ரோ)

பிற்கால இலக்கியங்கள் போன்று வெறும் நிகழ்ச்சிகள், உணர்ச்சிகள், காட்சிகள், வருணனைகள் ஆகியவற்றைச் சங்கச் சான்றோர் பாடவில்லை. தாம் கூறும் கருத்தும் அதனைத் தாங்கி மக்களிடம் செல்லும் செய்யுட்களும் மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும்; மக்களை நன்னெறிப்படுத்த வேண்டும் என்னுங் குறிக்கோள்களுடனேயே புலவர் பாடினர். இதனாலேயே அப்புலவர்கள் 'சங்கச் சான்றோர்' எனச் சிறப்பிக்கப்படலாயினர்.

சங்கப் புலவர் செய்யுள் இயற்றுவதற்குக் கையாண்ட 'நாடக வழக்கை நச்சினார்க்கினியர் 'புனைந்துரைவகை' என்றார். இதனைப் புலவராற் பாடுதற்கமைந்த வழக்கம் எனக்கொண்டு அகத்திணையாகிய காமப்பொருளே புலனெறிவழக்கம் என்றுணர்க' என்று கூறுகிறார். செய்யுளில் அகனைந்திணைச் செய்யுட்கள், குறிப்பிட்ட பிரதேசங்களுக்குக் குறிப்பிட்ட ஒழுக்கங்களை வற்புறுத்தி நிலம், பொழுது, செயற்பாடுகள் என்பவற்றுடன் உயர்வர்க்க மக்களின் அக ஒழுக்கங்களைப் பற்றிப் பாடுகின்றன.

அச்செய்யுட்களின் பொருள் பல்வேறுபட்ட அக உணர்வுகளையும் வாழ்வியல் ஒழுக்கங்களையும் வெளிப்படுத்துவனவாக அமைந்திருக்கும். அவ்வாறு பாடப்படுவதன் மூலம் செய்யுள் மரபுக்கும் நாடக வழக்குக்கும் இடையே வேறுபாடு காணமுடியாது என ராகவ ஐயங்கார் தமது தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி (1966:15) நூலிற் குறிப்பிடுதலும் நோக்கத்தக்கது.

சங்கப் புலவர் மக்களின் அகவுணர்வுகள், வாழ்வியல் ஒழுக்கங்கள் என்பனவற்றைப் பாடும்போது மேலும், தாம் பாட வந்த பொருளை மறைமுகமாகவும், பாடலில் இடம்பெறுவோரது பெயர்ளைக் குறிப்பிடாமலும் பாடும் திணைக்கோட்டை வகுத்துக்கொண்டமையையும் உணர்ந்த தொல்காப்பியர், அதனை வருமாறு குறிப்பிடுவர்:

மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்க்கொளப் பெறாஅர்'
(தொல். அகம். 57) என்றார்.

இப்பகுப்பு முறைகளும் இலக்கியக் கோட்பாடுகளும் பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள அகத்திணை இலக்கியங்களிலே தொடரப்பட்ட போதிலும், பிற்கால இலக்கியங்களிற் பேணப்படாமை கவனிக்கத்தக்கது. ஆயினும் காவியங்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியனவற்றில் நாட்டு வருணனை, நகர வருணனை, மலைகடல், ஆறு, சோலை எனத் தனித்தனியான வருணனைகள் இடம்பெறலாயின. தொல்காப்பியர் குறிப்பிட்ட திணைப்பகுப்புமுறையானது, பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பதை இவற்றின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. பாரதியாரின் குயிற்பாட்டைப் படிக்கும்போது தொல்காப்பியர் வகுத்துக்காட்டும் குறிஞ்சித் திணையின் காதல் ஒழுக்கம் பேசப்படுவதும், அதற்குரிய கருப்பொருளாகிய காடும், மாஞ்சோலையின் அழகும் சூழலும், அதன் கதாபாத்திரங்கள் வாழும் சூழலும், அவர்களிடையே காதல் அரும்பும் இடமும் குறிஞ்சி நிலமாகப் படைக்கப்பட்டிருத்தலை நோக்கலாம்.

குயிலியின் காதல் ஓவியம் தீட்டப்படும் போக்கையும் காதல் ஒழுக்கத்தின் தீவிரமான உணர்ச்சி வெளிப்பாடுகளையும் மாந்தோப்பைக் களமாகக்கொண்டு படைத்துக் காட்டும் பாரதியாருக்குத் தொல்காப்பியரின் அகத்திணைக் கோட்பாடு முன்னோடியாக அமைந்தமையைக் கண்டு கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY MECHANIC AUTO & TIRE

## MECHANICAL SERVICES

■ Oil Change (starting at $24,95+Tax & Disposal) ■ Steering & Suspension ■ Brakes ■ Tires ■ Fluid Flush (Transmission / Power Steering / Brake / cooling) ■ 4-Wheel Laser Aligment ■ Rustproofing / Undercoating



## ATHORISED MICHELIN TIRE DEALER


**WE CARRY MOST MAJOR TIRE BRANDS:**

**MICHELIN ***
**BF-GOODRICH***
**UNIROYAL***
**GOODYEAR**
**YOKOHOMA**
**BRIDGSTONE**

*Authorised Warranty Dealer




CONTACT US







# (905)946-1000

**4530 Steeles Ave,East Markham,ON L3R OL2**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நிலத்தில் வாழும் விலங்குகள், பறவைகள், மக்கள், தாவரங்கள், நீர்நிலைகள் முதலானவற்றைக் கருப் பொருளாகக் கொண்டு தாம் பாடவந்த விடயத்தைப் பாடுவது அகத்திணைமரபாக இருந்தது. சான்றாக ஒரு நிகழ்வைக் குறிப்பிடலாம். தலைவியின் காதலின் பிரிவையும் தலைவனின் அசமந்தப் போக்கையும் குறிப்பிட்டு விரைந்து திருமணம் செய்யத்தூண்டுவதாக ஒரு பாடல் குறுந் தொகை (பாடல்; -18) வருமாறு கபிலர் பாடுகிறார்:



'வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃது அறிந்தி சினோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே'

இப்பாடற் பொருளாவது,

தலைவா! உன்நாட்டுப் பலாமரங்கள் வேரிலே காய்த்துப் பழுக்கின்றன. ஆனால் தலைவியின் நாட்டுப் பலாமரங்களின் உச்சியில்தான் பழங்கள் உள்ளன. அவற்றைப் பருவம் பார்த்துப் பிடுங்க வேண்டும் அல்லது அவை விழுந்து பாழாகிவிடும் - என்ற இயற்கை நிலையைக் கூறுவதன் மூலம் 'உரிய காலத்திலே விரைந்து வந்து திருமணத்தை வைத்துக் கொள்' எனத் தோழி தலைவனுக்கு அறிவுரை கூறும் முறையை நோக்கலாம். இவ்வாறே புலவர்கள் தாம் அகத்திணைச் செய்யுட்களைப் பார்க்கும்போது உவமை உள்ளுறை உவமம் முதலான இலக்கிய அணி களைக் கையாண்டு பாடியிருக்கும் பாங்கு படித்துச் சுவைக் கத்தக்கனவாகும்.

காதல் தலைவர்கள் பாடல்களில் அவ்வந்நிலத்து மக்களின் நிலப்பெயர், குலப் பெயர் என்பவற்றால் குறிப் பிடப்பட்டனர். உதாரணமாக கானவர், வெற்பன், சிலம்பன், இடையர், ஆயர், வேட்டுவர், பரதர், நுழையர், மள்ளர், எயினர் முதலான பெயர்களால் ஆண்கள் பாடப் பட்டனர்.

குறத்தி, கொடிச்சி, எயிற்றியர், மறத்தியர், இடைச்சி, உழத்தியர், பரத்தியர், நுழைச்சியர் முதலான பெயர்களால் தலைவியர் குறிப்பிடப்பட்டனர்.

காதல் வாழ்க்கையில் ஒரு பக்கக் காதல், தகாத காதல் என்பன இடம்பெறுதல் இயல்பே. சமூகத்தில் அவற்றை அவதானித்த புலவர்கள் அவ்வொழுக்கம் உடையோரை நெறிப்படுத்தும் வகையில் அவ்வொழுக்கங்களைக் கைக்கிளை என்றும் பெருந்திணை என்றும் குறிப்பிட்டுப் பாடல்களைப் பாடி, அவர்களது ஒழுக்கங்களைச் சமூகத்தில் இனங் காட்டியுள்ளனர். அவற்றை எல்லாம் அவதானித்த தொல்காப்பியர் அகத்திணைக் கோட்பாட்டில் அவ்வொழுக்கங்கள் பற்றியும் குறிப்பிடலானார்.

(தொடரும்....)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானம் ஓட்டும் நாய்கள்!



நாய்களை வைத்து விமானம் ஓட்டும் முயற்சி பிரிட்டனில் நடைபெற்று வருகிறது. புதிய தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை நாய்கள் கார் ஓட்டியுள்ளன, காவல் துறைக்குத் துப்பு துலக்கும் பணிகளைச் செய்து வருகின்றன. அதனால் நாய்களால் விமானத்தையும் ஓட்ட முடியும் என்கிறார் நிகழ்ச்சியை வழங்க இருக்கும் ஜாமி தீக்ஸ்டன்.

1 லட்சம் நாய்களில் இருந்து 12 நாய்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்த நாய்களுக்கு 10 வாரங்கள் பயிற்சியளிக்கப்பட இருக்கின்றன. இந்தப் பயிற்சி காலத்தில் நாய்களின் இயல்பு, புத்திசாலித்தனம், பொறுமை, கற்றுக்கொள்ளும் ஆர்வம், நினைவுத் திறன், தகவல் பரிமாற்றம் போன்றவற்றைக் கண்காணிக்க நிபுணர்கள் காத்திருக்கிறார்கள். இதில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு நாய், விமானம் ஓட்டும் பயிற்சிக்கு அனுப்பப்பட இருக்கிறது. நாய்களின் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தும் இந்த நிகழ்ச்சியின் இறுதிப் பகுதியில் சிங்கிள் இன்ஜின் விமானத்தை ஒரு நாய் ஓட்டிச் செல்வதைக் காட்டப் போகிறார்கள்.

நிச்சயமாக ஒரு புத்திசாலி நாயால் விமானத்தை ஓட்ட முடியும் என்கிறார்கள் இந்த நிகழ்ச்சியின் தயாரிப்பாளர்கள். ஆனால் நாய்கள் உளவியல் பேராசிரியர் ஸ்டான்லி கோரென், “3 வயது மனிதக் குழந்தையை விமானம் ஓட்ட அனுமதிப்போமா? 3 வயதுக்குள்தான் இருக்கின்றன இந்த நாய்கள். நாய்கள் புத்திசாலித்தனமானவைதான். அதற்காக மனிதர்கள் நினைப்பதை எல்லாம் நாய்கள் செய்ய வேண்டிய அவசியமில்லை” என்று கடுமையாக எதிர்க்கிறார். ஆக்ஸ்போர்ட் சயின்டிபிக் ஃபிலிம்ஸின் க்ரியேட்டிவ் டைரக்டர், “பாதுகாப்பாகவும் துன்புறுத்தாமலும் பயிற்சியளிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அதி புத்திசாலி நாயால் விமானத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்” என்கிறார்.

**உலகின் முதல் நாய் விமானி என்ற பட்டம் எந்த நாய்க்குக் கிடைக்கப் போகுதோ...**

ஜார்ஜியாவில் இருக்கும் ஒரு மொபைல் போன் கடையில், ஐபோன்களை அதிக அளவில் விற்பனை செய்வதற்கு ஒரு விநோத வழியைக் கையாள்கிறார்கள். ஒவ்வொரு ஐபோனும் மத குருவால் ஆசிர்வதிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. “ஆதாம், ஏவாள் சாத்தானின் ஆப்பிளைச் சாப்பிட்டதால், இங்குள்ள மக்கள் ஆப்பிள் ஐபோன்களைச் சாத்தான்களாக நினைக்கிறார்கள். அதனால் விற்பனை மிக மோசமாக இருந்தது. மத குருவால் ஆசிர்வதிக்கப்பட்ட ஆப்பிள் ஐபோன்கள் வாங்கினால் எந்தத் தீய சக்தியும் அண்டாது என்பதைச் சொல்லி விற்பனை செய்து வருகிறோம். அதனால் ஒவ்வொரு போனையும் குரு மந்திரம் சொல்லி, ஆசிர்வதித்து தருகிறார். இப்பொழுது விற்பனை சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கிறது” என்கிறார் கடையின் மேனேஜர் ஜார்ஜி மச்சவாரியானி. இந்த விஷயம் வெளியே வந்து, ஏகப்பட்ட விமர்சனங்களைச் சந்தித்தது. ஒவ்வொரு ஐபோனையும் ஆசிர்வதிக்கவில்லை, கடையையும் கடையின் ஊழியர்களையும்தான் குரு ஆசிர்வதித்தார் என்று இப்போது சொல்லிவிட்டார்கள். வியாபாரம் ஆகணும்னா என்ன வேணும்னாலும் செய்வாங்க போலிருக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள்!

அன்புடன், அகணி சுரேஸ்

பாகம் 7

அண்மைக் காலத்தில் அணிந்து கொள்ளக் கூடிய வியர்வை உணரிகள் (Wearable Sweating Sensors) பற்றிய ஆய்வுத் தகவல்கள் வெளியாகியிருந்தன. மனிதர்களின் வியர்வையைப் பயன்படுத்தி அவர்களின் உடல்நலம் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ள முடியும் என்ற விடயத்தை இந்தத் தகவல்கள் குறிப்பிட்டிருந்தன. இந்த இதழில் இவ்விடயம் பற்றி அறிந்து கொள்வது பொருத்தமானதாக இருக்கும் என நம்புகின்றேன். இரத்தப் பரிசோதனை மூலம் உடல் நலம் பற்றிய விடயங்களை அறிந்து கொள்வதைப் போன்று எதிர்காலத்தில் ஒருவரின் வியர்வை மூலம் உடல் நலம் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு வியர்வை உணரிகள் உதவும் என்று நம்பப்படுகின்றது. அணிந்து கொள்ளக் கூடிய வியர்வை உணரிகள் ஒருவரின் வியர்வையை ஆராய்ந்து அவரின் உடலில் உள்ள நோய்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவக் கூடியவையாக உள்ளன. வியர்வையில் நிறைந்தளவு இரசாயனத் தகவல்கள் உள்ளதாகவும் இத்தகவல்கள் மூலம் மனித உடலுள் நடக்கும் விடயங்களை வைத்தியர்கள் அறிந்து கொள்ளலாம் என்றும் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

கலிபோனியாப் பல்கலைக்கழகம், பேர்க்லி இனைச் சார்ந்த பொறியியலாளரும், ஆய்வாளரும் ஆகிய அலி யாவி (Ali Javey) வியர்வையில் உள்ள தகவல்களை அணிந்து கொள்ளக்கூடிய வியர்வை உணரிகள் மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று கூறியுள்ளார். அலி யாவி கலிபோனியாப் பல்கலைக்கழகத்தில் பொறியியல், கணினித் துறைகளின் பேராசிரியராகவும் விளங்குகின்றார். முன்பு வியர்வையைச் சேகரித்து பரிசோதனைக் கூடத்தில் பரிசோதிக்கும் வழமை அரிதாக இருந்தது. ஆனால் இந்தக் கருவி மூலம் மிகவும் இலகுவாக்கப்படக்கூடிய சாத்தியம் உள்ளது. இந்தக் கருவி மூலம் விளையாட்டு வீரர் ஒருவரின் செயற்பாடுகளையும் அவதானிக்க முடிவதோடு அவர்கள் நீர் அருந்த வேண்டிய தேவையையும், அவர்களுக்கு வெப்ப அழுத்தம் ஏற்படும் அபாய அறிகுறியையும் முன்கூட்டி அறிந்து கொள்ள முடியும். இங்கே குறிப்பிடப்பட்ட வியர்வை உணரிக் கருவியில் ஐந்துவிதமான உணரிகள் உள்ளன. இவற்றால் ஒரே நேரத்தில் குளுக்கோஸ், லக்ரேற், சோடியம், பொற்றாசியம், தோலின் வெப்பநிலை போன்றவற்றை அளவீடு செய்யக் கூடியதாக ஐந்து உணரிகள் உள்ளன. வியர்வைப் புணரிகள் நிகழ்நேர (real time) தகவல்களை புளூரூத் (Blue Tooth) மூலம் தொலைபேசிக்கு அனுப்பிவிடக் கூடியவை. தொலைபேசிக்குத் தகவல்களை அனுப்புவதற்கு வேண்டிய அப்ஸ் (Apps) ஒன்றையும் இந்த ஆய்வாளர் குழு உருவாக்கியது. வியர்வை உணரிகள் கையிலும், தலையிலும் அணியத்தக்கவையாக வெவ்வேறு வடிவங்களில் உள்ளன.

ஆய்வாளர்கள் இந்தக் கருவியை உள்ளரங்கில் சைக்கிள் ஓடி உடற்பயிற்சி கொண்டிருந்தும், வெளியில் ஓடிப் பயிற்சி கொண்டிருந்தும் இருந்த 26 பேரில் பரீட்சித்ததாகவும் கூறப்படுகின்றது. இந்தக் கருவியால் உணரப்படும் குளுக்கோஸ் மூலம் இரத்தத்தில் உள்ள சீனித் தன்மையையும், சோடியம், பொற்றாசியம் மூலம் நீர்ப் போக்குத் தன்மையையும் (dehydration), தசைப்பிடிப்புத் தன்மையையும் (muscle cramp), லக் ரேற் மூலம் இரத்த ஓட்டத்தையும், தோலின் வெப்ப நிலை மூலம் உடல் வெப்பத்தையும் ஏனைய பிரச்சினைகளையும் அறிந்து கொள்ள முடியும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளார்கள். இந்தக் கருவியில் உள்ள வெப்பநிலை உணரி இந்தக் கருவியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் வெப்பநிலைக் கேற்ப ஏனைய உணரிகளை சமநிலைப்படுத்தவும் உதவுகின்றது. இந்தக் கருவியின் தொழில்நுட்பம் எதிர்காலத்தில் மேம்படுத்தப்படுவதால் வியர்வையில் காணப்படும் ஏனைய ஆபத்தான பதார்த்தங்களையும் கண்டுகொள்ளும் என்று ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இந்தக் கருவி பற்றிப் பரந்த அளவில் ஆய்வுகள் செய்யப்பட்ட பின்பே வியாபாரப்படுத்தப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

ஆய்வாளர் அலி யாவியின் (Ali Javey) தலைமையிலான வியர்வை உணரிக் கருவியை உருவாக்கும் பணி முதன்மையானதென ஒகியோவில் உள்ள சின்சினாற்றிப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஜேசன் கெக்கன்பெல்ட் (Jason Heikenfeld) கூறியுள்ளார். இந்தக் கருவிக்கு வேண்டிய கணினி வன்பொருட்களையும், மென் பொருட்களையும் சிறிய அளவான கருவிக்குள் செயற்பட வைப்பது அபாரமான விஞ்ஞான வளர்ச்சி என்றும் கருதப்படுகின்றது. நோயாளர்கள் வியர்க்கும் தன்மையில் இந்தக் கருவி தங்கியிருப்பதால் வியர்க்காத நேரத்தில் இந்தக் கருவி பயனற்று விடுகின்றது. இந்த வியர்வை உணரிக் கருவியை உருவாக்கும் முயற்சியில் அலி யாவி அவர்களுடன் வெய் கெயோ (Wei Gao), சாம் எமாமினியெட் (Sam Emaminejad) ஆகிய ஆய்வாளர்களும் ஈடுபட்டிருந்தார்கள். மேற்குறிப்பிட்ட ஆய்வாளர்கள் வியர்வை மூலம் எவ்வாறான நோய்களைக் கண்டு கொள்ள முடியும் என்றும் ஆய்வு செய்து வருகின்றார்கள். இந்தக் கருவியின் பயன்பாட்டு நன்மையை உணர்ந்து பல் வேறு ஆய்வுச் சஞ்சிகைகளில் இந்தக் கருவி பற்றிய தகவல்கள் அண்மைக்காலத்தில் வெளி வந்துள்ளன.

தளிர் வாசகர்களே! இந்த இதழில் வியர்வை உணரிகள் பற்றி ஆராய்ந்தோம். இந்தப் வியர்வை உணரிகள் பயன்பாடு மிகவும் முக்கியமான விடயமாக உள்ளது. இந்தப் வியர்வை உணரியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு இந்த இதழில் இடம்பெறும் 'மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள்' தொடர்கட்டுரையின் பகுதி 7 இல் ஆராய்ந்து கொண்டோம். இவ்வாறான விடயங்களைத் தெரிந்து கொள்வதோடு, நிறைந்த பயன்பாடு தரும் ஆரோக்கியமான முயற்சிகள் மூலம் புதிய புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாகவேண்டும். நமது எதிர்காலச் சந்ததியினரும் புதிய கண்டுபிடிப்புக்களில் அதிகமான நாட்டத்தைச் செலுத்த வேண்டும் என்ற விருப்போடும் இந்த இதழிற்கான இந்தக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன். இந்தக் கட்டுரைத் தொடர் பற்றிய உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மீண்டும் சில செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

நன்றி. வணக்கம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்க கால வரலாறு

வித்துவான். க. ஞானரெத்தினம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

### தொகை நூல்கள் எட்டு:

1. அகநானூறு 2. புறநானூறு 3. நற்றிணை நானூறு 4. ஐங்குறுநூறு 5. பதிற்றுப்பத்து 6. பரிபாடல் 7. குறுந்தொகை 8. கலித்தொகை என்பன. பத்துப்பாட்டு, நெடும்பாட்டு பத்தினைக் கொண்டது. 1. திருமுருகாற்றுப்படை 2. பொருநராற்றுப்படை 3. சிறுபாணாற்றுப்படை 4. பெரும்பாணாற்றுப்படை 5. முல்லைப்பாட்டு 6. மதுரைக் காஞ்சி 7. நெடுநல்வாடை 8. குறிஞ்சிப்பாட்டு 9. பட்டினப்பாலை 10. மலைபடுகடாம்.

இவற்றோடு சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் முதலியவற்றையும் சங்க காலத்தன என்பர் ஒரு சாரார். இவை சங்க மருவிய காலத்தன என்பர் மற்றொரு சாரார். ஆராய்ச்சியாளர் எவ்வாறு கூறினும் இவற்றுள் (பத்துப் பாட்டு, எட்டுத்தொகை) உள்ள செய்யுட்களிற் பெரும்பாலா னவை சங்க காலத்தவை என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். தொகை நூல்கள் எட்டனுள் புறநானூறு, பதிற்றுப்பத்து பரிபாடல் என்னும் மூன்றும் புறத்தினை கூறுவன. ஏனைய ஐந்தும் அகத்தினை கூறுவன. பத்துப்பாட்டிலுள்ள குறிஞ்சிப் பாட்டு, முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை என் பன மூன்றும் அகத்திணைப் பாட்டுக்கள் ஏனைய ஏழும் புறத்திணைப் பாட்டுக்கள்.




### சங்கச் செய்யுளின் பொருள் மரபு

அக்காலத்து மக்களின் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டது சங்கப் புலவர்கள் தம் செய்யுட்களுக்கு மக்கள் வாழ்க்கையே பொருளாகக் கொண்டு அமைத்தபோது அதனை அகத்திணை, புறத்திணை என இரண்டாக வகுத்து அமைத்தனர். அகத்திணை என்பது காதலொழுக்கம். அது புணர்தல், பிரிதல் போன்ற பல பிரிவுகளுடையது.

காதலனுக்கும், காதலிக்குமிடையேயுள்ள காதலொழுக்கத்தைப் புலவன் கூறும் போது ஒருவர் பெயரைச் சுட்டியும், சுட்டாமலும் கூறுவதுண்டு. பாக்களுள் ஒருவர் பெயரைச் சுட்டிக் காட்டும் பாக்களே அகத்திணைக்குரியவை. சுட்டியொருவர் பெயர் கொள்ளும் காதற் பாக்களையும் போர் முதலிய பிற குமுக்கங்களைக் கூறும் பாக்களையும் புறத்திணையும் அடக்கினர்.

அறம், பொருள், இன்பம் என்றும் மூன்றனுன் இன்பம் அகத்திணையின் பாற்பட ஏனைய புறத்திணையின் பாற்படும். சங்க காலப் புறத்தினைச் செய்யுட்களுட் பலவகைப்புறவொழுக்கங்கள் கூறப்பட்டுள்ளவெனினும் அவற்றுள் போரும் வீரமும் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. செய்யுள் வழக்கில் மட்டுமின்றி உலக வழக்கிலும் சங்க கால மக்கள் தூய காதலொழுக்கத்தையும், அறத்தினின்றும் வழுவாத வீர வாழ்க்கையையும் சிறப் பாகப் போற்றி வந்தனர் என்பது அக்கால நூல்கள் வாயி லாக அறியக் கிடைக்கின்றது. காதலும், போரும் சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலச் செய்யுளிற் போல வேறு எக்காலச் செய்யுளிலும் பாராட்டப்படவில்லை.

### அக்கால மக்கள் வாழ்க்கை முறை

உலக வழக்கினை ஆதாரமாகக் கொண்டடெழுந்த சங்க காலச் செய்யுள் வழக்கினை ஒருவாறு அறிந்து கொள்வதற்கு அக்கால மக்கள் வாழ்க்கை முறையினை அறிதல் வேண்டும். மலைப்பிரதேசம், காட்டுப் பிரதேசம், நீர் வளம், நிலவளம் நிறைந்த வயற்பிரதேசம் வரண்ட நிலப் பிரதேசம், கடற்கரைப்பிரதேசம் என ஐந்து வகையான இயற்கைப் பிரிவுகளையுடையது தமிழ்நாடு.

அவற்றை முறையே குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருதம், பாலை, நெய்தல் என்னும் தாவரங்கள் முறையே நிலங்களில் சிறப்பாக காணப்பட்டமையின் அவற்றின் பெயரால் அந்நிலங்களும் பெயர் பெற்றன.

பண்டைக்காலத்தில் மக்கள் குழுவினைக் குறித்து நின்ற திணையென்னும் சொல் நாளடைவில் மக்கள் குழுக்கத்தைக் குறிப்பதாயிற்று. சுதகுல குறிஞ்சித்திணை, முல்லைத்திணை முதலிய சொற்றொடர்கள் செய்யுள் வழக்கில் அவ்வந் நிலங்களுக்குரிய சிறப்புடைக் காதலொழுக்கங்களைக் குறிக்களாயின. அவ்வந் நிலங்களுக்குரிய போரொழுக்கங்கள் மக்கள் போருக்குச் செல்லும் பொழுது சூடிச் சென்ற வெட்சி. வஞ்சி முதலிய பூக்களாற் பெயர் பெறலாயின.

தொடரும்

# வரவை மிஞ்சி செலவு செய்தால் 'ஷாக்!'

வங்கி வரவு, செலவுக் கணக்கை பொறுத்தவரை, 'அறியாமையே ஆனந்தம்' என்று இருப்போர் பல கோடி பேர். இன்று, மொபைல் வங்கிக் கணக்குகள் வந்த பிறகும் கூட பலரால், வரவு, செலவில் கறாராக இருக்க முடிவதில்லை. இதை மாற்ற வந்திருக்கிறது, 'இன்டராக்ட் ஐ.ஓ.டி.,' என்ற ஒரு சேவை. வரவை மிஞ்சி செலவு செய்வதை தவிர்க்க விரும்புவோருக்கு இது கச்சித மான சேவை. எப்படி? இன்டராக்ட் ஐ.ஓ.டி.,யை பயன் படுத்துபவர் அளவை மீறி செலவு செய்யும்போது, லேசான தண்டனை கிடைக்கும்! இன்டராக்ட் ஐ.ஓ.டி.,யின் சேவையை பெறுபவரால், அதை மொபைல் போன், பல கைக் கணினி, ஸ்மார்ட் வாட்ச் போன்ற சாதனங்களுடன் இணைத்துக் கொள்ள முடியும்.

ஒருவர், முதலில் தன் இணைய வங்கிக் கணக்கை இன்டராக்ட் ஐ.ஓ.டி., சேவையுடன் இணைக்க வேண்டும். பின், இன்டராக்டை எந்த சாதனத்துடன் இணைக்க விரும்புகிறாரோ, அதனுடன் இணைக்க வேண்டும். இப் போது, அவராக நிச்சயித்த தொகைக்கு மேல் செலவு செய்ய முயற்சிக்கும்போது, அந்த சாதனம் மூலம் அவ ருக்கு தண்டனை கிடைக்கும். 'பாவ்லாக் வியரபிள்' என்ற அணி, கணினி சாதனத்தை இன்டராக்ட் கணக்குடன்




இணைத்தால், அந்த சாதனம் மூலம் அவருக்கு மெல் லிய மின் அதிர்ச்சி கிடைக்கும்; உடனே அவரை, தன் செலவை கட்டுப்படுத்த அது தூண்டும். வீட்டில் வெப் பத்தை கட்டுப்படுத்தும், 'நெஸ்ட் தெர்மோஸ்டாட்' என்ற சாதனத்துடன் இன்டராக்டை இணைத்தால், அவர் செலவு அளவை மீறும்போது, அந்த சாதனம் அணைந்துவிடும்! இப்படியாக, பயன்படுத்துபவர் வருமானத்தை மிஞ்சா மல் காப்பாற்ற முடியும் என்று நம்புகிறது, இன்டராக்ட் ஐ.ஓ.டி.!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலையில் இத்தனை நன்மைகளா?

கறிவேப்பிலை இருவகைப்படும். "நாட்டுக் கறிவேப்பிலை மற்றும் காட்டுக் கறிவேப்பிலை. நாட்டுக் கறிவேப்பிலை உணவிற்கும் காட்டுக் கறிவேப்பிலை மருந்துக்கும் பயன்படுகின்றன. நாட்டுக் கறிவேப்பிலையில் இனிப்பும், துவர்ப்பும், நறுமணமும் ஒருங்கே அமைந்திருக்கும். காட்டுக் கறிவேப்பிலை கசக்கும்.

கறிவேப்பிலையில் சுண்ணாம்பு, பாஸ்பரஸ், கார்போஹைட்ரேட், புரதம், இரும்பு, தாது சத்துக்கள் உள்ளன. மேலும் வைட்டமின் ஏ, பி, சி உயிர்ச்சத்துக்கள் நிறைய இருக்கின்றன. சுண்ணாம்புச் சத்தும் நிறைய இருக்கிறது. இந்தச் சத்துக்கள் உடல் பலத்தை அளிக்கவும் எலும்புகளுக்கு சக்தியூட்டவும் பயன்படுகிறது.

வாயினருசி வயிற்றுளைச்ச னீடு சுரம்
பாயுகின்ற பித்தமுமென் பண்ணுங்காண் - தூய
மருவேறு காந்தளங்கை மாதே உலகிற்
கருவேப்பிலை யருந்திக் காண்.

என்ற பாடலால் கறிவேப்பிலையை உண்டு வர வாயில் சுவையின்மை, பழஞ்சுரம், சீதக்கழிச்சலால் வரும் வயிற்றுளைச்சல், பித்தம், பைத்தியம் ஆகியவை குணமாகும் என்பது தெரிய வருகிறது. கறிவேப்பிலை மருந்துக்கும் பயன்படுகிறது. ஔடத குணமுள்ள இந்தக் கறிவேப்பிலை பல வியாதிகளையும் தீர்க்கிறது. கறிவேப்பிலை உடலுக்கு பலம் உண்டாக்கக்கூடியது. பசியைத் தூண்டும் சக்தி வாய்ந்தது.

பித்தத்தைத் தணித்து உடல் சூட்டை ஆற்றும். அதோடு கறிவேப்பிலைக் கீரை மனதுக்கு உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. குமட்டல், சீதபேதியால் உண்டான வயிற்று உளைச்சல், நாட்பட்ட காய்ச்சல் ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். பித்த மிகுதியால் உண்டாகும் பைத்தியத்தைக் குணப்படுத்த கறிவேப்பிலை உதவுகின்றது.

வாந்தி, நாக்கு ருசியற்றுப் போதல், வயிற்றோட்டம், சாப்பிட்டவுடன் மலங்கழிக்கும் உணர்வு, பசியற்ற நிலை, சளி ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். கண்கள் ஒளி பெறவும், முடி நரைக்காமலிருக்கவும், மேனி எழில் பெறவும் கறிவேப்பிலை உதவுகின்றது.



கறிவேப்பிலைச் சாறு இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களைப் பலப்படுத்துகிறது. பத்திய உணவு சாப்பிடுபவர்கள் கறிவேப்பிலைத் துவையலை சேர்த்துக்கொள்வது நல்லது. கண் ஒளி குன்றாமல், நரை திரை இல்லாமல் என்றும் இளமைப் பொலிவுடன் வாழ கறிவேப்பிலை அருமருந்தாக உதவுகிறது.

**அரோசிகம் எடுபட:** எந்த பதார்த்தத்தைச் சாப்பிட்டாலும் அது மண் போல ருசியறிய முடியாமலிருப்பதையே அரோசிகம் என்பர். அதாவது நாவில் ருசியறியும் உணர்ச்சி இழைகள் மறத்துப்போவதே இதற்குக் காரணம். இதைப் போக்க கறிவேப்பிலைத் துவையல் நன்கு பயன்படும்.

கறிவேப்பிலையை நன்கு அரைத்து அதனுடன் முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்து தலைக்குத் தேய்த்து குளித்தால் முடி நன்றாக வளரும்.

தேவையான அளவு கறிவேப்பிலையை எடுத்து, அதைச் சுத்தம் செய்து, அம்மியில் வைத்து தேவையான அளவு இஞ்சி, சீரகம், புளி, பச்சை மிளகாய், உப்பு இவைகளை வைத்து மை போல துவையல் அரைத்து, சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் நாவில் ருசியறியும் தன்மை ஏற்படும். அடிக்கடி இந்த துவையலை சாதத்துடன் ருசித்துச் சாப்பிட்டு வந்தால் எந்த நோயும் வராது. உடல் உறுதி பெறும்.

**பைத்தியம் தெளிய:** புத்திசுவாதீனமில்லாமல் இருப்பவர்களின் புத்தியை ஸ்திரப்படுத்தி ஒரு நிலையில் நிறுத்தி, அறிவில் தெளிவை உண்டாக்க கறிவேப்பிலை நன்கு பயன்படும். சுத்தமாக ஆய்ந்து எடுத்த கறிவேப்பிலையை அம்மியில் மை போல அரைத்து, அதை ஒரு பாத்திரத்தில் பாட்டு, அதில் ஒரு எலுமிச்சம்பழத்தின் சாற்றையும் விட்டுக் கலக்கி, தினசரி காலையிலும் மாலையிலும் சாதத்தில் போட்டுக் கலந்து சாப்பிடக் கொடுத்து விட வேண்டும்.

இந்த விதமாக புத்தி சுவாதீனம் அடையும் வரை கொடுத்து வர வேண்டும். கறிவேப்பிலையில் நிறைய உயிர்ச்சத்தும் சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால், பதார்த்தங்களில் மிதக்கும் கறிவேப்பிலையைத் தூக்கி எறிந்துவிடக்கூடாது. ஆகாரத்துடன் அதையும் சேர்த்து மென்று விழுங்கிவிட வேண்டும்.

இரண்டு தினங்களுக்கு ஒரு முறையாவது கறிவேப்பிலைத் துவையலை சாப்பாட்டுடன் சேர்த்து வந்தால் உடல் நலம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED

# NEWEST OFFICE
## in Scarborough

**எமது நிறுவனத்தின் திறப்பு விழாவில் அழைப்பை ஏற்று வருகை தந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.**



நிறுவனத்தை நாடாவை வெட்டி
**Toronto City Councillor Michael Thompson** மற்றும்
**Markham City Councillor Logan Kanapathy**
ஆகியோர் திறந்து வைப்பதையும் சூழவும்
நண்பர்கள் மற்றும் நிறுவனத்தின் வீடு அதிபர்கள் நிற்பதையும்,



நிறுவன அதிபர்கள் திருவாளர்கள் Rathees Paramalingam மற்றும் Sri Nadarajasundaram ஆகியோர் Remax Ace நிறுவனத்தின் குதூண்களாக விளங்கவுள்ள வீடு விற்பனை முகவர்கள் மகிழ்ச்சியுடன் நிற்பதையும் காணலாம்.



**Rathees Paramalingam**
Broker of Record
**416-777-6000**

**Sri Nadarajasundram**
Manager / Sales Representative
**416-276-6666**



1286 Kennedy Rd, Unit 3, Toronto, ON, M1P 2L5 (Kennedy & Lawrence)

**416-270-1111**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணிதமேதை ஸ்ரீநிவாச ராமானுஜம்

ராமானுஜம் கணிதத்திற்காக எத்தனையோ செய்திருக்கிறார். அவரது மேதாவிலாஸத்திற்கு அவர் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சிறு நிகழ்ச்சி. அவர் இங்கிலாந்தில் நோயுற்று ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார். அவரை பார்க்க, ராமானுஜத்தை இங்கிலாந்திற்கு அழைத்து வந்த இன்னொரு கணித மேதையான ஹார்டி (கம்பருக்கு சடையப்ப வள்ளல் போல் ராமனுஜத்திற்கு இவர்) வருகிறார்.

ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளியை பார்க்க போனால் நாம் என்ன செய்வோம்? நலம் விசாரிப்போம். ஹார்டி என்ன செய்தார் தெரியுமா, ராமானுஜத்தை பார்த்த உடனேயே, "நான் ஒரு டாக்சியில் வந்தேன் அந்த டாக்சியின் நம்பர் 1729, எனக்கு ஏனோ அந்த நம்பர் பிடிக்கவில்லை" என்று கூறுகிறார்! என்ன ஒரு அற்புதமான நலம் விசாரிப்பு! அதற்கு நாமாக இருந்தால், "போயா நீயும் உன் டாக்சி நம்பரும். இங்க ஊசிபோட்டு கையெல்லாம் வீங்கி கிடக்கு" என்கிற ரீதியில் ஏதாவது சொல்வோம். ஆனால் ராமானுஜம் உடனே, உடனே என்றால் உடனே- "ஏன் ஹார்டி அப்படி சொல்கிறீர்கள்? அது ஒரு அற்புதமான எண். It is that smallest number which can be presented in two different ways as addition of two cubes : (10 to-the-power 3 + 9 to-the-power 3) and ( 12 to-the-power 3 + 1 to-the-power 3 )." என்று கூறினாராம்.

ராமானுஜம் 33 வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்தார், அவர் கணிதத்திற்கு செய்திருப்பது ஏராளம். theory of numbers, theory of division (partition) and the theory of continuous fractions, இன்னும் பல சூத்திரங்களை நமக்கு அளித்துள்ளார். அவர் விட்டு சென்ற குறிப்புகளை இன்றும் ஆராய்ச்சி செய்கிறார்களாம்.



Sutton®

Sutton Group - Admiral Realty Inc., Brokerage

LEONARD SELVARATNAM

Sales Representative

416-803-0950



" A NAME FRIENDS RECOMMEND... A TRADITION OF SOUND ADVICE"

"LETS TALK ABOUT YOUR NEXT MOVE OVER A CUP OF COFFEE"

Sell | Buy | Rent | Investment

VIP New Condo | Construction | Commercial

Office: 416-739-7200

Fax: 416-739-9367

E-mail: leonardsel@gmail.com

Web: www.lensel.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க காலத்துக் கூத்துக்கலை: சமூக நோக்கு - III

இலக்கியப் பிரியன்



## பொம்மைக் கூத்து:

அகக்கூத்து, புறக்கூத்து, துணங்கைக்கூத்து, வள்ளிக் கூத்து, குரவைக்கூத்து என்பன பற்றி முன்னர் கூறப் பட்டது போன்றே பொம்மைக் கூத்துப் பற்றியும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பொம்மைகளைப் பயன் படுத்தி இக்கூத்தை நிகழ்த்தியிருக்கின்றனர்.

சோழன் நலங்கிள்ளி என்ற அரசன் போரில் வெற்றி பெற்றதைக் கொண்டாடும் வகையில் நகரத்திலும் பாசறை யிலும் விருந்தும் விழாக்களும் நடைபெறுள்ளன. அப்போது நகர வீதிகளிலே பல்வேறு வகைக் கூத்துக் கள் ஆடப்பட்டன. அவற்றுள் அல்லியக் கூத்தும் ஆடப் பட்டமை பற்றிக் கோவூர்க்கிழார் என்ற புலவர் பாடி பால் ஒன்று புறநானூற்றிலே (33) இடம்பெறுகிறது. கண்ணன், கஞ்சன் விடுத்த யானையின் கொம்மை ஒடிப்பதற்காக அல்லியம் என்னும் கூத்து ஆடப்பட்டதாகச் சிலப்பதிகார உரை கூறுகிறது. அல்லியப்பாவை என்ற கூத்தை ஆணும் பெண்ணும் எனப் பாவைகளைக் கோலம் செய்து நடத்தும் பாவைக் கூத்தாகும். பாவைக் கூத்தில் அவிநயம் இடம் பெறுவதில்லை.

## வெறியாட்டு:

தமிழருக்கே உரிய முருக வழிபாட்டுடன் தொடர்புடைய தாக வெறியாட்டுச் சடங்கு இடம்பெற்றுள்ளது.

காலப்போக்கில் ஆரிய வழிபாட்டு முறைகளும் முருகன் + சுப்பியமணியர் கலப்பும் வெறியாட்டுச் சடங்கை முருகனஷத வழிபாட்டிலிருந்து அகற்றிவிட்டது.

காதல் வயப்பட்ட பெண்ணை மையமாகக் கொண்டு ஆடப்படும் சமயச் சடங்காகவே 'வெறியாட்டுக்கூத்து' (வெறியாடல்) கருதப்பட்டது. அதில்; வேலன் தன்னில் முருகன் வந்து தோன்றுவான் என்ற நம்பிக்கையுடன் ஆடி, மக்களுக்கு நல்வாக்குக் கூறுவோனாகச் செயற்பட்டான். பெண்ணின் காதல்நோய் தீர்க்கும் வகையில் வேலன் (பூசாரி) முருகனாகத் தன்னைப் பாவனை செய்து, வேல் கைப்பிடித்து ஆடி, நோய்க்கு முருகனே காரணம் எனக் கூறுவான். அவன் வேல் பிடித்து ஆடியதால் வேலன் எனப்பட்டான்.



முதுபெண்டிரின் ஊகத்தின் வழி காதல் நோய்கொண்ட பெண்ணிற்கு வெறியாட்டு நிகழ்த்தப்பட்டமையை அகநானூறு (98), நற்றிணை (288) முதலியன சான்றுபடுத்துகின்றன. வீட்டின் முற்றத்திலும் ஆற்றுமணற் பரப்பிலும் வெறியாட்டுக் களம் அமைப்பர். வேலன் கடம்ப மாலை அணிந்து ஆடும்போது, காதல் நோய்கொண்ட பெண் தலைவிரி கோலமாக இருப்பாள் (புறம்.366. குறு. 214, 263. 248. நற். 34. 51,268. 322, அகம்..138, 382). வெறியாட்டயரும் வேலன் தலையிற் குறிஞ்சிப்பூச் சூடிக்கொள்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனுக்குக் கடம்ப மலர் சூட்டியிருப்பர். வெறியாட்டில் பெண்களும் சேர்ந்து ஆடினர். அவர்களை வள்ளி என்றும் ஆடுமகள் என்றும் வழங்கினர் (குறு.366). வேலன் வெறியாடும்போது மகளிர் கைகோர்த்து குரவைக் கூத்து ஆடினர் எனவும்' அறியப்படுகிறது. தொல்காப்பியர்,:

'வெறியறி சிறப்பின் வெள;வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளும்'..
(தொல். புறத்திணை: 5:1-2).



என்ற நூற்பாவிலே வெறிக் கூத்து பற்றிக் குறிப்பிடுவர். வெறிஆடுவதிலும், வெறியாடிக் கட்டுச் சொல்வதிலும் வேலன் சிறந்து விளங்கி னான் என்பதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அத்துடன் 'காந்தள்' என்பது, ஆண்மகன் ஒருத்தன் தன்மாட்டுக் காதல்கொண்டு மடல்ஏறிய செய்தி அறிந்த பெண் அதற்கு ஆற்றாளாய் வெறிகொண்டு ஆடுதல் ஆகும் எனவும், கரந்தைப் போரிலே வெற்றி பெறுவதற்காக 'காந்தள்' மலர் அணிந்து மகளிர் ஆடும் வெறிக் கூத்தைக் 'காந்தள்' எனவும் இளம்பூரணர் உரை விளக்கம் கூறுவர்.

முருக வழிபாட்டிலே வெறியாட்டு நடனம் முக்கிய இடம்பெற்றிருந்தது. அதிலே வேலனோடு சேர்ந்து பெண்களும் கைகோர்த்து சேர்ந்து ஆடினர். வெறியாடும் களத்தில் வெண்மணல் பரப்பியிருப்பர். அத்துடன் நெற்பொரிளும் அங்கு தூவப்பட்டிருந்தது என்பதை 'வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும் செந்நெல் வான்பொரி சிதறி..' எனக் குறுந்தொகை (:53:3-4) விளக்குகிறது. நெய்தல் நில மீனவ மக்களும் கடற்கரை மணலில் வெறியாட்டு நிகழ்த்தித் தெய்வ வழிபாடு மேற்கொண்டமையை பட்டினப்பாலை (56-93) விளக்குவ தாகப் பாடுகிறது. சங்க காலத்தில் முருக வழிபாடு மிக வும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்ததென்னது சங்க இலக்கியவாயிலாக அறியப்படுகிறது. முருகன் கோயிலும் சங்க காலத்தில் இருந்தமையை, 'அணங் குடை முருகன் கோட்டம்..' எனப் புறநானூறு (299:6) குறிப்பிடுகிறது. முருக வழிபாட்டுடன் காதல் முதன்மை படுத்தப்பட்டுள்ளது. வேலன் வெறியாட்டு நடத்தும்போது காதல் மயக்கம் கொண்ட மகளிரும் சேர்ந்து வெறியாட்டுக்கூத்து ஆடி, வழிபடும்முறை அக்காலத்தில் வழக்கில் இருந்தமை சான்றுகளுடன் காணப்படுகிறது. பல்வேறு இசைக்கருவிகளின் ஒலியுடன் சேர்ந்து ஆடலும் பாடலும் முருக வழிபாட்டுடன் இணைந்திருந்தமையைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

வெறியாட்டு நடனத்தில் மிருக பலியிடும் வழக்கமும் இடம்பெற்றிருக்கிறது. ஆட்டுக் குட்டியின் கழுத்தை அறுத்து அதன் குருதியை தினை அரிசியில் பினைந்து, மடையாகப் பரப்பி வைப்பர். குருதி கலந்த தினையரி சியை காம நோய்கொண்ட பெண்ணின் நெற்றியிலே தடவி, மகளிர் கைகோர்த்து ஆடுவர் என மதுரைக்காஞ்சி (வரி:613-615) கூறுகின்றது. அவ்வருணனை அக்கால மக்களின் சமய நம்பிக்கையை அறியத் தருகின்றது. பண்டைத் தமிழரின் வெறியாட்டு நடனத்தின் தொடர்ச்சி இன்றும் தமிழகத்திலும் ஈழத்திலும் பேயோட்டுச் சடங்காகவும், கட்டுக்கூறும் தெய்வ வழிபாட்டுச் சடங்காகவும் இடம்பெற்றுவருதல் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமக்கென்றொரு வட்டம் புது உலகம் படைக்கும்!

**சிந்தனைப்பூக்கள் எஸ்.பத்மநாதன்**

*"தனிப்பட்ட உறவு முறைகள் வளம் மிகுந்த மண்ணைப் போல் இருப்பதால், அதிலிருந்து தான் உண்மையான வாழ்க்கையின் எல்லாவித முன்னேற்றமும், எல்லாவித வெற்றியும், எல்லாவித சாதனைகளும் தொடங்குகின்றன."*

– பென் ஸ்டீன்

இந்த சிந்தனையிலிருந்து ஒருவரது வெற்றிக்கு அவரது தொடர்பு முறைகளே முக்கிய காரணமாகின்றன என்பது புலனாகும். நாம் தெரிந்துள்ள மனிதர்களும், எம்மை தெரிந்துள்ள அவர்களும் தான், எம்முடைய வாழ்க்கையின் வெற்றியை, மகிழ்ச்சியை, சாதனை மட்டத்தை தீர்மானிக்கின்றனர். அடுத்த ஐந்து வருடங்களில் நாம் எவ்வளவு தூரம் மாறிப்போயிருக்கிறோம் என்பது நாம் படிக்கும் புத்தகங்களையும், சந்திக்கும் மனிதர்களையும் பொறுத்தது.

## டாக்டர் டேவிட் மக்லன்ட் என்ற அறிஞர்


ஹாவாட் பல்கலைக் கழகத்தில் இருபத்து ஐந்து வருட காலம் ஆராய்ச்சி செய்த பின்பு வேறு எந்த ஒன்றைக் காட்டிலும் எம்முடைய வெற்றியுடன் அதிக அளவில் தொடர்புடையது நாம் தேர்ந்தெடுத்த "தொடர்புகளுக்கு" தான் என்று முடிவு செய்கிறார். நாம் கூட பலரை அவதானித்தால் அவர்களுள் பெரும்பாலானவர்கள் எதைக் கற்றார்களோ அதைப் பெற்றுக் கொண்டதோடு, அதை வைத்துக் கொண்டு அற்புதமான செயல்களை செய்கிறார்கள் என்பது புலனாகிறது.

தற்செயலாக அவர்கள் நமது வெற்றிகளை தோல்வியாக மாற்றிக் கொண்டார்கள் என்றால் அதற்கு அவர்களது தவறானதொரு தொடர்பே காரணமாகலாம். அவர்கள் பழைய மரபுகளுக்கு திரும்பியிருக்கக் கூடும். இங்குள்ள பிரபல தொழிலதிபர்கள் திவால் (Bankruptcy) நிலைக்கு சென்றமைக்கும், பல பத்திரிகைகள் நின்று போனமைக்கும் கூட இதுவே காரணமாகலாம்.

கோவில்கள் மட்டும் மறைந்து விடாது. தொடர்ந்து உருவாகும் பக்தர்களின் பெருக்கமே காரணமாகும். அது போல கிறிஸ்தவ தேவாலயங்களும் ---------------- எழுகின்றன. இந்த அளவுக்கு அறிவுசார் நிலையங்கள் எழ வாய்ப்பில்லை. பண வருமான எதிர்பார்ப்பே காரணமாகும். விளையாட்டு குழுக்கள், அரசியல் குழுக்கள் ஊர் சங்க குழுக்கள் ஒவ்வொரு தேவைகளுக்கும் எழுகின்றன. இவைகள் கூட முரண்பட்டுக் கொண்டால் மேலும் மேலும் பிரிந்து கொள்கின்றன. இரசாயன கலவைகள் போல் மாறிக் கொண்டிருக்கும் இவைகள் உன்னத சேவைகளை செய்ய முடியாது.

சரியானதொரு தொடர்புக்குழுவில் நாமும் எம்மை அடையாளப்படுத்திக் கொண்டால் நாம் உள்வாங்கி கொள்ளும் செயலின் வழியே, அவர்களுடைய மனப்போக்குகளையும், நடைமுறைகளையும், பேச்சு முறைகளையும், விருப்பத்தின் அளவு மட்டங்களையும் அவர்களுடைய உடை அணியும் முறையைக் கூட உள்வாங்கி கொள்கிறோம். அந்த தொடர்புக் குழு எம்மீது கட்டுப்பாடில்லாத ஒரு தாக்கத்தை, நடையுடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவனைகளை, சிந்தனைகளை உணர்ந்து எம்மை சரி செய்து கொள்ள உதவுகிறது.

எம்முடைய குடும்பத்திற்கு வெளியே நடைபெறும் வெளியுலக மாற்றங்கள் எல்லாமே எமது உள்ளுலக மாற்றங்களிலேயே தொடங்குகின்றன. சில மனிதர்களை விட்டு விலகி சரியானவர்களே அடையாளம் கண்டு எம்மை மாற்ற முடிந்தால் தான் சிறப்பானது. நாமும் மாறுகிறோம். இம் மாற்றத்தை நிகழ்த்தும் இந்த செயல்முறை மிக மிக வேகமாக செயல்பட கூடியது. ஒரு புதிய தொடர்புக்குழுவை நாம் தேர்ந்தெடுக்கும் போது நாம் எம்மை அறியாமலே மாறத்தொடங்குகிறோம்.

எமது உள் உலகத்தின் கண்ணாடியாக எம்முடைய வெளியுலகம் உள்ளது என தொடர்பு விதி கூறுகிறது. 'ஒரு மனிதன் எப்படிச் சிந்திக்கின்றானோ அப்படியே இருக்கிறான்' என பைபிள் கூட கூறுகிறது. எம்முடைய சிந்தனையிலும் உணர்ச்சியிலும் மிகப் பெரிய தாக்கத்தை எப்போதும் ஏற்படுத்தவல்லது நாம் தொடர்பு கொண்டுள்ள பிற மனிதர்கள்தான்.

எம்முடைய சிந்தனையையும், எம்முடைய வாழ்க்கையையும் நாம் உண்மையிலேயே மாற்ற முடிவு செய்தால் எம்முடைய வாழ்வின் ஒவ்வொரு தளத்திலும் நாம் பாராட்டக்கூடியவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டும்.

நாம் யாருடன் மகிழ்ச்சியாக இருக்கிறோமோ, யாரிடமிருந்து கற்றுக்கொள்ளுகின்றோமோ அவர்களுடன் சேர்ந்திருக்க முடிவு செய்ய வேண்டும். எங்கள் குழந்தைகள் எப்படி வளர வேண்டுமென்று நினைக்கிறோமோ அப்படியே அந்த விதமான மனிதர்களுடன் மட்டுமே சேர்ந்து உழைக்கவும், இணைந்திருக்கவும் வேண்டும். எம்முடைய உள்ளார்ந்த வகையிலான உறவுகளுக்குரிய விதத்தில் இந்த விதமான தர நிலைமைகளை நாம் அமைத்துக் கொள்ளும்போது எம்முடைய முழு வாழ்க்கையும் பெரும்பாலும் உடனுக்குடன் வளமுடையதாகத் தொடங்கி விடும்.

நேரடியாகவும், மறைமுகமாகவும் நாம் தெரிந்து வைத்துள்ள மனிதர்களின் எண்ணிக்கையாலேயே எம்முடைய ஒருங்கிணைந்த பணி வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. நாம் அவர்கள் மீது தாக்கத்தினை ஏற்படுத்துவதுபோல அவர்களும் எம்மீது தாக்கத்தை ஏற்படுத்துவார்கள்.

சமூகத்தில் வெற்றி பெற்ற மனிதர்கள், மிகப் பெரிய எண்ணிக்கையில் உள்ள பிற வகையான வெற்றி பெற்ற மனிதர்களை தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். திடீரென்று இல்லாமல், நோக்கமுள்ள முறையில் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்கிறார்கள். அது திடீரென்று நிகழ்வதில்லை. ஆகவே அது எம்மாலும் முடியும்.

**எமது வட்டத்தினை எப்படி ஏற்படுத்துவது? என யோசிக்கலாம்.**

அடுத்து வரும் ஆறு மாதத்தில் எம்முடைய சமுதாயத்திலுள்ள 20-30 பேர்களை பட்டியலிட வேண்டும். செய்தித்தாள்களிலிருந்தும், உரையாடல்களிலிருந்தும், செய்தி ஒலிபரப்புக்களிலிருந்தும், நாம் பழகி வரும் சூழலிலிருந்தும் அந்த பெயர்களை சேகரித்து அவர்களை எப்படி சந்திக்க முடியும் என சிந்திக்க வேண்டும். வானொலி, பத்திரிகை, வியாபாரம், உணவகம், விளையாட்டு, எல்லாவற்றிற்குமே இது பொருந்தும். எம்மை நேர்மறைச்சிந்தனை (Positive Thinking) உள்ளவராக மாற்றி படிப்படியாக உயர வேண்டும். மற்றவர்களுடன் தொலைபேசி, இணையதளம், கடிதம் மூலம் எமது கருத்தினை கூறுவதுடன் மற்றவரை வெற்றியோடு வாழ்த்தவும் வேண்டும். நாம் பிழையிடும் செயலை மட்டுமே செய்கிறோம். எமது முயற்சிகள் சிறியதாக இருந்தாலும் எதிர்பாராத பெரிய பலனைத் தரும்.

ஒரு கவிதைப் பிரதியை, ஒரு புத்தகத்தை, சில சமயங்களில் ஒலியிழை நாடாவிலோ அல்லது ஒருவர் மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு பொருளை எப்போதும் அனுப்புதல் வேண்டும். பல வருடங்கள் கழிந்தாலும் நாம் செல்லுமிடெமெல்லாம் அவர்கள் எம்மை சந்திக்க



GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham P.Eng
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund
Industrial Alliance RBC Royal Bank Assumption Life Desjardins Manulife Foresters




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயல்வர். அவர்களாகவே தேடி வந்து பல வருடங்களுக்கு முன்பு நாம் செய்தவற்றை நினைவுபடுத்தி மகிழ்வார்கள். இந்த பழக்கம் எம்மவர்களிடையே மிகவும் குறைவு. பாராட்டுதல் செய்வதில் சிக்கனம். ஒப்பீடு செய்வதில் அதிகம், மற்றவர் வளர்ச்சியை சகிக்க முடியாமை, நான் மட்டுமே வாழ்ந்து கொண்டிருப்பதான பொய் எண்ணம், போலிக் கௌரவம், எல்லாமே எம்மை சூழ்ந்து கொண்டிருக்கும். நன்றி கூறுவது முழுமையாகவே செத்துவிட்டது. ஒரு நல்ல கடிதம், பரிசு வாழ்க்கையின் உன்னதத்திற்கு இட்டுச்செல்லும். விரல்விட்டு எண்ணக்கூடிய வெற்றியாளர்களை, தலைவர்களை, உன்னத மேதாவிகளை காண்பது கடினமாகி வருகிறது.

நாம் ஏனையோருடன் இணைந்து செய்யப்படுவது கூட எம்மை வளர்த்துச் செல்லும். கூர்மையான முறையில் உன்னதமான மனிதர்களை அவதானித்தால் அவர்கள் நமது குறிப்பிட்ட துறைகளில் தனது நேரங்களை செலவழித்துள்ளவர்களாக இருப்பார்கள். எமது மக்கள் கூட குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுபவர்களாக இருப்பது மிகவும் கவலையளிப்பதொன்று. சூரியன் ஒரு நட்சத்திரம், ஆனால், அதனையும் ஒரு கோள் என்று நம்புபவர்கள் அநேகம். எந்த ஒன்றையும் பகுத்தறிவு கொண்டு சிந்திக்க முயல்வதில்லை. எழுத்தாளர் சேரன் குறிப்பிட்டது போன்று தமிழுக்கு உணர்ச்சியை ஊட்டுவதிகளைவிட அறிவையும் ஊட்டுங்கள் என்பதனை சிந்திக்க வேண்டும். எவரது வீட்டிலும் நூல் நிலையம் இருப்பதில்லை. படக்கொப்பிகளும் குறுந்தட்டுகளும் குவிந்திருக்கும். வைத்திய சாலைக்கு சென்றாலும் பேச்சிலேயே மூழ்கிக் கிடப்பர். அங்குள்ள துண்டு பிரசுரங்களை வாசிக்கக் கூட மாட்டார்கள்.



பொதுவாக முன்னேற்றம் அடைபவர்கள் திட்டமிட்டு பேசுபவர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு குழுவுக்கு முன்னால் நின்று பேசுவது ஒரு சிறந்த முறை. இதற்குரிய திறமை பலரிடம் குறைவு. வெட்டிப்பேச்சு வேறு. மேடைப் பேச்சு வேறு. எம்மவர்கள் வெட்டிப் பேச்சில் வல்லவராக இருப்பதிலேயே சிறந்து வருகிறார்கள். மேடைப்பேச்சுக்கு நூலறிவு வேண்டும். அதுதான் இல்லையே!.

மேலை நாட்டினரிடம் பல பேச்சுக்களை வளர்ப்புச் சங்கங்கள் உள்ளன. பெரிய மேதாவிகள் இங்கு பயிற்சி பெறுகிறார்கள். TOAST MASTER INTERNATIONAL என்ற அமைப்பில் ஆயிரக்கணக்கானோர் பேசுவதற்கு கற்றுக் கொள்கிறார்கள். எம்மிடம் நல்ல ஒலி வாங்கி கிடைப்பதில்லை. சந்தர்ப்பம் கிடைத்தால் நீண்ட நேரம் பேசி மக்களின் பொறுமையை சோதிப்பார்கள். திடீர்ப் பேச்சாளர் தோன்றி வந்த விடயத்தை கோட்டை விட்டுவிடுவார்கள். ஒலி வாங்கியை விழுங்கியது போல் பெரிய வாய் திறந்து பேசுவார்கள், இலக்கிய கூட்டத்தில் அரசியல் உரை நிகழ்த்துபவர்கள் பலர். ஒலி வாங்கி என்ன செய்யும். பெரிய பாவம். இந்த விடயத்தில் உலகில் பல சிறந்த பேச்சாளர்கள் நல்ல தொடர்புமுறையை கொண்டிருக்கிறார்கள். ஒரே நேரத்தில் ஆயிரம் பேரையும் கவர முடியும். சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ உரை பல ஆயிரக்கணக்கானோரை சிந்திக்க தூண்டியது.

நல்லதொரு தொடர்புக்கு உதவி செய்யும் மனப்பான்மை அவசியம். பொதுவாக தன்னலம் உள்ளவர்களே இன்று அதிகம். கடவுளிடம் செல்பவர்கள் கூட தன் குடும்பம் பற்றியும் அடுத்த தலைமுறை பற்றியும்



416 992 7989

Century 21®

Thava Eliyathamby, MBA
Phone: 416 665 4756 | Bus.: 416 290 1200 |
Mail: thavan@gmail.com

208-80 Corporate Drive, Toronto, Ontario, M1H 365 Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுதல் செய்கின்றனர். பெரிய கடைகளில் முன்னால் இருக்கும் பெரும் 'May I Help You' என்பார்கள். அது வியாபாரத்திற்கு மட்டும்தான். வீதியில் விபத்தில் மாட்டுப்பட்டவர் அல்லது கொடுமைப்படுத்தப்பட்டவரிடம் யாரும் கேட்க மாட்டார்கள்.

உண்மையில் நல்லவர்கள் மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய விதத்தில் தொடர்ச்சியான வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். தன்னலமற்ற சேவை யாளர்களை காண்பதே கடினமாகி வருகிறது. உண்மையில் எமது வளர்ச்சிக்கும் சேவைக்கும் நிறைய தொடர்புண்டு. எந்தப் பலனையும் எதிர்பாராது எந்த அளவுக்கு உதவி செய்தார்களோ அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் உதவி கள் வந்து சேரும்.

எமது நல்ல எண்ணம் நல்ல உரிய அறுவடையை வழங்கும். அத்துடன் எம்முடன் மிக நெருக்கமானவர்களை ஒரு ஆலோசனைக் குழுவாக கொள்வதும் அவசியம். ஒரு உள்ளார்ந்த ஓர் இணைப்பாக இருந்தால் நாமும் ஆளுமை படைத்தவர்களாகிறோம். சிந்திப்பவர்களை சந்திப்பது மிக அவசியம். எமது நேர்மறைக் கண்ணோட்டத்துடன் முதற்படியை நாமே எடுத்து வைக்க வேண்டும். நாம் கொண்டுள்ள மகிழ்ச்சி, சிரிப்பு என்பன அவசியம்.

எம்முடைய மிகப் பெரிய சொத்து எமது நேரம். அடுத்து உறவு. இதனை நினைவில் கொள்ள வேண்டும். எமது வாழ்க்கை ஒவ்வொரு நாளும் நிமிடங்களாலும், மணிநேரங்களாலும் வடிவமைவது. தேவையற்றவர்கள் தொடர்பால் நேரத்தினை செலவிட முடியாது. "நீங்கள் வாழ்க்கையை விரும்புகிறீர்களா? அப்படியானால் நேரத்தினை வீணாக்காதீர்கள்! ஏனென்றால் அதுதான் உங்களுடைய வாழ்க்கையின் உள்ளீடாக இருக்கிறது" என்று கூறிய பெஞ்சமின் பிராங்கிளினின் பற்றி நினைவு கூற வேண்டியுள்ளது.

எமது வாழ்க்கையின் வெற்றிக்கு காரணமாக இருப் பவர் எமக்கு தெரிந்தவராகவும், எமக்கு ஆலோ சனை வழங்குபவராகவும், வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். எம்மைவிட அறிவில் சிறந்தவராகவும் அனுபவம் மிகுந்தவராகவும் இருக்க வேண்டும். எமது பாதையிலிருந்து விலகிச் செல்லும்போது சரி செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். எல்லாவற்றிலும் மேலாக எமது கேள்விக்கு சரியான பதில் கூறுவர்களாகவும் இருக்க வேண்டும். அத்துடன் அவருடைய நேரத்தையும் மதிக்க வேண்டும். உறவினை தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நட்புறவை உருவாக்கி கொள்ளவும், பாதுகாத்துக் கொள்ளவும் முயல வேண்டும்.

நல்ல உறவுகள்தான் எமக்கென்றொரு வட்டம் உறவை உருவாக்கி கொள்ளும் தனிப்பட்ட ஒரு நபராக நாம் உருவாக வேண்டியது அவசியம். எமது குழுக்கள், உன்னதமான சிந்தனையாளர்கள், முற்போக்கு சங்கங்கள் உட்பட நாம் உயர்தரமான உறவுகளை உருவாக்கி பாதுகாத் தல்'' புது உலகம் தானாக மலரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Protect More.
# Save More.

Insure your 🏠 + 🚗 and SAVE*

# Take Two Advantage

**Combine your home and auto and save up to 45%**



## Suren Navaratnarajah


Allstate Insurance Agency - Scarborough East

**416.520.6916**

snavaratnarajah@allstate.ca

Allstate®
You're in good hands.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உலகின் பிரபல குத்துச் சண்டை வீரர் முகமது அலி!

எஸ். ஆர். ராஜபாலன் -


'விளையாட்டு வீரர்கள் உடற்பயிற்சி கூடங்களில் உருவாவதில்லை. அவர்களுக்கு ஆழ்மனதில் ஒரு கனவு தொலைநோக்கு ஆழமான விருப்பம் இருக்க வேண்டும்'. சந்தேகமே வேண்டாம் - முகமது அலி.

களம் கண்ட 61 போட்டிகளில் 56 வெற்றிகள், அதில் 37 நாக்-அவுட் வெற்றிகள்... அதுதான் முகமது அலி. குத்துச் சண்டை உலகின் பிதாமகன் இன்று மரணமடைந்து விட்டார். மரணத்துடன் பல ஆண்டுகாலம் போராடி வந்த முகமது அலி இதுநாள் வரை மரணத்தை நாக் அவுட் செய்து வந்தார். இறுதியில் மரணம் தனது வெற்றியை ருசித்து விட்டது. தனது ஆக்ரோஷமான நாக் அவுட் முறை குத்துக்களால் எதிராளியை நிலைகுலைய வைக்கும் முகமது அலி அடிப்படையில் அமைதியை விரும்புபவர் என்பது பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை. 1942ம் ஆண்டு ஜனவரி 17ம் நாள் அமெரிக்காவின் கென்டகி நகரில் பிறந்தார் காசியஸ் மார்செலஸ் கிளே என்பதுதான் முகமது அலியின் இயற்பெயர். சிறுவயதில் மற்ற குழந்தைகளைப் போல் பேருந்தில் ஏறி பள்ளிக்குச் செல்லாமல் பேருந்துடன் ஓடியே முகமது அலி பள்ளிக்கு செல்வாராம். முகமது அலி குத்துச்சண்டையை தேடிப் போகவில்லை. அது அவரது ரத்தத்திலேயே ஊறியிருந்தது. அலியின் 12வது வயதில், அவரது சைக்கிளை ஒருவன் திருட முயற்சிக்க, அவனைப் பிடித்து சரமாரியாகக் குத்தி சாய்த்தார். அவரது குத்துச்சண்டை வாழ்க்கை அப்போதே தொடங்கிவிட்டது.

முகமது அலி விட்ட குத்துக்களைப் பார்த்த ஜோ மார்டின் என்ற ஒரு போலீஸ்காரர் அலியை குத்துச் சண்டையின் பக்கம் திசை திருப்பி, அவரே பயிற்சியாளராகவும் இருந்தார். 1960ம் ஆண்டு ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்ற முகமது அலி அதே ஆண்டில் தொழில்முறைக் குத்துச்சண்டை வீரராக உருவெடுத்தார். பின்னர், களமிறங்கிய அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிக் காற்று முகமது அலி பக்கமே வீசியது. தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக 19 குத்துச்சண்டை போட்டிகளில் வெற்றிபெற்ற முகமது அலிக்கு 20ஆவது போட்டி உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியாக அமைந்தது. அந்தப் போட்டியில் அவருக்கு எதிராக அப்போதைய உலக ஹெவிவெயிட் சாம்பியனான சோனி லிஸ்டன் களமிறங்கினார். அன்றைய காலகட்டத்தில் உலகின் மிக ஆபத்தான வீரராக அறியப்பட்ட சோனி லிஸ்டனை 22 வயதே ஆன முகமது அலி 1964-ஆம் ஆண்டு பிப்ரவரி 25-ஆம் தேதி எதிர்கொண்டார். இப்போட்டியின் 7வது சுற்றில் "டெக்னிக்கல் நாக்-அவுட்" முறையில் வெற்றி பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமது அலி உலக சாம்பியன் ஷிப் பட்டம் வென்றார்.

இதன் பின்னர், 1965ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் தேதி நடைபெற்ற மறு போட்டியிலும், முதல் ரவுண்டி லேயே ஒரே குத்தில் சோனி லிஸ்டனை முகமது அலி நாக்-அவுட் செய்தார். அதிரடி பஞ்ச்களினால் எதிராளியை நாக் அவுட் செய்தாலும் முகமது அலி இளகிய மனம் கொண்ட மனிதாபிமானி. 1940களில் குத்துச்சண்டை உல கின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த சுகர் ரே ராபின்சனி டம் ஆட்டோகிராப் வாங்கச் சென்றுள்ளார் அலி. ஆனால் அவரோ, இதற்கெல்லாம் எனக்கு நேரமில்லை என்று கோபமாகக் மறுத்துவிட்டார். இதனால் மனம் நொந்து போன அலி. தன்னைப் போல எந்த சிறுவனும் மனம் நோகக்கூடாது என்று கருதிய அலி யார் எந்த சூழ்நிலை



யில் ஆட்டோகிராப் கேட்டாலும் மறுக்காமல் போடுவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

1960ம் ஆண்டு ரோமில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் "லைட் ஹெவி வெயிட்" பிரிவில் முகமது அலி தங்கப் பதக்கம் வென்றார். ஒலிம்பிக் போட்டி முடிந்து நாட்டிற்குத் திரும்பிய அலி, நான் இந்நாட்டிற்காக தங்கப் பதக்கம் வாங்கி வந்துள்ளேன். நான் இப்போது ஹோட்டலில் உணவு சாப்பிட போவேன் என கூறி ஒரு ஹோட்டலுக்குச் சென்று காபி கேட்டுள்ளார். அமெரிக்காவில் இனபேதம் தலைவிரித்தாடிய நேரம் அது என்பதால், கறுப்பின மக்க ளுக்கு எதுவும் தருவதில்லை என அங்கு பணியில் இருந்த பெண் முகத்தில் அடித்தது போல பதில் அளித்தார். இத னால், கடும் கோபமடைந்த முகமது அலி, தனது ஒலிம்பிக் பதக்கத்தை ஓகியோ நதியில் வீசியெறிந்ததாக தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். பிறப்பால் பிரிவினை ஏற்படுத்தும் இந்நாட்டிற்காக நான் வாங்கி வந்த பதக் கத்தை நான் அணிய விரும்பவில்லை என்றும் முகமது அலி தனது சுய சரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

1967ஆம் ஆண்டு நடந்த வியட்நாம் போரில், அமெரிக்க படையினருக்காகப் போரிட முகமது அலி மறுத்தார். பலமுறை எச்சரிக்கப்பட்டும், போர் என்பது தனது மத கோட்பாடுகளுக்கு எதிரானது என்று கூறி மறுத்தார் அலி. இதனால் அவரது ஹெவி வெயிட் பட் டம் பறிக்கப்பட்டது. குத்துச்சண்டை போட்டிகளில் பங் கேற்க அமெரிக்காவின் அனைத்து மாகாணங்களும் அவருக்குத் தடை விதித்தன. வெளிநாடுகளில் நடக்கும் போட்டிகளிலும் பங்கேற்க முடியாத வகையில் அவரது பாஸ்போர்ட்டும் பறிக்கப்பட்டது. ஆனாலும் தனது நிலைப்பாட்டிலிருந்து சற்றும் மாறாமல் சுமார் 42 மாதங் கள் தான் நேசித்த குத்துச்சண்டை போட்டியில் பங்கேற் காமல் ஒதுங்கியிருந்தார். சுமார் மூன்றரை ஆண்டு காலம் குத்துச்சண்டடை பக்கமே தலை வைத்து படுக்கா மல் வைராக்கியமாக இருந்து காட்டினார் அலி. பின்னர் களம் கண்ட பிறகு முகமது அலியிடம் சற்றும் வேகம் குறையவில்லை. குத்துச்சண்டையின் போது, பலமுறை தலையில் அடிபட்டதால், முகமது அலிக்கு தலையில் ரத்த உறைவு ஏற்பட்டு பக்கவாதம் தாக்கியது. கடந்த 2013ல் கடும் உடல்நலைக் குறைவால் பாதிக்கப்பட்ட அலி, ஓரிரு மாதங்கள் கூட தாங்க மாட்டார் என மருத்துவர்கள் கூற, அதையும் தாண்டி வந்தார் அலி.

'விளையாட்டு வீரர்கள் உடற்பயிற்சி கூடங்களில் உருவாவதில்லை. அவர்களுக்கு ஆழ்மனதில் ஒரு கனவு தொலைநோக்கு ஆழ மான விருப்பம் இருக்க வேண்டும்'. சந்தேகமே வேண்டாம்; இதை சொன்னவர் முகமது அலி தான். அவர், அப்படித் தான் சாதித்தார் வாழ்ந்து கட்டினார்.

காசியஸ் மார்செலஸ் கிளே என்பதே அவரது இயற்பெயர். பிற்காலத்தில் இஸ்லாம் மதத்தை தழுவி முகமது அலியாக மாறினார். 61 முறை ஹெவி வெய்ட் குத்துச் சண்டை போட்டிகளில் கள மிறங்கியிருக்கிறார். அதில் 56 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார். இதில் 37 முறை நாக்அவுட் முறையில் முகமது அலி வென்றுள்ளார். தொழில்முறை குத்துச் சண்டை உலகில் முடிசூடா மன்னராக வலம் வந்தவர் முகமது அலி. வரிசையாக மூன்று முறை உலக சாம்பி யன் பட்டங்களை வென்று அசத்தினார். தொழில்முறை குத்துச்சண்டையில் அவர் 5 போட்டிகளில் மட்டுமே தோல்வியை எதிர்கொண்டார்.

1981ல் குத்துச்சண்டை போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற அவர், அதன்பின்னர் சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்தார். உடல்நலிவுற்ற போதிலும், கறுப்பர்களின் உரிமைகளுக்காக ஈடுபடுவது, சமூக சேவையில் இறங் குவது என தனது அந்திம காலத்தையும் தன் குத்துச்சண்டை நாட்களுக்கு இணையாக பரபரப்பாகவே கழித்து வந்தார் முகமது அலி. அடுத்தடுத்த ஆண்டுகளில் நிமோனியா பாதிப்பு, சிறுநீரகக் கோளாறு என பல நோய்கள் அலியை வதைத்தன. மரணத்துடன் நடந்த குத்துச்சண்டை போட்டி யில் அவர் மரணத்தை பலமுறை நாக் அவுட் செய்தார். இறுதியில் மரணம் தனது வெற்றியை ருசித்து விட்டது. குத்துச்சண்டை பிதாமகன் முகமது அலியை மரணம் இன்று நாக் அவுட் செய்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# NOW OPEN

*First 200 clients will get special gifts*

**280 Rossland Rd. East, Ajax ON. L1Z 0K4,**
**Salem / Rossland, Next to ESSO gas station**

**Dr.Chandra & Associates**
**Dr.Sharon Barr**
**Dr.Parneet Kaur**
**Yasmin Kanji HYG**
**Madiha Ahmed, HYG**



**For more information & appointments please call Jeya at: 905-683-0505, 416-700-0101**

## Visit us at KC Dental where we can provide dental care for you and your entire family

**We can offer you many services including:**

- Crowns, Bridges & Veneers
- Same-Day Emergency Treatment
- Teeth Whitening
- Mouthguards and Sportsguards
- Dentures
- Root Canal Therapy
- Basic Filling & Cleaning
- Nitrous Sedation
- Implant Crowns

**New & Walk-In Patients Are Welcome**
**Special Discount For Seriors**
**Special Discount For Students**



- All Insurance Coverage Accepted
-ODSP (Ontario Disability Support Program)
-CINOT (Childern In Need of Treatment)
-Healthy Smiles Ontario
(Childern under 17 years & family income under $20,000)
-Ontario Works (Dental / Denture Benefits)
-All Other Benefits-please call our office for more information

Come visit us and let our friendly staff give you a tour of our clinic.

## New Patient Accepted

**Our clinic is environmentally friendly:**
Digital charting and radiography.

**Monday to Friday : 10am to 7pm**
**Saturday : 10am to 5pm**
**Sunday: Appointment & Emergency only**

**KC DENTAL**
*Dr. Chandra & Associates*

416 700 0101
www.drchandradental.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐரோப்பாவின் மிதக்கும் நகரம் மூழ்குகிறது...!

## See Venice, The Floating City, Before it Sinks.

சுந்தரம் இந்திரராஜா

ஐரோப்பாவின் மிதக்கும் நகரம் என்ற பெருமை வெனிஸிற்கு உண்டு. வெனிஸ் Venice இத்தாலி நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மாநகரம். இந்த மாநகரம் ஒரு தீவுக்கூட்டம் என்பது பலருக்கு தெரியாத விடயம். நீங்கள் நினைப்பது போல் கடலுக்குள் இருக்கும் தீவுக் கூட்டம் இல்லை. 150 வடிகால்களுக்கு நடுவே உள்ள 117 தீவுக் கூட்டம் தான் வெனிஸ் மாநகரம்.

இம்மாநகரின் தெருக்களில் கார் ஓட முடியாது. படகு தான் மிதந்து செல்லும், ஒவ்வொரு வீட்டுக்காரர்களும் படகு வைத்து ஓட்டுகிறார்கள், தெருக்கள் என்பவையே நீர் ஓடும் வடிகால்கள் தான். இம்மாநகரம் முழுவதும் குறுக்கும், நெடுக்குமாக ஓடும் வடிகால்களே முக்கிய போக்குவரத்தாக திகழ்கின்றன. வெனிஸ் மாநகரம் முழுவதும் பேருந்துகள் போல் இயக்கப்படுவது கோண்டலா Gondola Ride எனப்படும் படகு போக்குவரத்துச் சேவை.

இந்த மாநகரத்தில் உள்ள கட்டிடங்கள் அனைத்துமே தண்ணீரில்தான் இருக்கும். பார்ப்பதற்கு அனைத்து தெருக்களும், வீடுகளும் மிதப்பது போன்றே தோன்றும். அப்படியானால், மாநகரம் நீரின் மேல் கட்டப்பட்டதா? மாநகரம் கட்டப்பட்டபின் நீர் சூழ்ந்ததா? மிக நீளமான பைன் Pine மரங்களும் லார்ச் Larch மரங்களும் வெட்டப்பட்டு அப்படியே சதுப்பு நிலத்தில் புகுத்தப்பட்டன. மரங்கள் நெருக்கமாக நடப்பட்டு சதுப்பு மண் மறைக்கப்பட்டு மேலே அமைந்த சமதளத்தின்மீது கட்டடங்கள் எழுப்பப்பட்டன. வீடு கட்டியாகிவிட்டது. நீர் இருந்துகொண்டே இருந்ததை எப்படி சமாளிப்பது? இந்தக் கேள்விக்கான பதிலாக வடிகால் முறையைக் கண்டுபிடித்தனர்.



Rialto Bridge

புகழ்பெற்ற சுற்றுலாப் பகுதிக்கும், காதலுக்கும், தேன்நிலவுக்கும் பரீஸ்க்கு அடுத்ததாக வரலாற்றுச் சிறப்புமிக்கது வெனிஸ் மாநகரம். மேலும் இந்த மாநகரம் அழகு, கலாச்சாரம், கட்டிடக்கலை மற்றும் கடற்கரையால் இன்னும் புகழ்பெற்றது. யுனெஸ்கோவின் பாரம்பரியமிக்க இடங்களுள் ஒன்றாக உள்ளது. தினம் 50,000 பேருக்குக் குறையாமல் ஒவ்வொரு ஆண்டும் மேற்பட்ட 21 மில்லியன் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வெனிஸ்; அந்த வெனிஸ் மக்கள் தொகையில் 40 மடங்காகும். Venice attracted more than 21 million tourists each year; 40 times the number of Venice's population. This city has an average of 50,000 tourists a day.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# MEDCENTRE CONNECT

SYNCHRONIZING HEALTH SECTORS








**Dr. S. Senthill Mohan,** MD

**President & CEO**

**MMUCC, Unit- 11 2901 Markham Road,**

**Toronto, ON M1X 0B6**

**Tel : (416) 357-7714**




**e-mail : ss@medcentreconnect.com | medcentreconnect.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தனை பெருமைகள் மிக்க வெனிஸ் மாநகரம் ஆண்டுதோறும் இயற்கையாக 1 மி.மீ அளவுக்கு நீருக்குள் மூழ்குகிறது என்ற அதிர்ச்சி தகவல் தற்போது தெரிய வந்துள்ளது. மனித நடவடிக்கைகளாலும் மேலும் இந்த நகரம் ஆண்டுதோறும் 0.8 லிருந்து 1 மி.மீ வரை நகரம் மூழ்குவதை செயற்கைகோளின் உதவியுடன் விஞ்ஞானிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஏற்கெனவே ஆண்டிற்கு நான்கு முறை அதிகரித்துவரும் நீர்மட்டத்தால் நகருக்கு ஏற்படும் ஆபத்து குறித்து ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். அருகில் உள்ள கடல்நீரின் மட்டம் உயருவது வெனிஸ் மாநகரத்தைப் பாதிக்கும் என்பதால் இதுகுறித்த தொடர் கண்காணிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று இத்தாலியின் படுவா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளரான பியட்ரோ டீட்டினி தெரிவித்தார்.

இத்தாலியின் முக்கியமான சுற்றுலா இடம் என்பதினால் அங்கு கூட்டம் மிக அதிகமாகவே இருக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் அங்குள்ள செயின்ட் மார்க்ஸ் ஸ்கொயர் (St Mark 's square) என்ற இடத்தில் நிற்கக் கூட முடியாது.

**வெனிஸ் மாநகரில் பார்க்க வேண்டிய இடங்கள் (Main Tourist Attractions of Venice):**

(1) செயின்ட் மார்க் ஸ்கொயர்; (St Mark's Square) வெனிஸ் நகரத்தில் பார்க்க வேண்டிய பொது ஜன சதுக்கம் எனும் முக்கியமான சுற்றுலா இடம்.

(2) டோகேஸ் அரண்மனை (Doge's Palace) செயின்ட் மார்க் சதுக்கத்தின் எதிரில் உள்ள வெனிஸ் மாநகர மன்னர் அரண்மனை.

(3) ரியால்டோ பாலம் (Rialto Bridge) வெனிஸ் மாநகரில் மிக புகழ்பெற்ற பாலம்.

(4) செயின்ட் மார்க்கின் பேசிலிக்கா (St Mark's Basilica) வெனிஸ் மாநகரில் அர்ச்டியோசெசே ரோமன் கத்தோலியர்களின் தேவாலயம்.

(5) குக்கேன்ஹெம் மியூசியம் (Guggenheim Museum) பெக்கி குக்கேன்ஹெம் என்பவரின் சிற்பக் களஞ்சிய கலைக் கூடம்.

(6) முரனோ கண்ணாடி (Murano Glass & Glass Jewellery) வெனிஸ் மாநகரின் வடக்குப் பகுதியில் உள்ள இந்த இடம் கண்ணாடிகளில் செய்யப்படும் நகைகள் அலங்காரங்கள் அழகுப் பொருட்களில் உலக பிரசித்தி பெயர் பெற்ற இடம்.

**சரித்திரம்:**

12 ஆம் நூற்றாண்டில் வெனிஸ் Venice மாநகரம் மிக முக்கியமான வியாபார நகரமாக விளங்கியது. அட்ரியாடிக் கடல் பகுதியில் அது முக்கியமான வியாபார மற்றும் கடற்படை கேந்திரமாக விளங்கியது. 13 ஆம் நூற்றாண்டில் 'இத்தாலி'யின் மிகப் பெரிய பணக்கார மாநகரமாக 'வெனிஸ்' விளங்கியது. 15 ஆம் நூற்றாண்டில் 'ஒட்டோமான்ஸ்' (Ottomans) என்பவர்களை எதிர்த்து 'திசலோனிக்கா' (Thessalonica) என்பவர்கள் நடத்திய யுத்தத்தில் 'திசலோனிக்கா'விற்கு ஆதரவாக 'வெனிஸ்' நின்றதும் அதன் வீழ்ச்சி துவங்கியது.

நெப்போலியன் கி.பி. 1797 ஆம் ஆண்டு வட இத்தாலியின் லொம்பாடி Lombardy, ஜினோவா Genova, நேப்பிள்ஸ் Naples ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றினார். கி.பி. 1807 ஆம் ஆண்டு பாப்பரசரின் கீழ் இருந்த இத்தாலியப் பிரதேசத்தை வென்று 'வட இத்தாலி' என்ற அரசை ஆரம்பித்தார். இவர் நெப்போலிய சட்டங்களைக் கொண்டு வந்து இத்தாலியை வளர்த்தார்.

ஜெர்மன்-ஆஸ்திரியப் German-Austria போரில் ஜேர்மனிக்கு உதவியதன் மூலம் இத்தாலியுடன் வெனிஸ் இணைக்கப்பட்டது. 1870 இல் ஜேர்மன்-பிரான்ஸ் German-France போர் காரணமாக ரோமில் Rome பாப்பரசருக்கு ஆதரவாக பிரான்ஸ் வைத்திருந்த படையணி மீளப்பெறப்பட்டதன் காரணமாக ரோம் Rome போரின்றி இத்தாலியுடன் இணைக்கப்பட்டது. இவ்வாறாக இத்தாலி Italy என்றொரு புதிய தேசம் உருவாக்கப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பட்டங்களும் பாராட்டுகளும்!

பல்கலை வல்லுனரான செல்வி பவித்திரா தவராசா (படத்தில் மத்தியில் நிற்பவர்) "Honors of Health Science" பட்டதாரியாக சித்தி அடைந்து சாதனை நிலை நாட்டியுள்ளார். ரொறண்டோ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் கல்வி பயின்று வந்த இவர் ரொறண்டோ பல்கலைக் கழக வளாகத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் தன்னுடன் கல்வி பயின்ற உற்ற நண்பிகளான மதுசா கிருஷ்ணபாஸ்கரன் (வலது புறத்தில் நிற்பவர்), தனிதா ரவீந்திரநாதன் ஆகியோர் சகிதம் தனது பட்டத்தினை பெற்றுக் கொண்டார்.



**N.Janice Nesathurai**
**School:** Franklin Street Public School
**Grade 8 Graduation:** June 23, 2016



**N.Abira Nesathurai**
**School:** Markham District High School
**Grade 12 Graduation:** June 28, 2016



**Grade 12 Graduation**
Markham District High School
**Shalini Mathanarajah, Abira Nesathurai, Niroshini Sakthivel, Sahana Sasikumar**
**Graduation Date:** June 28th, 2016






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்





























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தளிரில் படர்ந்த நிகழ்வுகள்



















## தளிர் சஞ்சிகையின் ஆண்டு விழா 2016!

கடந்த மார்ச் மாதம் 19ம் திகதி தளிர் காலாண்டு இதழின் இரண்டாவது ஆண்டு விழா நம்மவர் தளிர்களின் கலைகளுடன் சங்கமித் தது. இவ் நிகழ்வில் பசுமை கொண்ட மனித நேய விருதுகளும் பிரபலங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் கலைஞர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டது. தளிரின் பசுமை எழில் கண்டு அன்பினில் நிறைந்திருந்தது நம்ம வர்களின் வருகை. மண்டபம் நிறைந்த ஒரு விழாக்கோலம் மீண்டும் ஒரு இனிமைக்குள் தமிழ் தளிர் துளிர் விட்டு அனைவரின் கைகளிலும் செல்லக்குழந்தையாய் தவழ்ந்தது.. உதட்டின் வார்த்தைகளில் இல்லாது உள்ளத்தின் வெளிப் பாடாய் வந்திருந்த அனைவரும் வாழ்த்துக்கள் சொன்னதுடன் ஆதரவும் வழங்கி தளிரோடு பலரும் சேர்ந்து கொண்டனர். இன்னும் ஒரு துளிரில் மொட்டுக்கள் உருவாகி மலர்ந்தது போல் இருந்தது மக்கள் வெள்ளம். தளிர் ஆசிரியர் சிவமோகன் சிவலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இவ் நிகழ்வில் சிறப்பு அதிதியாக ருச்றிவர் தொகுதி கல்விச்சபை உறுப்பினர் நீதன் சான் கலந்து கொண்டார். நிகழ்வின் தொகுப்பாளராக விஜிதா மயில் வாகனம் மற்றும் வானொலி அறிவிப்பாளர் இளாங்கோ உட்பட இசையமைப்பாளர் ஜெயச் சந்திரனின் பைரபி இசையருவி மழையினில் நம்மவர் தளிர்களின் குரலிசையுடன் மண்டபம் இசையால் நனைந்தது...

(செய்திகளுக்காக: தளிரான்)

நம் நிகழ்வுகளின் படத்தொகுப்புக்கள் உங்களுக்காக......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சொக்கலிங்கம் நினைவலைகளுடன்

# தமிழ் இனி வெல்லும்











அமரர் சொக்கலிங்கம் நினைவாக தமிழ் இனி வெல்லும் சிறுவர்களுக்கான தமிழ் பேச்சுப் போட்டி தொடர் 2 இன் இறுதிப்போட்டிகள் மிகவும் சிறப்பாக கடந்த 26-06-2016 அன்று தமிழர் செந்தாமரை தொலைக்காட்சி மண்டபத்தில் இடம் பெற்றன. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே தமிழ் மொழியினையும் தமது அடையாளத்தினையும் நிலை நிறுத்துவதற்காக சிறுவர் களுக்கான தமிழ் மொழி பேச்சுப் போட்டியினை நடாத்திவரும் தமிழர் செந்தாமரை தொலைக்காட்சி நிகழ்விற்கு முழுமையான ஆதரவினை Medcentre Connect டாக்டர்.சொக்கலிங்கம் செந்தில்மோகன் அவர்கள் தனது ஆதரவினை வழங்கி வருகிறார்.



டாக்டர் செந்தில் மோகன் அவர்களின் தந்தையாரான அமரர் வை.சொக்கலிங்கம் அவர்களின் நினைவாக இந் நிகழ்ச்சி இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சி றுவர்களுக்கான தமிழ் பேச்சுப் போட்டி இரண்டு கீழ்ப்பிரிவில் (6-9 வயது), முதலிடத்தை ($1,000) ஜஸ்மிதா சிவரூபன், இரண்டாமிடத்தை ($650) அபிவர்ஷி பாலசுப்ரமணியம், மூன்றாம் இடத்தை ($350) துவாரகா ஜீவனேசன் ஆகியோரும், மேல் பிரிவில் (10-12 வயது) முதலிடத்தை ($1,000) குபேரகா குமரேஸ்வரன், இரண்டாமிடத்தை ($650) ஆரணி சுகந்தன், மூன்றாம் இடத்தை ($350) அகிலவன் ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். இப்பரிசு RESP மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படுவதனால், இத்தொகை அவர்களின் கல்விச்செலவுக்கு பின்னர் உதவும் என்பதில் ஐயமில்லை. இறுதிப்போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் ஆறுதல் பரிசில் களும் வழங்கப்பட்டன.

(செய்திகளுடன் படங்களும்: தளிரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான் என் அம்மாவின் பிள்ளை"









நித்திலம் போற்றும் நில மங்கையாம். நீங்கா நெஞ்சமதில் நிலை கொண்ட நினைவலைகளுடன், மாறாத சுவையும் மாண்புறு மனித வாழ்வியலையும், மங்காத செல்வ மொழியழகையும், எழுதுகோல் கொண்டு வீட்டினில் படித்ததை ஏட்டினில் புனைந்து பாகங்கள் இரண்டென வகுத்து படைப்பினை ''நான் என் அம்மாவின் பிள்ளை '' என்னும் இரு நூல்களாக திரு.தங்கராசா இளையதம்பி அவர்களால் எழுதப்பட்ட நூல் வெளியீடு. கடந்த 06-12-2016 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணியளவில் St. James cardinal Mcguigan Catholic High School நோர்த் யோக்கில் இவ் நூல் வெளியீட்டு வைபவம் பேராசிரியர். இ.பாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

ஈழத்தின் கிழக்கே மட்டக்களப்பு நாவற்குடாவினை பிறப்பிடமாகவும் சிவானந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவருமான திரு.தங்கராச இளையதம்பி (இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் முதுநிலை அதிகாரி) கனேடிய நாட்டில் புலம் பெயர்ந்த போதும் இலக்கியத்துறையில் தனது முதல் இலக்கிய பயணத்தினை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் பிள்ளையார் மாண்மியம் என்னும் இந்து சமயக்கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டு தமிழிலும், ஆங்கிலத்திலும் இரு நூலாக 2008 ஆம் ஆண்டு 192, 84 பக்கங்களுடன் வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து சமூக தொண்டுகளில் புலம் பெயர் அமைப்புகளான பாடும் மீன்கள் அமைப்பு, சுவாமி விபுலானந்தர் அமைப்புகளில் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தார். நாட்டார் கவிதைகளையும், கட்டுரைகளையும் தமிழிலும், ஆங்கிலத்திலும்,எழுதி வெளியிட்டு வந்த இவர். மட்டக்களப்பு வாழ் தமிழர்களின் வாழ்க்கை நடைமுறையினையும், பழக்க வழக்கங்கள் மற்றும் பேச்சு வழக்கில் உள்ள இலக்கிய சொற்களையும் பின்னிப்பிணைந்து ஒரு ஆவண நூலாக தமிழ் பெரும் காப்பியமாக படைக்கப்பட்டதே ''நான் என் அம்மாவின் பிள்ளை'' எனும் நாவலை 484, 560 பக்கங்களுடன் இரண்டு பாகங்களாக வெளியிட்டு வைத்தார். இது ஒரு நாவல் என்று குறிப்பிடுவதை விட கிழக்கு வாழ் ஈழத்தமிழரின் வாழ்க்கை வரலாறு அடங்கிய ஒரு ஏடாக இதனை குறிப்பிடலாம். **(வரிகளுடன் படங்களும்: தளிரான்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரின் பார்வையில் சண் சிங்கர் சுபவீன்
















தமிழ் மொழியிலும், இசையிலும் ஆர்வம் கொண்ட சுபவீன் பவானந்தன் இந்திய சண் தொலைக்காட்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் சண் சிங்கர் பாட்டுப் போட்டியில் 2013 ஆம் ஆண்டு கலந்து கொண்டு நாலாயிரத்திற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் மத்தியில் தேர்வின் திறமை அடிப்படையில் இறுதிக்கட்ட சுற்றில் முதலாம் இடத்தினை பெற்று புலம் பெயர் தமிழர்களுக்கு பெருமையினை ஈட்டிக்கொடுத்து இசையின் இளயவன் இனியவன் ஆனான். சிறிய வயதினில் இருந்தே தமிழ் மொழியினையும் இசையினையும் தனது பெற்றோரான திரு.திருமதி பவானந்தன் அவர்களின் வழிகாட்டலும் சுபவீனுக்கு பக்க பலமாக இருப்பது ஒரு வரப்பிரசாத மாகும். சுபவீனின் விடாமுயற்சி, பல் குரல் தேர்ச்சி, பணிவு, நம்பிக்கை என்பன தொடர்ந்தும் சமூகத்தில் வெற்றியாளனாக வெற்றிப்படிகளை கடந்து கொண்டு இருப்பது பாராட்டப்படவேண்டியதொன்றே. கலைஞர்களான இசையமைப்பாளர் இமான், கங்கைஅமரன், அனுராதா ஸ்ரீராம் ஆகியோரின் பாராட்டுக்களையும், ஆசிகளையும் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மற்றும் கனடிய தொலைக்காட்சிகள், வானொலிகள், பத்திரிகைகள் என்பன நடாத்திய பல நிகழ்வுகளிலும் கலந்து வெற்றியீட்டியமையும் சுபவீனின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது எனலாம். மூன்று வயதில் ஆரம்பித்த இசைப்பயணத்தில் பல்வேறு போட்டிகளிலும் தவறாது கலந்து கொண்டு வெற்றியீட்டி 16 வயது வரை 10 தங்க பதக்கங்களும் நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகளும் வெற்றி கிண்ணங்களும் சுபவீனின் வாழ்க்கை சரித்திரத்தில் முக்கிய இடம் பிடித்துள்ளது.

சுபவீனின் தங்கை அபிநயா பவானந்தனும் இணையாக இசை, நாட்டியம் என பல கலைகளிலும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவது தமிழின் பெருமையினை பறை சாற்றி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் தமிழ் அழகு!
# டுறம் கலைக் கல்லூரியின் தனியழகு!!

















'மழலையின் தமிழ் மொழியினை தேனென சுவைத்தேன்.
சங்கிலியன் நாடகத்தில் தமிழ் மண்ணின் பெருமையினை கண்டேன்.
இயல், இசை, நாடகம் பார்த்து தன்னிலை மறந்தேன்.
டுறம் கலைக் கல்லூரியின் தமிழ் மழையினில் நனைந்தேன்.''

புலம் பெயர்ந்து வாழும் நம்மவர்களில் ஒரு சிலர் இன்று தமிழ் மொழியினையும் அடையாளத்தினையும் தமது குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பதில் முன் நின்று செயற்படுவது நமது மொழி இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் உயிர் வாழும் என்ற நம்பிக்கை பிறக்கின்றது.

கடந்த 18-06-2016 அன்று மாலை 06.00 மணியளவில் தமிழ் கலைகளை போதித்து வரும் டுறம் நுண்கலைக் கல்லூரியின் விருது விழா, ஏஜக்ஸ் ஹை ஸ்கூல் மண்டபத்தில் நடைபெற்றபோது தளிரில் பதிவாகியவைகள்.
(தளிரான்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மழலைகளின் தமிழ் அழகு!
## டுறம் கலைக் கல்லூரியின் தனியழகு!!























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "பழைய கண் புதிய பார்வை"

**டாக்டர். போல் யோசேப்**

வாழ்க்கையை ஏன் இனிமையாக எப்போதும் வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதே அது நன்றாகத்தானே இருக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். வழக்கமாக எப்போதும் ஒரேமாதிரியான, தொடர்ச்சியான, சுழற்சியான விடயங்களைத் தான் பெரும்பாலும் செய்து வருகின்றோம். ஒரு காலகட்டத்தில் சிலவேளைகளில் சலிப்பை அல்லது வெறுப்பை, சோர்வை, களைப்பை உண் டாக்கி விட வாய்ப்புள்ளது. உங்களுக்குத் தெரியாமலே இந்த விடயங்கள் ஆழ்மனதில் பதிந்துவிடும். அதன்பிறகு என்னத்தைச் செய்து என்னத்தைப் பண்ணி என்று உங் களுக்குள் முணுமுணுத்துக்கொண்டு சோர்ந்து போய் விடுவீர்கள். புதியதை ரசிக்காமல், கவனிக்காமல், பரீட் சித்துப் பார்க்காமல் எப்படி வாழ்க்கை இனிமையானதாக ஆனந்தமுள்ளதாக இருக்கும்.

அதற்காக நான் எல்லாவற்றையும் புதியதாக செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. வழக்கமாக செய்கிற விடயங்களில் சில சிறிய மாற்றங்கள் செய்தாலோ அல் லது வழக்கமாக பார்க்கிற விடயங்களை இன்னொரு வித்தி யாசமான கோணத்தில் பார்க்கலாம். புதிய உத்திகளைக் கையாளலாம்.

**அதே கணவன் அதே மனைவி புதிய பார்வை!:-**

வழக்கமாக கேட்டுப்பழகிப்போன சோகப்பாடல்களை விட்டுவிட்டு வித்தியாசமாக பாடல்களை கேட்டு ரசிக்க லாம். வழக்கமான அதே மனைவிதானே. அதே கணவன் தானே என்று எண்ணிக்கொண்டு. சலித்துக் கொண்டு புதிதாய்பார்க்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதே மனைவியை. கணவனை இன்னொரு கோணத்தில். வேறொரு பரிமாணத்தில் பார்த்து ரசிக்கலாம். வழக்கமான சண்டைகளை கொஞ்சம் தள்ளி வைத்து விட்டு கொஞ்சம் கொஞ்சிக்குலவலாம்.

தாம்பத்தியத்தில் புதிய யுத்திகளைக் கண்டுபிடிக்கலாம். கொஞ்சநேரம் இருவரும் தனியாகச் சென்று வழக்கமான இடத்தை விட்டு புதிய இடத்திற்கு சென்று வழக்கமான புராணங்களை ஓரங்கட்டிவிட்டு புதிதாக ஏதாவது விடயங் களைப் பேசலாம்.

உங்கள் அறிவாளியான மூளையை கழற்றி வைத்து விட்டு, அகங்காரத்தை கொஞ்சம் இறக்கிவைத்து விட்டு, பட்டம், பதவியை கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு குழந்தைத்தனமான, முட்டாள்தனமான செயல்களை செய்து சிரித்து மகிழுங்கள்.

ஆம்! உலகம் எப்போதும் ஒரேமாதிரியாகத்தான் இருப்பது போல தோன்றும் அதை எப்போதும் பல்வேறு பரிமாணங்களில் பார்த்து கவனிப்பதும், ரசிப்பதும் நம்மிடம்தான் இருக்கிறது. மனதை விழிப்பாக, தெளிவாக, ஆனந்தமாக வைத்துக் கொள்ளுவது என்பது வாழ்க்கையில் புதிய விடயங்களைப் புரட்டிப்பார்க்கிற போதும், வழக்கமான உங்கள் செயல்களில் சின்னச் சின்ன மாற்றங்களைச் செய்கிற போதுதான் ஏற்படுகிறது. அதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கு. இருக்கிற வேலை யைப் பார்க்கவே சரியாக இருக்கு என்று உங்களுக்குள் சலித்துக் கொள்வீர்களென்றால் நீங்கள் விரைவில் மனஅழு த்த நோய்க்கு ஆளாக போகிறீர்கள் என்பது தான் முடிவு.


என்னுடைய வழக்கமான மருத்துவப் பணிகளுக்கிடை யில் நிறைய நூல்களைப்படிப்பது, புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது, என்னுடன் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை படித்த நண்பர்களுடன் தொலைபேசியில் அரட்டையடித்து மகிழ்வது, பல்வேறு தலைப்புகளில் பல்வேறு பத்திரிகைகளில் கட்டுரைகள், கவிதைகள், எழுதி மகிழ்வது, வாரமொருமுறை வானொலியில் மூன்று மணிநேரம் நிகழ்ச்சிகள் செய்வது, அவ்வப்போது தொலைக்காட்சியில் நிகழ்ச்சி செய்வது, கூட்டங்களில் உரையாற்றுவது, கருத்தரங்குகள் நடத்துவது, ஆண்டவனின் ஆலயப்பணிகள், மருத்துவர் கருத்தரங்குகளில் கலந்து கொள்வது அதில் உரையாற்றுவது, பயிற்சிக்கு வரும் மருத் துவ மாணவர்களுக்கு வகுப்புகள் எடுப்பது, நண்பர்கள் வீடுகளுக்கு அவ்வப்போது விசிற்அடிப்பது, ஒரே இடத் தில் அல்ல புதிய கடைகளில் மாற்றி மாற்றி சொப்பிங் செய்தல் இன்னும் பல.

ஆம்! ஒவ்வொன்றிலும் புதிய அனுபவம். இதற்கிடை யில் தியானம். யோகா. ஜெபம். எதிலும் சலிப்புத்தட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல் வைத்தியத்தில் பல துறைகளில் சேவை

- General Dentistry ■ பல் / முரசு பராமரிப்பு
- Implant Supported teeth ■ செயற்கை பல் நடுதல், நிரந்தர பல் நடுதல்
- Braces Treatment ■ பற்களை ஒழுங்கு படுத்துதல்
- Cosmetic Dentistry ■ பற்களை அழகு படுத்துதல்
- Oral Surgery ■ ஞானப்பல் அகற்றுதல்
- Root Canal / Crown / Bridge Treatment ■ நோயுற்ற, பழுதடைந்த பற்களை பாதுகாத்து மீளமைத்தல்



டாக்டர். சபாபதி இரவீந்திரன்
பல் வைத்தியர்

**Dr. Sabapathy Raveendran** B.D.S., M.S., F.D.S.R.C.S. (Eng.)
**Dental Surgeon**

1139 Morningside Ave., Suite 25 (Morningside & Sheppard) Scarborough, ON M1B 0A7 Tel: 416 283 9000
102 - 3025 Hurontario Street (Dundas & Hwy.10) Mississauga, ON Tel: 905 270 7844


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. ஏனென்றால் ஒவ்வொரு விடயத்திலும் ஒவ்வொரு தடவையும் புதிய அனுபவங்கள், புதிய கோணத்தில் பார்த்தல், ஒவ்வொன்றையும் ரசித்து அனுபவித்து செய்தல் தான் காரணம்.



**மூக்கை நுழைத்தல்:-**

எந்த கணத்தையும் சுவாரஸ்யமாக்கிக்கொள்ள நம்மைச்சுற்றியும். நமக்குள்ளும் எத்தனை விடயங்கள் நிறைந்திருக்கின்றன. நாம்தான் அவற்றைக் கவனிக்காமல் ஏக பிசியாக இருக் கிறோம். அடுத்து முக்கியமான விடயம். எந்த ஒரு செயலையும் செய்யத்தொடங்கு முன்பு அதில் இருக்கிற சாதக பாதகங்களைப்பற்றி ஆராய்கிறோமோ இல்லையோ மற்றவர்கள் என்ன நினைப்பார்கள். அதிலும் குறிப்பாக நமக் குப் பிடிக்காத சிலரின் பெயர்தான் முதலில் நினைவிற்கு வரும்.

ஆம்! அவர்கள் என்னதான் நினைத்துக் கொள்வார்கள் என்பதில்தான் மனம் குறியாக இருக்கும். எது எப்படி யிருந்தாலும் நாம் ஒரு சமூகத்தில் ஒரு அங்கமாக வாழ் கின்றோம். குடும்பம், உறவுகள், நண்பர்கள், பிடித்தவர், பிடிக்காதவர், எதிரிகள் என்று ஒரு பெரியகூட்டமே நம்மை சூழ்ந்து இருக்கிறது.

இவர்களிடம் ஆலோசனை கேட்பது, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது தவறல்ல. அதேபோல நீங்கள் எண் ணியதெல்லாவற்றையும் செய்யலாம் என்றும் நான் சொல்ல வில்லை.

ஆம்! இந்த உறவுகள் தான் நமக்கும் பலம். சமூகத் தோடு இணைந்தது தான் வாழ்க்கை. ஆனால் நான் முதலில் சொன்னது வேறு. மூக்கை நுழைப்பது என்பது வேறு. இதில் இரண்டு வகை. நாம் மற்றவர்கள் விடயத்தில் மூக்கைநுழைப்பது. அடுத்தவர்கள் நம்விடயத்தில் மூக்கை நுழைப்பது.

இதுதான் பிரச்சினைக்குரிய விடயமாக மாறிவிடுகிறது. இதில் நான் குறிப்பாக சொல்லுகிற விடயம் என்னவென்றால், உங்களின் விருப்புவெறுப்புகளை அவர்கள்தான் தீர்மானிக்கிற சக்தியாகிவிடுகிறார்கள். ஆலோசனைகள் கேட்டல் என்பது வேறு, தீர்மானித்தல் என்பது வேறு.

நல்லது கெட்டதுக்கு நாலுபேர் தேவை என்றாலும் பெரும்பாலான விடயங்களில் தீர்மானிக்கும் சக்தி யாக நீங்கள் இருப்பதுதான் நல்லது. என்றாலும் சில விடயங்களில் கூட்டாக சேர்ந்து முடிவுகளை எடுப்பது குடும்ப ஆரோக்கியத்திற்கு உகந்ததாகும்.

இதுவேதான் சமூகத்திற்கும் நாட்டிற்கும் மிகப்பொருத்த மானதாகும்.

**எல்லோரையும் நம்புவதும் ஆபத்து, யாரையும் நம்பா மல் இருப்பது பேராபத்து!**

நீங்கள் மற்றவர்களுடன் உங்களை எப்போதும் ஒப்பிடுவதால் மேலும் பலவீனமாகிறீர்கள். யாரையாவது எப்போதும் குறைசொல்லிக் கொண்டேதான் இருப்பார். இவருக்கு இதுதான் வேலை என்று உங்களுக்கு எதிராக ஒரு பெரியகூட்டத்தையே உருவாக்கி விடுகிறீர்கள். இதனால் உங்களுக்குள் ஒருவித பயம், படபடப்பு, வெறுப்பு உருவாகிறது. காலப்போக்கில் இது மனவழுத்தமாக மாறிவிடும். மென்மேலும் உங்கள் குறை சொல்லும் திறன் அதிகமாகிக் கொண்டேபோகும். உங்களின் கருத்துக்கு எதிராக ஒரு கருத்தை சொல்லும் எவரும் பார்வையில் உங்களுக்கு எதிரியாகி விடுவார்கள்.

ஆம் அடிப்படை என்னவென்றால். நீங்கள் மற்றவர் களை எப்படி நினைக்கிறீர்களோ அவர்களும் உங்களை அப்படித்தானே நினைப்பார்கள். கடைசியில் யாரைத்தான் நம்புவது, யாரை நம்பாமல் விடுவது என்ற குழப்பம் மேலோங்கி நீங்கள் மற்றவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தனிமைப்படுத்தப்படுவீர்கள். ஒரு அறிஞர் இப்படிச் சொன்னார் "எல்லோரையும் நம்புவதும் ஆபத்து. யாரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து."

நீங்கள் எண்ணுவது போல உலகம் இருக்காது. உங்களின் கசப்பான அனுபவங்ளை, வறட்டு நம்பிக்கை களை, குருட்டுக்கண்களை கொஞ்சம் தள்ளிவிட்டு மனம் விட்டுப் பேசி, மன்னித்து, அன்புகாட்டி ஏற்றுக்கொண்டு பழகிப் பாருங்கள். நீங்கள் இப்படி எறிகிற பந்து மீண்டும் உங்களிடமே திரும்பி வந்துவிடும்.

நீங்கள் எப்போதும் எதையாவது நம்பித்தான் ஆக வேண்டும். கடவுள் நம்பிக்கை உட்பட. அதற்காக கடவுளை நம்புகிறேன் என்ற பேரில் முட்டாள்தனமான, மூடத்தன மான நம்பிக்கைகள் வேண்டாம்.

மத நம்பிக்கைகள் எல்லாம் இறை நம்பிக்கையல்ல. இறைவனை நம்புவது என்பது மதம் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TD Canada Trust



Mr. Moon Mahalingam

Mobile Mortgage Specialist
(TD Canada Trust)

Cell : 416.319.6654
moon.mahalingam@td.com



We've got the right mortgage for you

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொஞ்சம் உங்களைக் குழப்பி விட்டேனோ. மீண்டும் ஒருமுறை அந்த வரிகளைப் படித்துப் பாருங்கள் உண்மை விளங்கும். மதம். இறைவழிபாடு. நம்பிக்கை என்றபெயரில் மூடநம்பிக்கைகளைத்தான் போதித்து, கடைப்பிடித்து வருகின்றோம். இறைவனை, இறைத்தன்மையினை எங்களுக்குள் உணர்ந்து கொள்ள பெரும்பாலும் தவறிவிடுகிறோம்.

### எது இறை நம்பிக்கை:-

தொன்றுதொட்டு தெய்வங்களைத் தொழுகிறோம். கோவில்களையும் செர்ச்சுகளையும் தரிசித்து பாத யாத்திரைகள் பலவும் செய்கிறோம். இவற்றின் நான்கு சுவர்களுக்குள் தான் விடையிருக்கிறதென்று தேடிப்பார்க்கிறோம். துன்பங்கள், பாவங்கள், சாபங்கள், வாழ்வில் வறுமையும் வறட்சியும் எஞ்சியும் மிஞ்சியும் நிற்கிறது. எங்கள் தேடலில் எங்கோ தவறிருக்கிறது. ஆண்டவனைப்பார்த்து எதைக் கேட்கிறோம். அதைக் கொடு இதைக்கொடு, கொடுத்தால் இவ்வளவு கமிசன், படைத்த பரமனிடம் பேரம் பேசுகிறோம் வேண்டுதலை வாய்க்கச் செய்தால் அதைத்தருகிறேன், இதைச் செய்கிறேன் என்கிறோம். உங்களிடம் பிச்சையெடுக்க இறைவன் மிகக்கேவலமானவனல்ல. ஆன்மீகமெனும் அற்புத விஞ்ஞானத்தால் மெய்ஞானமுணர்ந்து மெய்யான இறைவனை உங்களுக்குள் உணருங்கள். நிம்மதியில்லா இருட்டிலிருந்து வெளியே வந்து வெளிச்சத்தை பாருங்கள் உங்களுக்கான புதிய பாதையென்று இலக்குகளோடு காத்திருக்கிறது. ஒளியும் மகிழ்வும் மனநிறைவும் அமைதியும் ஆரோக்கியமும் நிறைவாய் நிச்சயமுண்டு.

அதற்கான இலட்சியத்தேடலில் இன்றே இறங்குங்கள். முதலில் உங்களின் இதயத்தை தட்டுங்கள். முதலில் அது திறக்கட்டும்.

நம்பிக்கையென்பது அறிவுப்பூர்வமாக இருக்க வேண்டும். மடமைத்தனமானதாக இருக்கக்கூடாது. இந்தக்கதை ஒரு பழைய கதையென்றாலும் ஒரு நல்ல கதையென்பதால் தருகிறேன்.

கடவுள் மீது அபரிமிதமான நம்பிக்கை கொண்ட ஒருவர் ஒரு முறை தவறி கிணற்றில் விழுந்துவிட்டார். எப்படியோ காயம் எதுவுமின்றி உயிர் பிழைத்த அவர் இறைவனை நோக்கி வேண்டுதல் செய்தார்; எப்படியாவது தன்னைவந்து காப்பாற்றி வெளியே தூக்கி விடுமாறு பல மந்திரங்களையும். ஜெபங்களையும் ஏறெடுத்தார். மிகுந்த சத்தத்தோடு கடவுளை நோக்கி கூப்பிட்டார். அந்த சத்தத்தை கேட்டு வழியோரம் நடந்து சென்றவர் கிணற்றை எட்டிப்பார்த்தார். உடனே அவரை காப்பாற்ற எண்ணி ஒரு கயிறை கிணற்றுக்குள்ளே விட்டார். அதைப்பிடித்து ஏறிவருமாறு பணித்தார். கிணற்றுக்குள் இருந்தவர் நான் மிகுந்த இறை நம்பிக்கையுள்ளவன். இறைவன் வந்து என்னைக்காப்பாற்றுவார் என்றார். தன்முயற்சி பலிக்கா ததால் கயிறு போட்டவர் ஊருக்குள் சென்று இன்னொருவரை அனுப்பி ஏணியொன்றை கிணற் றுக்குள் விடுமாறு செய்தார். அதையும் மறுத்த அவர் இறுதியாக இறந்து இறைவனடி சேர்ந்தார். பரலோகம் சென்ற அவர் இறைவனிடம் கோபமாக கேட்டார். உன் மீது எவ்வளவு பாசமும். நம்பிக்கையும் வைத்திருந்தேன். இப் படி கைவிட்டு விட்டாயே என்று புலம்பினார். அதற்கு கடவுள் சொன்னாராம் நான் தான் கயிறு கொண்டு வந்தவரைப்போன்றும். ஏணி கொண்டுவந்தவர் வடிவிலும் வந்தேனே நீதான் புறக்கணித்து விட்டாயே என்றாராம்.



**சர்வதேச ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீ தம் பிள்ளை கனடாவிற்கு வருகை தந்திருந்த போது முன்னாள் இலங்கை நாடளுமண்ற உறுப்பினரும், நாடு கடந்த தமிழீழ அரச உறுப்பினருமான திரு.மா.க.ஈழவேந்தன் அவர்கள் நவநீதம் பிள்ளை அவர்களின் கரங்களை கைப்பற்றி யான் உனைச் சிக்கெனப் பிடித்தேன் ஈழம் பெற உதவாது எங்கு நீ செல்ல முடியும் என உணர்ச்சிகரமாக ஈழம் ஒன்றே வேண்டும் என்ற தனது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினார். இழப்புகள் ஆயிரம் ஆயிரம் ஆகலாம் ஆனால் தமிழ் ஈழம் என்பதே தமிழனின் கொள்கையாக இருக்க வேண்டும்.**

(தளிரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்க மறந்த கலைஞர்

கவித்தளிர்

**கவியாக்கம் : டாக்டர். போல் யோசேப்**

தமிழினத் தலைவர்
தன்மானத் தலைவர்
தன்னினம் காத்திட
தவறியதேனோ,

மானமுள்ளதமிழினம்
மானுடமுள்ளவரை
மன்னிக்கமுடியாத
மாபெரும் வரலாற்றுத் தவறி
ழைத்தாய்.

கறுப்புக் கண்ணாடி
கண்களைமறைத்ததினால்
காரிக்கட்டைகளாகி
காரிகாலன் இனம்
காலன் கைகளில்
கைமாறியதை
கவிபாடக்கூடமறந்துவிட்டாய்.

மஞ்சள் துண்டுகள்
மறைக்கமறுத்தது
மானமுள்ளதமிழச்சிகளின்
மானத்தை.
மானமிழந்து
மடிந்துபோனது
மஞ்சள் தாலிகட்டிய
மரபுத் தமிழினம்,

வானுயரவள்ளுவன் சிலைவடித்து
வள்ளுவன் புகழ்பாடிய - நீ
வஞ்சனைகள் சூழ்ச்சிகளால்
வஞ்சகமற்ற
வன்னித் தமிழரை
வாழ்விழக்கவைத்ததேனோ?

கபடநடிகனாகிகைவிட்டதால்
காடையச் சிங்களத்தின்
களப்பலிக் கிரையாகி
காணாமல் போனது
கால் லட்சம் உறவுகள்
கடைசி யுத்தகளத்தில்.

நல்லநடிகன் உன்
நாலுமணித்தியால
நடிப்பு உண்ணாவிரதத்தில்
நாற்காலியைகாத்துக் கொள்ள
நன்றாகநடித்ததால்
நம்மினத்தவர்கள் - இன்று
நாற்சதுரக்கம்பிவேலிக்குள்
நாதியற்றுநரகவேதனையோடு.

செந்தமிழ் மொழியை
செம்மொழியாக்கிடவே
செங்கோட்டை
சென்றுவந்தாய்
செந்தமிழர் நாம்
செங்குருதிசிந்தி
செத்துமடிந்தபோது - உன்
செந்தமிழ் வாய்மூடி - ஏதும்
செய்யாமல் மௌனித்ததேனோ,
உலகத் தமிழினமே
உன்னைநம்பியிருக்க
உணர்ச்சிகளைஏனோ? நீ
உள்ளடக்கி - உன்
உணர்வுகளைஊனமாக்கியதால்
உன்னூரிலிருந்துசற்றுத்
தொலைவில்
உறவுகள் துடிதுடித்து
உயிரோடுபதுங்கு குழிக்குள்
உயிரினும் மேலான - உன்
உடன்பிறப்புகள்
உயிர் விட்டனரே.

குறளோவியம் தந்தவரே
குலத் தமிழினத்தை
குலைகுலையாய் கொத்தணிக்
குண்டுகளைப் போட்டு
கும்பல்களால்
கொலைசெய்தபோது
குரல் கொடுத்துக் குமுறாமல்
குனிந்து தலை குனிந்து
கொண்டதேனோ,

(தங்களின்
தமிழ்ப்பணிக்குத்
தலைவணங்குகிறேன்,
வலிகளுக்காக
வருத்தப்படுகிறேன்
மன்னிக்கவும்)

## சங்கே முழங்கு....!

சங்கே முழங்கு தமிழ் சங்கே முழங்கு
தளிர் சஞ்சிகை இரண்டாம் ஆண்டினை
கடந்ததென
சங்கே முழங்கு தமிழ் சங்கே முழங்கு

சங்க காலம் முதலாய் சரித்திர ஆராய்ச்சி
தொல் பொருள் காலம், தொலை நோக்கு
பாலம் என
தொன்மை பேசிடும் தளிர் சஞ்சிகை புகழ்
பாட
சங்கே முழங்கு தமிழ் சங்கே முழங்கு

சிறுவர் பூங்கா , சிரித்திட பேசும்
பல அறிவியல் அழகியல் அஞ்
ஞானக்கதை பேசும்
தளிர் சஞ்சிகை புகழ் பரவ
சங்கே முழங்கு தமிழ் சங்கே முழங்கு

தாவரங்கள் துளிர் விட
இளவேனிற்காலம் அது.
தளிர் சஞ்சிகை வெளிவர காலாண்டு
காலமிங்கு.
பூவாயிரம் பூத்ததந்த தரனியிலும்.
பூலோகம் புகழ் சொல்ல புதிய
படைப்புகளுடன் தளிர் இதுவும்.

வாழ்கவே வளர்கவே வாழிய வாழிய
என
சங்கே முழங்கு தமிழ் சங்கே முழங்கு

விஜி லக்ஸ்மி காந்தன்
நோர்த்யோக்
தளிர் வாசகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கர்ணர்கள்

## கனக மனோகரன்



இணையிலா இதிகாசங்களான பாரதத்திலும் இராம காவியத்தில் பங்குகொண்ட உன்னத பாத்திர வார்ப்பு களான மூன்று கர்ணர்களை நேய நெஞ்சங்களின் நினைவுத் திரைகளில் நிழலாட விடுகின்ற எத்தனமே இந்த எழுத்து. இது, தளிர் இதழில் துளிர் விடுகின்ற என் கன்னிப் பிரயத் தனம்.

### கண்ணனுக்கு கொடை கொடுத்த கர்ணன்

முக்கர்ணர்களுள் முக்கியமானவன்? கொடைக்கு முன்ன வன்; அங்க தேய மன்னவன்; நட்பிற்கு இலக்கணமான திண்ணியன்; விற்போர் ஆற்றலில் பேராற்றல் பெற்றவன்; வாழ்கையில், ஓடுகின்ற தேரை ஒட்டுகின்றவன் மகன் என்ற எள்ளல் ஏற்றும், இழிசொல் கேட்டும் உளம் உலைந்தவன். மாள்கையில், ஓடாத ஒரு தேர் அருகில் தேரோட்டியான தெய்வத்திற்கே கொடை கொடுத்தவன் என்ற பார் புகழும் பேர், புகழ் கொண்டு சரிந்தவன். இறக்கையிலும் இவன் கொடையை மறக்கவில்லை. கண்ணனுக்கு கர்ணன் உரைத்த காவிய புகழ்கொண்ட பாவரிகள்,...

"ஆவியோ நிலையின் கலங்கியது; யாக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியோன் வேண்டும் பொருளெலாம் நயக்கும் பக்குவம் தன்னில் வந்திலையால்
ஒவு இலாது பயன்செய் புண்ணியம் அனைத்தும் உதவினேன் கொள்க நீ உனக்கு
பூவில் வாழும் அயனும் நிகர் அலன் என்றால் புண்ணியம் இதனிலும் பெரிதோ?"

குமண வள்ளல் காட்டுக்குத் தேடிவந்த புலவனிடம்
'அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்'
என்றதோடு அமைந்திலன்.
'தலை தனைக் கொண்டு போய் தம்பி கைக் கொடுத்து
விலை தனைப் பெற்றுன் வறுமைநோய் களைகவே'

என்று மேலும் சொல்லினன். அங்ஙனே, கொடை வள்ளல் கர்ணனும் "பாவியோன் வேண்டும் பொருளெ லாம் நயக்கும் பக்குவம் தன்னில் வந்திலை" என்ற கூற்று டன் நின்றிலன். செத்தும் கொடை கொடுத்தான் சீதக்காதி வள்ளல் என்பார்கள். கர்ணனோ, செத்திடுகையிலும் ஈகை செய்திடுதலை கைவிட்டிடாதவன்!

### நித்தியத்தை நினைத்தவன்!
### நித்திரையை அணைத்தவன்!!

'கன்னனெடு கொடை போயிற்று – உயர்
கம்ப நாடானுடன் கவி போயிற்று'

இவை, "சுப்பராம தீட்சகர்" மகுடத்தில் இடம் பெற்ற பாமன்னனின் பாவடிகள். சூதால் அழிவிற்கு மகாபாரதம்: மாதால் அழிவிற்கு இராமாயணம்; மண்ணாசையால் மகாபாரதம், பெண்ணாசையால் இராமாயணம் என்றும் சொல்லலாம்; கொள்ளலாம். கம்பன் உருக்கொடுத்து உலவவிட்ட ஒரு கும்பன்தான் கும்ப 'கர்ணன்'. கொடிய காலனையே ஆட்டுவித்த பெரிய தீரன். மாற்றான் மனை யாளை துணையாள் ஆக்குதல் பிழை ஆகும் என்றும் அதன் விளைவு பீழை ஆகும் என்றும் மதியுரை செய்த மாசிலான். அண்ணனுக்காக தன் இன்னுயிரை இவன் வதைத்தவன். ஆனால், ஓர் அண்ணனாக தம்பி விபீ சனை வாழவும் ஆளவும் ஆலோசனை அளித்தவன். கும்பகர்ணன் உருவத்தால் ஒரு சதைக்குன்றம். ஆனால், உன்னத உள்ளத்தால் ஒரு குணக் குன்றம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவரில் இவன் ஒருவன்!

## கௌரவத்திற்கு இவனே உரியன்!!

'ஆர்த்த சபை நூற்றொருவர்
ஆயிரத்து ஒன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்து ஒருவர்' இது பழந்தமிழ்ப் பனுவல் கூற்று.

தர்மன் "எம்முள் பகை வந்தால் நாம் ஐவர்; கௌரவர் நூற்றுவர்; வெளிப்பகைவர் வந்துவிட்டாலோ நாம் நூற்றியைவர்" என்றனன். அந்தக் கௌரவர்கள் நூற்றுவரில் போற்றுதலுக்கு உரிய ஒரே ஒருவன் பேர் விகர்ணன். அண்ணர்கள் (துரியோதனன், துச்சாதனன்) தவறை தவ றென அஞ்சாது சபையினில் சொன்னவன். கல் உடலும் கல் உளமும் கொண்ட காவியப்படைப்பு வீமன். அவனே, கௌரவர்கள் நூற்றுவரையும் கூற்றுவனைக்கு இரையாகக் கொடுத்தவன். விகர்ணன் கதையும் பீமனின் கதையால் (கதாயுதத்தால்) முடிகின்றது. அந்நிலையில், கலங்காத வீமனையே 'கதை'யை தரையில் வைத்துவிட்டு கலங்கி அழவைத்த விகுணம் இல்லாத சேற்றினில் மலர்ந்த செந் தாமரை இந்த விகர்ணன். அண்ணன் அணிக்கு வலி சேர்க்க, செஞ்சோற்றுக் கடன் தீர்க்க செத்து மடிந்தவன் தான் விகர்ணன் என்ற செம்மனச் செம்மல்.

இக்காவிய நாயகர்கள் மூவருமே அறிவு, ஓர்ப்பு, கடைப்பிடி, நிறை ஆகிய ஆண்களில் நாற்குணங்களின் அற்புதக் கலவைகள் தாம். மூன்று கர்ணர்களுமே செஞ் சோற்றுக் கடனுக்காக வெஞ்சமர் கண்டு விழுந்து படுவதில் ஒத்த கோட்பாட்டினர் தாம். ஆனால்......

### மாறுபடும் கர்ணன்

### மகாபாரதத்து கன்னன்

"தோன்றிற் புகழோடு தோற்றுக" என்றவன் தகை இல் லான் அல்லன்; தகை சான்ற வள்ளுவப் பெருந்தகை. 'இல்லையேல் தோன்றாமை நன்று' என்றும் அவனே அழுத்தம் திருத்தமாய் திருவாய் மலர்ந்தான். கர்ணனோ 'திரு' உள்ள ஒரு கருவாக உருவானவன் அல்லன். கருவினை தந்த வனைத்தானே தந்தை என்றோம். கர்ணனின் தந்தை கதிரவன் தொலை இயக்கி (Remote Controller) மூலம் பிள்ளை வரம் அளித்ததோடு அப்பிதாவின் பணி முடிகிறது. ஆகாய வீதி உலாவை ஆதவன் தொடர்கிறான். பேணி வளர்க்க வேண்டிய மாதவளோ பேழையில் அவனை மிதக்கவிடும் பாதகம் புரிகிறாள். (பின்னர் அவனிடம் அவள் வந்து 'தா வரம்' எனக் கேட்டதும் அவனளவில் 'சா வரம்' தான்!)

'வலிமை சேர்ப்பது தாய் மூலைப் பாலடா' இது பாரதி யின் பாவடா! கர்ணன் தாய்ப்பால் பருகி வலிபெற்று வாழ்ந்தவன் அல்லன். தாய்ப்பால்ப் பருகாத மன வலியோடு வாழ்ந்தவன். அவன், 'கொடைக்கு கர்ணன்'



என்ற பேரை மட்டும் பெற்றிலன், 'வில்லுக்கு விசயன்' எனப் பேரெடுத்த அர்ச்சுனனுக்கு இணையான வில்லவன், வல்லவன் என்ற பேர்களும் பெற்றவன். மாரதர்களில் ஒருவன் என மதிக்கப் பட்டவன்.

மாதாவுடன் உணவின் சுவையும் தாதாவுடன் அறிவின் தரமும் போகும் என்பார். இறப்பது உடன் பிறப்பேல் வாகு வலி போகுமென்பார். "தம்பி உள்ளான் சண்டைக்கு அஞ்சான்" என்பார்கள். கும்பகர்ணனும் விகர்ணனும் மூத்த உடன் பிறப்பிற்காக உயிர் விட்டு இப் பழமொழிகளுக்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பொலிவு சேர்த்தார்கள். ஆனால், கர்ணனின் கதையே மாறுபாடானது. பிந்திய நிலையினில் அவன் குந்தியின் வாயினால் பஞ்சவரும் தானும் ஒரு தாய் மக்கள் என்பதைத் தெரிந்து கொள்கின்றான். இருப்பினும் குருஷேத்திரப் போர்க்களத்தில் தம்பியர்க்கு எதிராகக் களம் கண்டான். ஒரு தம்பியின் கரத்தாலே வதம் கொண்டான்.

குந்தி கர்ணனை கவர்ந்திழுக்க உனக்கு ஆட்சி உரிமையைப் பற்றத் தருகிறேன். திரௌபதையில் ஆறிலொரு பங்குரிமையை பெற்றுத்தருகிறேன் என்றெல்லாம் ஆசை காட்டுகின்றாள். குந்தியைப் பொறுத்த மட்டில் பாஞ்சாலி நிந்தமாக்கப்பட்டு ஒருவருக்கு சொந்தம் ஆக்கப்படாத ஒரு சொரியல் ஆதனம்.

"அத்தை ஒரு சொல் உரைத்தாள்
ஐவர் எனைப் பிய்த்தெடுத்தார்"

என்ற கவியரசின் கந்தக வரிகள் இழிந்த இச் செயற்பாட்டுக்கு எதிரான கண்டன வெளிப்பாடு!

கர்ணனோ தாய் சொல்லைத் தட்டுகிறான். துரியனுடன் தனக்குள்ள நட்பின் உயர்வை நயம்படச் செப்புகின்றான்.

இன்னவன் இனியான் என்று யாவரும் அறியும் வண்ணம்
மன்னவன் இவனே என்று மாமணி மகுடம் சூட்டி
தன்னுடன் கூட வைத்துண்டு தார்மணி பொறுக்கி கோத்த
மன்னவன் செய்த நீதி மறப்பனோ இறப்புக் கல்லால்

## துரியனின் துணை ஆனவன் துரோகத்திற்கும் துணை போயினான்

கர்ணனுக்கும் துரியோதனுக்கும் இடையில் மலர்ந்த நட்பு நல்லதோர் நட்பிலக்கியந்தான்; ஐயமில்லை! ஆயின், நட்பிலக்கணத்திற்கு கர்ணன் களங்கம் சேர்த்தவன் எனத் துணிந்து சொல்வேன்.

நல்வாழ்விற்கு இலக்கணம் வரைந்த வள்ளுவன் நட்புக்கு வகுத்த வரைவிலக்கணம்...
'நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு'

நண்பன் தப்புத்தாளம் போடுகையில் பக்கதாளம் போடுவதோ, தட்டிக்கொடுப்பதோ நட்பு இல்லை. தட்டு கொடுப்பதும், தட்டிக் கேட்பதும், இடித்தும் வெடித்தும் உரைத்து அவனைத் தடுத்து நிறுத்துவதும் பாங்கான நட்பின் பாகங்களாகின்ற செயற்பாடுகள் ஆகும்.

பாட்டுக்கொருவனின் கூற்றுக்கு அமைய திரௌபதியை 'மாடு நிகர்த்துச்சாதனன் அவள் மைக்குழல் பற்றி' அவைக்கு இழுத்து வருகிறான். துட்டன் துரியன் அவையினில் "அவள் துயிலினை உரிந்து என் தொடையில் இருத்து" எனக் கேட்கிறான்.

அடிமைக்கு உரிமை இல்லை; உடமை இல்லை தன்னைத் தோற்றபின் தருமனுக்கு என்னை வைத்துச் சூதாட எந்த உரித்துவமும் இல்லை என்பது துருபதன் மகளின் தாக்கம் மிக்க தர்க்க வாதம்!

நீதிக்காய் குரல் கொடுத்த விதுரன் சோர்கிறான். பின்னொரு கட்டத்தில் பொறி கலங்க, அறிவு மயங்க, சாய்கிறான்.

'பிதாமகன்' எனப் பேரெடுத்த பீட்டன் பீஷ்மன்,

"ஒருவன் தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றவர்க்கு தந்திடலாம்
முற்றும் விலங்கு முறையன்றி வேறில்லை
தன்னை யடிமையென விற்றபின் னுந்தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு"

என ஈனமொழி பேசுகிறான்.

இதற்கு முன்னர், துச்சனை விழித்து திரௌபதை உரைத்த வாசகம்.....

'என்னைப் பிடித்திழுத்தே ஏச்சுகள் சொல்கிறாய்
நின்னை எவரும் நிறுத்தடா என்பதிலர்
என் செய்கேன்?'
'என்றே அவள் இரைந்தழுதாள்.பின்னரும் அவள்,
பெண்டீர் தமையுடையீர்; பெண்களுடன் பிறந்தீர்
பெண்பாவம் என்ற பெரியவசை கொள்வீரோ
கண் பார்க்க வேண்டும்'

எனக் கையெடுத்துக் கும்பிட்டாள். இந்நிலையில் நீதி தேவதையின் நேரிய குரல் ஒருவன் வாயினால் அவ்வவையில் ஓங்கி ஒலிக்கிறது. அவன்? விகர்ணன்!

ஆர்த்த சபை நூற்றொருவர்
ஆயிரத்து ஒன்றாம் புலவர்
வார்த்தை பதினாயிரத்து ஒருவர்

என்கிறது ஒரு மூத்த இலக்கியம். ஆர்த்த – ஆர்ப்பரித்த அந்த அவையில் அந்த அபலைக்காக அவன் அபயக்குரல் கொடுக்கிறான். (அவனை ஆயிரத்தில் ஒருவன் என்றால் சில நேயர்களுக்கு எம்.ஜி.ஆர் நினைவுக்கு வந்து விடலாம்.) பண்பின் சிகரமான அவனை துணிந்த நான் பதினாயிரத்து ஒருவன் என்பேன். "பீட்டன் பீஷ்மர் நெறி என்றான், வழுவே சொன்னான்" என் அவரை நேரடியாகவே விகர்ணன் சாடுகின்றான்.

## ஆதவன் பெற்றவனின் கேவலம் கெட்ட செயல்

அந்நிலையில் வில்லவன் கர்ணன் எழுந்து நல்லவன் விகர்ணனை விழித்து அறிவிலாய், புலனுமில்லாய், நாணமில்லாய், பொறுமை இல்லாய், நீதி அறியாய் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MEGA Financial Group

## Our Products:

- Critical Illness Insurance
- Disability Insurance
- Dental & Drug Insurance
- Travel Insurance
- Non-Medical Insurance
- Mortgage Insurance
- Life Insurance Products
- RRSP'S & Investments
- RESP - Education Saving Plan
- Final Expense Products
  (Through Funeral Homes)



**Raj Nadarajah**
President & C.E.O
**416-666-1120**
raj@megafinancial.ca

Empire Life · Equitable Life of Canada · Assumption Life · Sun Life Financial · Desjardins · UL Mutual · LaCapitale · Industrial Alliance Insurance and Financial Services Inc. · Manulife Financial · RBC Insurance · Canada Life

416-293-5559 ex 27 PH28-4168 Finch Ave. E.
Scarborough, ON. M1S 5H6

www.megafinancial.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதங்களை பாவித்து அவனை கேவலப்படுத்தினான். பாண்டவரைப் பார்த்து அடிமைகள் மார்புத் துணி அணிய முடியாதென்றான். திரௌபதையை சீரிய மகள் அல்லள் ஐவரை கலந்தவள் என வைகின்றான்.

'யாரடா பணியாள்! வாராய்
பாண்டவர் மார்பில் ஏந்தும்
சீரையும் களைவாய், தையல்
சேலையும் களைவாய், என்றான்

பஞ்சவர்கள் அந்நிலையில் தாமாகவே மேலாடைகளைக் களைந்தனர்.

ஒரு சமயம் பேரறிஞர் அண்ணா சொன்னார் 'பதவி தோளில் போடும் துண்டு; கொள்கை இடுப்பில் கட்டும் வேட்டி, துண்டு நாகரிகக் குறி; வேட்டியோ பண்பாட்டு அம்சம்' பாண்டவர்கள் களைந்தது மேலாடைகள் தாம் என்றாலும் மேன்மை தாங்கிய பாண்டு மன்னனின் மேதா விலாசம் பொருந்திய மகவுகளான பஞ்ச பாண்டவருக்கு கர்ணன் ஏற்படுத்திய களங்கம் ஒரு பேரவலம்; பெருத்த அவமானம்!

மேலும், நா கூசாது தையல் சேலையும் களைவாய் என்ற அதிர்வு தரும் சொற்பதங்கள் கதிரவன் மைந்தன் வாயிலிருந்து பிறக்கின்றன. சூரியனுக்கு சௌரன் என்ற இன்னோர் பேரும் இருக்கின்றது. இந்து மதம் ஆறு உட் பிரிவுகளை – உப மதங்களைக் கொண்டிருக்கின்றது. அவற் றினுள் ஒன்று சௌரம். சௌர மதத்தவர்கள் ஆதவனையே அன்றாடம் தொழுபவர்கள். சூரிய நமஸ்காரம் புரிபவர்கள். சூரியனே சகல நலன்களையும் சௌபாக்கியங்களையும் சௌஜன்னிய வாழ்வையும் தருவான் என்று நம்புகின்றவர் கள்.

இந்த இறை குமாரன் தான் கௌரவர் சபையில் முறை கெட்டு நடந்த மூன்றாமவன். இந்த ஆத்தன் மகனான அதி உத்தமன் அந்த அவையில் சாத்தான் பாணியில் செயற்படக் காரணம் என்? இந்தப் பெருங்குணத்தான் பெண்ணியத்தை பெரிதாக மதித்தவன் அல்லன். பெண் ணினத்தில் கர்ணன் காழ்ப்பும் வெறுப்பும் கொள்ள கனங்காத்திரமான காரணங்கள் இருக்கவே செய்கின்றன. தாயவளோ தனியொரு தினமேனும் அவனை சீராட்டி, பாராட்டி பாலூட்டினாள் அல்லள். பார் ஆண்ட மன்னன் மகளான மனையாளும் தேரோட்டி மகனாகக் கருதப்பட்ட கர்ணன் என்ற கணவனை கண் அவன் ஆக கருதி மதித்திளள். இன்றைய நவீன உளவியல் மருத்துவம் பெண்ணியத்தை கண்ணியம் அற்று நடத்திடும் உள நிலைப்பாட்டை "misogynist" என்ற சொற்பதத்தால் சுட்டுகின்றது. இரந்திட ஈதலைச் செய்த கர்ணன் அந்த அவையில் இரக்கமற்ற ஈனனாக நடக்க இந்த உள அழுத்தமே காரணம்.

தாய் முலை சுரந்தது
சேய் உடல் நினைந்தது



கர்ணன் தாய் இலாத ஏக்கத்தோடும் தாய் ஆர் என அறியாததால் தாக்கத்தோடும் வளர்ந்தவன்; வாழ்ந்தவன். அந்தத் தாழ்வுணர்வு தான், தன்னிடம் வரம் கேட்க வந்த தாயிடம் பதில் வரம் கேட்க வைக்கின்றது. தான் மடிந்த பின்னர் தன்னை மடியில் கிடத்தி அழுது தன் அடையாள இலச்சினையை அகிலம் அறிந்திட வைத்திட வேண்டும் என்ற வரத்தையே கேட்கிறான். தனயனுக்கு கொடுத்த வாக்கை தாயவளும் நிறைவேற்றுகின்றாள். கர்ணன் இறந்து கிடக்கின்ற போர்க்களத்திற்கு குந்தி வருகிறாள்; குந்தி அமர்கிறாள். தன் தலைமகனின் தலைதனை தன் மடியில் கிடத்தி அழுது அரற்றுகின்றாள். அப்போது ஓர் அதிசயம் நிகழ்கின்றது. அவள் இரு முலைகளிலும் இருந்து பெரு மளவில் பால் சுரக்கின்றதாம்.

"ஊறாத பாலமுது ஊறிற்று" என்கின்றது வில்லி புத்தூரார் பாரதம். 'புற்று மண்ணில் வந்தாலென்ன மனிதனில் வந்தாலென்ன பாலூற்றுகிறோம்' என்றார் வாலிபக் கவிஞர் வாலி. மனிதர் மரிக்கையில் கிரிகை நடக் கையிலும் சாம்பல் காடு ஆற்றுகையிலும் நாம் ஆவின் பாலை ஊற்றுகின்றோம். ஆளின் பாலை ஊற்றுவதில்லை. குந்திதேவி ஒருத்தி மட்டுமே முலைப்பாலால் நனைத்தாள்; மைந்தனின் உடலத்தை அல்ல சடலத்தை! அன்னையும் பிதாவுமாகிய முன்னறி தெய்வங்களின் அணைப்பும் அர வணைப்பும் நெறியாள்கையும் இருந்திருப்பின் கர்ணன் நேர் இல்லாத, நெறி பிறழாத திருமகனாகத் திகழ்ந்திருப்பது நிச்சயம்!

அடுத்து கும்பகர்ணன் குணப்பண்புகளைப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னாசிய குடிவரவாளர்களுக்கு கைகொடுத்து உதவி வரும் சமூக சேவகருடன் ஒரு சந்திப்பு!

## தளிர் உதவி ஆசிரியர் மூர்த்தி (வீரகேசரி)

முன்பின் தெரியாத தேசத்தில் பேசும் மொழியை புரிந்து கொள்ள முடியாமலும், கடும் குளிரான கால நிலையின் தாக்கத்தினை தாங்கிக் கொள்ள முடியாமலும் கண்களைக் கட்டி காட்டில் விட்டாற் போன்று அவதியுறும் நமது தென் ஆசிய குடிவரவாளர்களுக்கு கைகொடுத்து உதவி வரும் அமைப்பு மார்க்கம் நகரில் உள்ள சமூக சேவை இணையம் ஆகும்.

புதிய குடிவரவாளர்கள் உதவி கோரி தம்மை நாடி வரும் வரை காத்திராது அவர்களை தேடிச் சென்று அறி வுரைகளையும், ஆதரவினையும் வழங்கி நம்பிக்கையினை யும் ஏற்படுத்தி வரும் மேற்படி இணையத்தின் முகாமை யாளரான காருண்ணியர் திரு. அகஸ்ரின் ஜீவானந்தன். அவரது சிறந்த சேவைகளைப் பற்றி கேட்டறிந்து அவரை பேட்டி காணும் நோக்கத்துடன் மார்க்கம் நகரில் Steels Avenue & Shadlock Street சந்தியிலுள்ள Social Service Network அலுவலகத்துக்குச் சென்றிருந்தேன். நான் 'தளிர்' சஞ் சிகையின் சார்பில் தங்களை பேட்டி காண வந்துள்ளேன் எனக் கூறியதும் அவர் எழுந்து நின்று சிரித்த முகத்துடன் கை குலுக்கி வரவேற்று உபசரித்தார்.

**இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற பல்வேறு நாடுகளிலும் இருந்து இங்கு குடி பெயர்ந்து வரும் மக்கள் சிரமமின்றி தமது வாழ்க்கையினை ஆரம்பிப்பதற்கான அத்தியாவசிய தேவைகளையும், ஆலோசனைகளையும் தாங்கள் ஏற்படுத்திக் கொடுத்து உதவி வருவதாகக் கேள்விப்பட்டேன். தத்தமது நாடுகளில் ஏற்படும் அரசியல் ரீதியான பாரபட்சமான நடவடிக்கைகள், அரச படையினரால் ஏற்படும் உயிராபத்துக்கள் போன்றவற்றில் இருந்து தமது உயிரை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் முன்பின் தெரியாத அந்நிய நாடான கனடாவுக்கு அகதிகளாக ஓடி வருவோருக்கு தாங்கள் உதவி செய்து வருவது பேருதவியாக இருக்கும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற பொது நல நோக்கு எப்படி உங்களுக்கு உருவாகியது என்பது பற்றி சற்று விரிவாகக் கூற முடியுமா?**

ஆம் நான் இலங்கையில் இருக்கும் போதே பொது மக் களுக்கு உதவும் சேவை மனப்பான்மையுடன் ஐ.நா. சபை, செஞ்சிலுவை சங்கம் ஆகியவற்றின் தலைமை அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அப்போது வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் புனர் வாழ்வு, குடியமர்வு, மனிதாபிமான நடவடிக்கைகள் ஆகிய செயல் களில் ஈடுபட்டு வந்தேன். அதனால் இலங்கையில் மாத்திரமல்ல சர்வதேச ரீதியில் சூடான், தாய்லாந்து, மியன்மார், அவுஸ்திரேலியாவுக்கு அண்மையிலுள்ள நவுறு தீவு ஆகிய இடங்களுக்கும் சென்று பாதிப்புற்ற மக்களுக்கு சேவை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை அனர்த்தங்களினால் பாதிப்புற்று இடம் பெயர்ந்த மக்களுக்கு மறுவாழ்விற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தான் என் பணியாக இருந்தது. சுவிட்சர்லாந்தில் திட்ட முகாமைத்துவம் பயிலும் சந்தர்ப்பமும் கிடைத்தது. கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களின் மறுவாழ்விற்காக நான் செய்த சேவையைப் பாராட்டி ஐ.நா.செயலாளர் திரு. பான் கி மூன் 2009ம் ஆண்டு சேவை விருது வழங்கி என்னை கௌரவித்தார்.

**மக்கள் சேவகனாக பாதிப்புற்ற மக்களுக்கு சேவை செய்து ஐ.நா.செயலாளரின் பாராட்டினைப் பெற்றதோடு மாத்திரமல்ல நீங்கள் உலகம் சுற்றும் வாலிபனாகவும் இருந்ததை அறியும் போது மிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது. நீங்கள் எங்கே பிறந்தீர்கள்? எங்கே கல்வி பயின்றீர்கள் என்ற விபரங்களை சற்று கூற முடியுமா?**

நான் இலங்கையின் மன்னார் பகுதியில் தான் பிறந்தேன் மன்னாரில் ஆரம்பக் கல்வியையும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் சென்று கல்வி பயின்றேன். உயர் கல்வியை இந்தியாவிற்கும் சென்று கற்றேன். கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக் கழகத்தில் தான் பட்டதாரி பட்டம் பெற்றேன். அங்கிருந்து படித்ததினால் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகியவற்றுடன் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஹிந்தி ஆகியவற்றையும் பின்னர் அரபி ஆகிய ஏழு பாஷைகளை பேசும் வாய்ப்பினைப் பெற்றேன். ஹிந்திப் பாடல்களையும் பாடுவேன். எமது நிலையத்தில் நடைபெற்ற சில விழாக்களில் நான் ஹிந்தியில் பாடியதை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

**ஆமாம் நான் கேட்டிருக்கிறேன். சகலகலா வல்லவனான நீங்கள் எப்போது கனடாவுக்கு வந்தீர்கள்?**

திறமை அடிப்படையில் அதாவது Skilled migrant என்ற தரப்பின் கீழ் நானும் எனது குடும்பமும் 2009ம் ஆண்டு கனடாவுக்கு வந்தோம். 2010ம் ஆண்டிலிருந்து யோர்க் பிரதேசத்தில் பல்லின மக்களின் விவகாரத்தை கையாண்டு வரும் Social Services Network என்ற அமைப்பின் மேலாளராக பணியாற்றி வருகிறேன் அதனால் தென் ஆசிய மக்களுக்காக சேவை செய்து வரும் முகவர்கள் சபை (CASSA) எனது சேவையைப் பாராட்டி 2014ம் ஆண்டு திறமைக்கான விருதினை வழங்கி கௌரவித்தது.

கனடாவில் நான் ஆற்றி வந்த சேவைகளைப் பற்றி அறிந்த தமிழீழச் சங்கத்தினர் தங்களது சங்கத்தின் தலைமைப் பதவியினை ஏற்று செயலாற்றுமாறு கோரி என்னை தலைவராகத் தெரிவு செய்தனர். தமிழ் மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்யும் வாய்ப்பினைத் தந்த அப்பதவியினை நான் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டு 2010 லிருந்து 2015ம் ஆண்டு வரை பணியாற்றினேன். கனடாவுக்கு புலம் பெயர்ந்து வந்த ஆங்கிலம் பேசத் தெரியாத நம்மவர்களுக்கு ஆங்கிலத்தினை போதிப்பதற்கான வகுப்புகளை நடாத்தி வந்தோம். அத்துடன் கனடா அரசாங்கத்தினால் குடிவரவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சேவைகள், பொது நலத் திட்டங்கள் பற்றியும் அவர்களுக்கு அவ்வப்போது விளக்கி வந்தோம். வெளியே எங்கும் செல்ல விரும்பாது வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த எமது மக்கள் தமிழீழச் சங்கத்துக்கு வந்து பிறரை சந்தித்து அவர்களோடு அளவளாவி, நாம் வழங்கிய தகவல்களையும் கேட்டறிந்து மிக்க மகிழ்ச்சியும், முன்னேற்றமும் அடைந்தார்கள்.

தமிழரல்லாத ஏனைய தென் ஆசிய மக்களுக்கும் சேவை செய்யும் வாய்ப்பை இந்த சமூக சேவைகள் வலைப்பின்னல் நிறுவனம் தொடர்ந்து எனக்கு வழங்கி வருகின்றது. புலம் பெயர்ந்த நாட்டில், பிரச்சினைகள் ஏற்படும் போது யாரிடம் செல்வது எனத் தெரியாது அல்லலுற்று வரும் மக்களுக்கு எமது சேவை மிக மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

**உங்கள் அலுவலகத்தில் தமிழ், ஹிந்தி, பஞ்சாபி போன்ற பல்வேறு பாஷைகளையும் அத்துடன் ஆங்கிலத்தையும் பேசக் கூடிய அலுவலகர்கள் பணியாற்றுவதைக் கண்டேன். தங்களிடம் உதவி கோரி வரும் அனைவருக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது அதனால் அவரவரது மொழியினை பேசக் கூடியவர்களை உங்கள் நிறுவனம் பணிக்கு அமர்த்தி இருப்பது வரவேற்கத்தக்கது. அவர்களுக்கு எல்லாம் சம்பளம் வழங்கி இதனை நடாத்துவதற்கான நிதியினை உங்கள் நிறுவனம் எவ்வாறு சமாளிக்கின்றது?**

நிதி தானே எதற்கும் அத்தியாவசியமானது. அது இல்லாமல் எதுவுமே செய்ய முடியாது. புது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிவரவாளர்களுக்கு உதவும் அரச திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு, எமது செயற்பாட்டுக்கான திட்டங்கள், அவற்றினை செயற்படுத்துவதற்கான செலவுகள் அடங்கிய வரவு செலவுத் திட்டத்தினை நாம் தயாரித்து அவர்களுக்கு அனுப்பி வைப்போம். அவர்கள் அதனை பரிசீலனை செய்து எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்க முடியுமோ அந்தளவுக்கு குறைத்து நிதி வழங்குவார்கள். அதில் எமது அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கான சம்பளம், அலுவலக வாடகை ஆகியவற்றினை வழங்கி ஏனைய தேவைகளையும் மிகவும் சிரமத்துடன் சமாளித்து வருகின்றோம்.

**நீங்கள் குடிவரவாளர்களுக்கு வழங்கி வரும் சேவைகள் பற்றி சற்று விளக்கமாகக் கூற முடியுமா?**

நாங்கள் மார்க்கம் நகரில் மாத்திரமல்ல ஸ்காபுரோ, பிக்கெறிங் ஆகிய இடங்களிலும் அடிக்கடி கருத்தரங்குகள் நடாத்தி எமது சேவைகளைப் பற்றி பொது மக்களுக்கு விளக்கி வருகின்றோம். அத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் வரவழைத்து பொது மக்களின் பாதுகாப்புக்கு பொலிஸார் வழங்கி வரும் சேவைகள்



குறித்து விளக்கி வருகின்றோம். அதனால் பிரச்சினைகளுக்கு உள்ளாகும் பொது மக்கள் நம்முடன் தொடர்பு கொண்டு உதவி கோரி வருகின்றனர். நாமும் உடனடியாக அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்கி வருவதனால் பொது மக்களுக்கும் எமக்கும் இடையே ஒரு நல்லெண்ணமும், நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

பொதுவாக கனடாவுக்கு புதிதாக புலம் பெயர்ந்து வருவோருக்கு போதிய நிதி வருமானம் இல்லை. அதனால் குடும்பத்திற்குள் பிரச்சினைகள் ஏற்பட்டு கணவன், மனைவியர் பிரிந்து வாழும் நிலை கூட உருவாகி வருகின்றது. இந்நிலையில் எம்முடன் தொடர்பு கொள்வோரை வரவேற்று அன்புடன் பேசி அவர்களது குறைகளை ஆறுத லாகக் கேட்டறிந்து சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள், அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பிரச் சினைகளை தீர்ப்பதற்கும், ஆலோசனைகளை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். தேவை எனின் பொலிஸாரின் ஆலோசனைகளையும் பெற்று உடனடியாக அவர்களது பிரச்சினைகளை தீர்த்து வருகின்றோம்.

அது மாத்திரமன்றி முதியோர்களின் நலன் கருதி அவர்களுக்கான கருத்தரங்குகளையும், ஒன்று கூடல் நிகழ்ச்சிகளையும் அடிக்கடி நடாத்தி வருகின்றோம். அவர்களை மகிழ்விக்கும் வகையில் முக்கியமான சில இடங்களுக்கு உல்லாசப் பயணத்தின் மூலம் அழைத்துச் சென்றும் வருகின்றோம்.

தற்போது சில மோசடிக்காரர்கள் முதியோர்கள் மீது குறி வைத்து அவர்களது வங்கி கணக்கிலுள்ள பணத்தினை தந்திரமாக சுரண்டுவதை குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். நாம் இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து முதியோர்களுக்கு அறிவுரைகளை வழங்கி அவர்களை விழிப்படையச் செய்து வருகின்றோம். யாராவது தொலை பேசி மூலம் உங்களுடன் தொடர்பு கொண்டு வங்கியில் இருந்து பேசுகின்றோம் என அறிமுகப்படுத்திக் கொண்டு நாசூக்காகப் பேசி உங்களிடம் இருந்தே உங்களது வங்கிக் கணக்கு இலக்கத்தினை கேட்டறிந்து கொள்வார்கள். பின்னர் உங்களுக்குத் தெரியாமல் உங்கள் வங்கிக் கணக்கிலுள்ள பணம் முழுவதனையும் வாரிச் சுருட்டிக் கொள்வார்கள். அதனால் உங் களது தனிப்பட்ட முக்கிய விபரங்கள் எதனையுமே தொலைபேசியில் உரையாடுவோரிடம் கொடுக்கக் கூடாது என்பதனை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

முதியோர்களுக்காக நாம் எமது அலுவலக மண்டபத்தில் வாரத்தில் இரு தினங்கள் நடாத்தி வரும் யோகப் பயிற்சி வகுப்புகளில் மார்க்கம் தமிழ் முதியோர் சங்க அங்கத்தவர்களும் ஏனைய குடிவரவாளர்களும் யோகா பயிற்சி பெற்று வருகின்றனர். அதில் தமிழ் மக்கள் மாத்திரமன்றி சீன இனத்தவர்கள், பஞ்சாபியர்கள், ட்றினிடாட், கயானா மக்கள் ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

அதனால் அம்முதியோர்களின் குறைகளையும், தேவைகளையும் நாம் கேட்டறிந்து அவ்வப்போது அவர்களுக்கான கருத்தரங்குகளை நடாத்தி, ஆலோசனைகள் வழங்குவதற்கும், வைத்திய பரிசோதனைகளை செய்து கொள்ளவும் வாய்ப்பாக அமைந்துள்ளது. அவர்களுக்கு கண், காது பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை ஆகியவற்றினையும் அவ்வப்போது அனுபவம் வாய்ந்தவர் கள் மூலம் செய்து வருகின்றோம்.

அத்துடன் பொங்கல் விழா, நத்தார் விழா, தந்தையர் தின விழா போன்ற விழாக்களையும் நடாத்தி வருகின்றோம். பொது மக்கள் தமது கவலைகளை மறந்து மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள் என சிரித்துக் கொண்டே கூறினார் திரு.அகஸ்ரின் ஜீவானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தினால் மட்/ கல்குடா கல்வி வலயத்திற்கு நிதியுதவி

கனடா தளிர் சஞ்சிகையின் நிர்வாக குழுவினரும் கனடா சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தினாலும் கல்வி அறிவை மேம்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற் கொண்டு வருகின்றனர். அந்த வகையில் கல்குடா கல்வி வலயத்தில் ஐந்தாம் தர மாணவர்களின் கல்வி அறிவினை மேம்படுத்தும் நோக்கில் புலமைப்பரீட்சைக் கான கருத்தரங்கினை நடாத்தும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கனடிய சுதந்திர மனித அபிவிருத்தி கழக இணைப்பாளரும் தளிர் காலாண்டு இதழின் உறுப்பினருமான நேசதுரை பாலசுப்ரமணியம் (நிசான்) அவர்களால் நிதி கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் செ.ஸ்ரீகிருஸ்ணராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.ரவி, கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான நா.குணலிங்கம், எஸ்.பரமேஸ்வரன், எஸ்.சிவகுரு, உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.யோகராஜா,மட்/நாமகள் வித்தியாலய அதிபர் திரு.எஸ்.சுகுமார் மட்டக்களப்பு சுதந்திர மனித அபிவிருத்தி கழகத்தின் மாவட்டத் தலைவர் ச.சதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

1997ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திர மனித அபிவிருத்தி கழகமானது மனிதாபிமானத்தினையும் மனித நேயத்தினையும் அடிப்படையாக கொண்ட ஒரு அமைப்பாகும். இதனது கிளை கனடாவில் 2007ம் ஆண்டு விஸ்தரிக்கப்பட்டது. தற்போது அமெரிக்காவிலும் அதனது கிளையினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையினை முக்கிய உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடதக்கதாகும்.

இவ் அமைப்பின் செயற்பாடுகளில் ஒன்றாகவே ஆதரவற்ற குழந்தைகளின் கல்வித்தர முன்னேற்றத்திற்க்காகவும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான ஆதரவினை வழங்கும் நோக்குடன் மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்குட்ப்பட்ட சிறுவர்களின் புலமைப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கிற்கான செலவினை பொறுப்பேற்றுள்ளது.

அத்துடன் மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் அமைந்துநள்ள ஓட்டிசமான (மன இறுக்க பாதிப்புக் குட்பட்ட) குழந்தைகளை பராமரித்து வரும் ஓசானா இல்லத்திற்க்கும் தமது உதவியினை தொடர்ந்து வழங்கு வதற்க்கான செயற்பாட்டில் கலந்து கொண்ட நேசதுரை பாலசுப்ரமணியம் (நிசான்) அவர்கள் தமது குடும்பம் சகிதம் சென்று உதவுவதை படங்களில் காணலாம்.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமைப்போம்! சுவைப்போம்!!




## மசாலா சப்பாத்தி

**தேவையானவை:** சப்பாத்தி, தக்காளி - தலா 2, கரம் மசாலாத்தூள், மிளகாய்த்தூள், கறிவேப்பிலை, பச்சை கொத்தமல்லி - சிறிதளவு, மஞ்சள்தூள், உப்பு - சிட்டிகை, கடுகு, கடலைப்பருப்பு, சீரகத்தூள் - தலா ஒரு டீஸ்பூன்.

**செய்முறை:** சப்பாத்தியை மெல்லியதாக நீளவாக்கில் வெட்டிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, கடலைப்பருப்பு கறிவேப்பிலை போட்டு தாளித்து தக்காளி சேர்த்து வதங்கியதும், கரம் மசாலாத்தூள், மிளகாய்த்தூள், மஞ்சள்தூள், சீரகத்தூள், உப்பு சேர்த்து நன்றாக வதக்கவும். வெட்டி வைத்த சப்பாத்தியை சேர்த்து பொடியாக நறுக்கிய கொத்தமல்லித்தழை மேலாகத் தூவிக் கிளறி இறக்கவும்.

**பலன்கள்:** புரதம், நார்ச்சத்து,பி காம்ப்ளக்ஸ் வைட்டமின் இதில் அதிகம் இருப்பதால், உடலுக்கு நல்ல வலுவைக் கொடுக்கும்.

## நெத்திலி மீன் அவியல்

**தேவையானவை:** நெத்திலி மீன் - 250 கிராம், தேங்காய் துருவல் - அரை கப், சின்ன வெங்காயம் - 10 முதல் 12, கறிவேப்பிலை - 2 கொத்து, புளி - நெல்லிக் காய் அளவு, பச்சை மிளகாய் - 2, மிளகாய் தூள் - ஒரு தேக்கரண்டி (காரத்திற்கேற்ப கூட்டிக் கொள்ளலாம்), மஞ்சள் தூள் - கால் தேக்கரண்டி, மல்லி தூள் - கால் தேக்கரண்டி, உப்பு - தேவையான அளவு

**செய்முறை:** நெத்திலி மீனை சுத்தம் செய்து வைத்துக் கொள்ளவும். மற்ற பொருட்களை தயாராக எடுத்து வைக்க வும். இடிகல்லில் அல்லது அம்மியில் முதலில் சின்ன வெங்காயத்தை வைத்து ஒன்றிரண்டாக உடைத்து கொண்டு அதன் பிறகு தேங்காய், பச்சை மிளகாய், பொடி வகைகள், ஒரு கொத்து கறிவேப்பிலை சேர்த்து லேசாக இடித்து எடுக்கவும். (மிக்ஸியில் செய்வதாக இருந்தால் எல்லாவற்றையும் சேர்த்து விப்பரில் ஒன்று அல்லது இரண்டு சுற்று சுற்றி எடுக்கவும்) மீன் செய்யும் பாத்திரத்தில் (மண் சட்டியாக இருந்தால் சுவை அதிகரிக் கும்) மீனைப் போட்டு அதனுடன் அரைத்த மசாலா, மீத முள்ள கறிவேப்பிலை, உப்பு சேர்க்கவும்.

இவற்றுடன் புளியைக்கரைத்து ஊற்றி மேலும் அரை கப் தண்ணீர் ஊற்றி கலந்து பத்து நிமிடம் மூடி வைக்கவும். எல்லாவற்றையும் சேர்த்த பின்னர் கொதிக்க விடவும். இடையிடையே சட்டியோடு எடுத்து சுழற்றி வைக்கவும். (கரண்டி போட்டு கிளறினால் மீன் உடைந்து விடும்) தண் ணீர் வற்றியதும் இறக்கி விடவும். விரும்பினால் ஒரு தேக் கரண்டி தேங்காய் எண்ணெயை பரவலாக ஊற்றி லேசாக கிளறி இறக்கலாம். சுவையான நெத்திலி மீன் அவியல் தயார். சாதத்தில் பிசைந்தோ அல்லது சைட் டிஷ்ஷாகவோ வைத்து சாப்பிடலாம்.

## கதம்ப சாதம்

**தேவையானவை:** அரிசி - 100 கிராம், துவரம்பருப்பு - 50 கிராம், கேரட், பீன்ஸ், பீட்ரூட், மாங்காய் - கைப்பிடி, சிறிய வெங்காயம் - 4, பச்சை மிளகாய், காய்ந்த மிளகாய் - தலா 1, வெந்தயம், கடலைப்பருப்பு, தனியா, எண்ணெய், நெய் - தலா ஒரு டேபிள்ஸ்பூன், புளிக்கரைசல் - சிறிதளவு, தேங்காய் துருவல் - 2 டேபிள் ஸ்பூன், கடுகு, உளுந்து, கறி வேப்பிலை, உப்பு, மஞ்சள்தூள் - சிறிதளவு.

**செய்முறை:** புளியைக் கரைத்து தனியே வைக்கவும். காய்ந்த மிளகாய், வெந்தயம், தனியா, கடலைப்பருப்பு இவற்றை வெறும் கடாயில் வறுத்து தேங்காய் சேர்த்து கர கரப்பாக அரைத்துக்கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு, கடுகு, உளுந்து, கறிவேப்பிலை சேர்த்து வெடித் ததும், மிளகாய், உப்பு, மஞ்சள்தூள், வெங்காயம், காய்கறி கள், அரைத்த தேங்காய், மசாலா பொடி சேர்த்து நன்றாக வதக்கவும். இதில் கழுவிவைத்துள்ள அரிசி மற்றும் பருப்பு களை சேர்த்து தேவையான அளவு தண்ணீர் விட்டு, பிரஷர் குக்கரில் 2 விசில் வரும் வரை வேக விட்டு இறக்கி, நெய் விட்டு மசித்து கிளறவும்.

**பலன்கள்:** வைட்டமின் ஏ, சி, இ மற்றும் புரதச்சத்து, தாதுப் பொருட்கள் இதில் இருப்பதால், கண்புரை நோய், சருமநோயிலிருந்து காக்கும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HomeLife Galaxy
Real Estate Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED & OPERATED

ENTER FOR A CHANCE TO WIN

WITH HOMELIFE GALAXY REAL ESTATE LTD., BROKERAGE

BUY · SELL · LEASE

GRAND PRIZE Civic 2017



Win 1 of 3 All inclusive Trip for 2 to the Caribbean



Draw will be held on November 4th 2016
During the Galaxy Gala

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க...



RAVI THARMALINGAM
Sales Representative
Cell : 416-319-7507
Office : 416-284-5555
301-111 Grangeway Ave, Toronto, ON, M1H 3E9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் தொட்டு விடும் தூரம் தான்..!

- சிவா ராஜ்

ஒரு காகிதத் துண்டைக் கொடுத்தால், அதை இரண்டாக மடிப்பது. பின்னர் அதையும் இரண்டாக மடிப்பது. இப்படியே பல தடவைகள் அரைவாசியாக மடித்துக் கொண்டேயிருப்பது, சிறு வயதிலிருந்தே பலரிடம் இருக்கும் ஒரு பழக்கம். இந்தச் செயலைப் பார்த்தால், சாதாரணமான ஒன்றாகத்தான் தோன்றும். ஆனால், நிஜத்தில் இது சாதாரண செயலல்ல. இதில் ஒரு ஆச்சரியமும், மிகப் பெரிய கணிதமும் உள்ளடங்கியிருக்கிறது. நீள் சதுரக் காகிதமொன்றை, அரைவாசியாக மடிக்கும்போது, அதிக பட்சம் ஏழு தடவைகள்தான் மடிக்கலாமென்று, சின்ன வயதிலேயே நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதற்கு மேல் முடியாது. அவ்வளவு கடினமானதொரு செயல் அது. சாதாரண மனிதனால், ஒரு காகிதத்தை ஆறு தடவைகளோ இல்லை ஏழு தடவைகளோதான் மடிக்க முடியும்.

காகிதம் மடிப்பதை ஒரு சவாலாக எடுத்து, 'பிரிட்னி கல்லிவன்' (Britney Gullivan) என்னும் பெண்மணி, தனது பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து, 4000 அடி நீளமுள்ள கழிவறைக் காகிதத்தை (Toilet Paper) 12 தடவைகள் மடித்துச் சாதனை படைத்தார். இது நடந்தது 2002ம் ஆண்டு ஜனவரி மாதம். கழிவறைக் காகிதம், அகலம் குறைந்து, நீளமாக இருப்பதால், அதை ஒரு திசை நோக்கியே மடிக்க முடியும். அதனால், ஒரே திசையில் 12 தடவைகள் காகிதத்தை மடித்த சாதனையாக அது கருதப்படுகிறது. அதன் பின்னர், 2007ம் ஆண்டு, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் புகழ்பெற்ற 'மித் பஸ்டேர்ஸ்' (Mythbusters), உதைபந்தாட்ட மைதானமளவுள்ள, மிகப்பெரிய நீள் சதுரக் காகிதத்தைப் பல திசைகளில் மடித்து முயற்சித்தனர். அவர்களால் 11 தடவைகளே மடிக்க முடிந்தது. மடிப்பதற்கு, 'இரும்புருளை வண்டி' (Road Roller) ஒன்றையும் அவர்கள் பயன்படுத்தியிருந்தார்கள்.

மீண்டும் 2012ம் ஆண்டு, மசாசுசெட்ஸிலுள்ள பாடசாலை ஒன்றின் மாணவர்கள், 'பிரிட்னி கல்லிவன்' அவர்கள் செய்தது போலக் கழிவறைக் காகிதத்தை 13 தடவைகள் மடித்துக் காட்டினார்கள். ஆனால், இவர்கள் ஆரம்பத்தில் ஆறு நீண்ட கழிவறைக் காகிதங்களை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்துவிட்டு, அதன்பின்னரே மடிக்கத் தொடங்கினர். அதனால், இதுவரை பிரிட்னி கல்லிவன் அவர்கள்தான், காகிதத்தை மடிப்பதில் சாதனையாளராக இருக்கிறார். "ஆமாம், இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது? இதிலெங்கே கணிதம் இருக்கிறது? இதைச் சொல்லவா இவ்வளவு அலட்டல்?" என்று என்னைப் பார்த்து நீங்கள் முறைப்பது தெரிகிறது. அவசரம் வேண்டாம். அதையும் சொல்லிவிடுகிறேன். அதில் உள்ள ஆச்சரியம் என்ன தெரியுமா?



ஒரு பெரிய காகிதத்தை 103 தடவைகள் நீங்கள் மடித்தீர்களென்றால் (அவ்வளவு பெரிய காகிதம் உங்களிடம் இருந்து, அதை உங்களால் மடிக்க முடிந்தால்), அது நம்மால் இதுவரை அவதானித்திருக்கக் கூடிய பேரண்டத்தின் அளவு உயரமாக மடிக்கப்பட்டிருக்கும். அதாவது, 92 பில்லியன் ஒளியாண்டுகள் பெரிதாக, அந்த மடிப்பின் தடிப்பு இருக்கும். இதை உங்களால் நம்ப முடிகிறதா? வெறும் 103 தடவைகள் மட்டும்தான். "எப்படி அந்த மடிப்புகளின் தடிப்பு, நம் பிரபஞ்சம் அளவு பெரிதாக இருக்க முடியும்?" என்று நீங்கள் நிச்சயம் ஆச்சரியப்படுவீர்கள். இதுதான் கணிதத்தின் விளையாட்டு.

2 I அடியாகக் கொண்டு மேலே செல்லும் ஒவ்வொரு இலக்கமும் குறித்த அளவுக்கு மேல் நம்பமுடியாத அளவுக்குப் பெரிதாகிவிடும் (2^n). ஒரு காகிதம் 0.1 மில்லிமீட்டர் தடிப்பைக் கொண்டது. அதை மூன்று தடவைகள் மடித்தால் 1.6மிமீ தடிப்பாகிவிடும். அதை ஏழு முறைகள் மடித்தால் உங்கள் டயரி அளவு மொத்தமாகிவிடும். பத்து முறைகள் மடித்தால் உங்கள் கையின் நீளத்துக்கு வந்துவிடும். இதன் பிறகுதான் ஆரம்பமாகிறது பிரமாண்டம். காகிதத்தை 23 தடவைகள் மடித்தால், ஒரு கிலோமீட்டர் உயரமாகிவிடும். 30 தடவைகள் மடித்தால், 100 கிலோமீட்டர். 42 தடவைகள் மடித்தீர்களென்றால், அதிலேறிச் சந்திரனை அடைந்துவிடுவீர்கள். 51 தடவைகளில் சூரியனை அடையும் தூரம். 81 தடவைகளில் 127,786 ஒளியாண்டுகள். 90 தடவைகளில் அண்டரோமேடா காலக்ஸி உட்பட நூறு காலக்ஸிகள் சேர்ந்த 110 மில்லியன் ஒளியாண்டுகள்.

இறுதியாக 103 மடிப்புகளில் பேரண்ட உயரம் எட்டலாம்.

முடிந்தால் வீட்டிலிருந்து ஒவ்வொன்றாய்க் கணக்கிட்டுச் சரிபார்க்கவும். 103 மடிப்புகள் தேவையில்லை. வெறும் 42 தடவைகள் மடியுங்கள், சந்திரனுக்குச் சென்று விடலாம். ராக்கெட்டே தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரி... சிரி... சிரி...





"கம்ப்யூட்டர் வேணுங்கறதை உன் காதலி நாசூக்கா கேட்கறாளா? எப்படி?"

"உங்களைப் பார்க்கும் போதெல்லாம் என் இதயம், "லேப் டாப்... லேப் டாப்" னு துடிக்குது டியர்"னு சொல்றா"



"உங்களைக் கனஜோராகப் புகழ்ந்து கவிபாடியும் என்னை எதற்காக சவுக்கால் அடிக்கிறீர்கள் மன்னா?"

"கவிதை எழுதிய நேரம்போக, என்னையும் சாமரம் வீசும் பெண்களையும் இணைத்துக் கிசுகிசு எழுதுகிறீராமே?!"

"என்னது கல்யாணத்துல கலாட்டா வரும்னு அழைப்பிதழ்லயே போட்டிருக்காங்களா?"

"ஆமாம்... "விவாத" சுபமுகூர்த்தப் பத்திரிக்கைன்னு போட்டிருக்கே!"





"தலைவர் இன்னிக்கு தலை நிமிர்ந்து நடக்கறார்னா அதுக்குக் காரணம் நீயா... அப்படி என்ன செஞ்சே?"

"அவரோட கழுத்து சுளுக்கை நேத்து நான்தானே நீவி எடுத்து விட்டேன்"



"இப்படை தோற்கின் எப்படை வெல்லும் மன்னா!"

"இந்த அப்பாடக்கர் வேலை எல்லாம் என்னிடம் வேண்டாம் தளபதியாரே... போருக்கு இப்போது நான் தயார் இல்லை!"

"ஸ்வீட் ஸ்டாலை மையமா வச்சி வெங்கட்பிரபு படம் டைரக்ட் செய்தா, என்ன பெயர் வைப்பாரு?"

"பால்கோவா."







"வர்ற எலெக்சன்ல மதச்சார் பற்ற கட்சிகளுடன்தானே உங்கள் கூட்டணி?"

"ம்ஹூம்... மதர் சார்பற்ற கட்சிகளுடன்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூந்தளிர்

# சிறுவர்களுக்கான பகுதி

**அன்புத்தம்பி தங்கைகளே இது உங்களுக்கான பகுதி பூந்தளிர்.**

இதில் சிறுகதை சொற்க்களம் நுன்னறிவு உலக பிரசித்தி பெற்றோர். உலக சுவைமிகு தகவல்கள். சிறுவர் நிகழ்வுகள் பிறந்தநாள் புகைப்படங்கள் என்பன மூன்று மாதங்களுக்கொருமுறை வெளிவரும். தளிர் சஞ்சிகையில் நீங்களும் பங்குபற்றலாம்.

## குதிரைக்காரன்



அரன் ஒரு விளையாட்டு வீரன். அவனிடம் ஒரு குதிரை இருந்தது. குதிரை ஓட்டம் அரனுக்குப் பிடித்த விளையாட்டு. அரன் தனது குதிரையில் ஒவ்வொரு நாளும் சவாரி செய்வான். அவனது குதிரை மிக வேகமாக ஓடக் கூடியது.



அரனது நண்பர்கள் அவனை குதிரைப் பந்தயத்தில் பங்கு பற்றுமாறு அடிக்கடி கூறி வந்தனர். அரனுக்கும் பந்தயத்தில் பங்கு பற்ற ஆசை வந்தது.

அரன் குதிரைப் பந்தயத்தில் வெற்றிகள் பலதைப் பெற்றது. அரனுக்கு நிறையவே பணமும் புகழும் கிடைத்தன. அவனுக்குத் தலைகால் தெரியவில்லை. தனது திறமையால் மட்டும் இதெல்லாம் நடப்பதாக எண்ணிப் பெருமைப் பட்டான். அவ்வாறு பெருமை அடைந்த அரன் தனது வெற்றிக்குக் காரணமான குதிரையை மறந்தான். அதனால் குதிரையைக் கவனிக்க மறந்தான். குதிரை மெலிந்து பலம் இழந்தது. அதனால் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற முடியவில்லை.



தன்னை ஒதுக்கும் அரனுடன் குதிரை தொடர்ந்தும் இருக்க விரும்பவில்லை. தான் இல்லாதுவிட்டால் அவனுக்கு ஏற்படும் இழப்பை அவன் உணரச் செய்ய வேண்டும் என்று குதிரை விரும்பியது. அதனால் குதிரை ஒரு முடிவுக்கு வந்தது. ஒருநாள் திடீரென வீட்டைவிட்டு ஓடிவிட்டது.

குதிரை ஓடிவிட்டதால் அரனின் வெற்றி வாய்ப்புகளும் குறைந்து வரலாயிற்று. வெற்றி கிட்டாததால் மக்களும் அரனைக் கவனிக்காது விட்டனர். இப்போதுதான் அரன் தனது தவறை உணர்ந்தான். ஆனால் காலம் பிந்தி விட்டது. குதிரையைத் தேடிப் புறப்பட்டான். குதிரை அவன் பிடிக்கும் தூரத்தில் இருக்கவில்லை. அரனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

**உயர்வுக்கு உதவியவர்களை ஒதுக்கப் பழகாதே.**

தமிழ்ப்பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவைத் துளிர்கள்...!

# ஆயிரம் ஆண்டுகளாக நீர் வற்றாத கிணறு!

ஆயிரம் படிகளைக் கொண்ட கிணறு ஒன்று ஹர்ஷத் மாதா என்ற கோவிலில் கட்டப்பட்டுள்ள ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகரான ஜெய்ப்பூரின் அருகில் உள்ள அபாநெரி என்ற கிராமத்தில்தான் இந்தக் கோயிலும், ஆயிரம் படிகள் கொண்ட இந்த சாந்த் பவோரி கிணறும் அமைந்துள்ளது. கி.பி. 800க்கும் 900க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது இக் கிணறு. சாந்த் பவோரி என்றழைக்கப்படும் இக்கிணறை நிகும்ப வம்சத்தைச் சேர்ந்த மன்னர் சந்தா என்பவர் கட்டியதாக வரலாற்று ஆவணங்கள் தெரிவிக்கின்றன.



இந்த கிணறு 13 அடுக்குகளை உடையது. 20 மீட்டர் ஆழம் கொண்ட இந்தக் கிணற்றின் அனைத்து படிகளும் ஒரே எண்ணிக்கை கொண்டவை. அவற்றின் நீள, அகலங்களும் எந்த இடத்திலும் மாறுபடாதபடி கனகச் சிதமாக அமைக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 3 ஆயிரத்து 400 படிகள் இந்த பாவோரி கிணற்றில் உள்ளன. மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ள இக்கிணறு உலக சாதனைகளில் ஒன்றாக விளங்குகிறது.

இதை விட ஆச்சரியம். தண்ணீருக்கு தகிடுதத்தம் போடும் ராஜஸ்தான் மாநிலத்தில் இந்தக் கிணற்றில் மட்டும் இதுவரை தண்ணீர் வற்றியதே கிடையாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத் துளிர்கள்...!


## சிறுவர், சிறுமியரே தயாரிக்கலாம் ஸ்பீக்கர்!

பார்த்து தெரிந்துகொள், செய்து கற்றுக்கொள். இதுதான், 8 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்ள ஒரே வழி என்கிறது ஒலிபெருக்கி நிறுவனமான போஸ். ஒரு இந்தியரால் அமெரிக்காவில் துவங்கப்பட்ட போஸ் ஸ்பீக்கர்ஸ், ஒலி உலகில் சூப்பர் ஸ்டார். இது சமீபத்தில் சிறுவர், சிறுமியர் மின்சாரம், மின்னணுவியல், ஒலியியல் போன்றவற்றின் அடிப்படைகளை கற்றுக்கொள்ள, 'போஸ் பில்ட் ஸ்பீக்கர் க்யூப்' என்ற திட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. சிறுவர்களே ஒரு ஒலி பெருக்கியை உருவாக்கும் விதத்தில் உதிரி பாகங்கள் கொண்ட ஒரு தொகுப்பு இது.

பெட்டியிலுள்ள பாகங்களை எப்படி இணைக்க வேண்டும், சர்க்யூட் என்ன செய்கிறது போன்றவற்றுக்கு ஒரு மொபைல் செயலி மூலம் குறிப்புகள் தரப்படுகின்றன. அது மட்டுமல்ல, ஒவ்வொரு கட்டத்திலும் எந்த விஞ்ஞான தத்துவம் பயன்படுத்தப்படுகிறது என்பதையும் அந்த செயலியே விளக்கிவிடும். சிறார்கள் ஒரே மணி நேரத்தில் துள்ளல் இசை தரும் போஸ்பில்ட்க்யூப் ஸ்பீக்கரை இயங்கச் செய்துவிடலாம்.



மின்சாரம் தொடர்புடையது என்பதால் பெரியவர்களின் மேற்பார்வை அவசியம். யோசனை நல்லது தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத் துளிர்கள்...!

## உலகின் குட்டி நாடு



N.Abira Nesathurai
School: Markham District High School
Grade 12 Graduation: June 28, 2016



✱ உலகில் உள்ள இரண்டாவது குட்டி நாடு மொனாக்கோ. கத்தோலிக்க கிறிஸ்தவ தலைமையகம் உள்ள வாட்டிகனுக்கு அடுத்து உலகில் உள்ள குட்டி நாடு இது. ✱ மொத்தமே 499.2 ஏக்கர்தான் இந்த நாட்டின் பரப்பளவு. நம்ம ஊரில் உள்ள ஒரு கிராமத்தைவிட சிறிய நாடு. ✱ மொத்த சாலை தூரம் - 4.4 கிலோமீட்டர்தான். கடலோரப் பகுதி - 4.1 கிலோ மீட்டர்.

✱ நிலப்பரப்பு பட்டியலில் உலக அளவில் மொனாக்கோவுக்கு 248வது இடம். (110 ஏக்கர் பரப்புக் கொண்ட வாட்டிகன் 249வது இடம்) ✱ ஐரோப்பா கண்டத்தில் பிரான்ஸ் நாட்டுக்கு அருகே மொனாக்கோ உள்ளது. ✱ இந்த நாட்டின் மக்கள் தொகை தற்போது 36, 371.

✱ மக்கள்தொகை குறைவாக இருப்பதாலோ என்னவோ, இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு ஆயுள் கொஞ்சம் அதிகம். இங்கு சராசரியாக மக்கள் 90 வயது வரை வாழ்கிறார்கள். ✱ பிரான்ஸுடன் இணைந்து இருந்த இந்த நாடு 1861-ம் ஆண்டில் தனி நாடானது.

இங்கு மக்கள்தொகை குறைவாக இருப்பதால் வெளிநாட்டு மக்கள் குடியேற முன்பு அதிகம் அனுமதிக்கப்பட்டார்கள். ✱ மக்கள் தொகை இருமடங்காகி விட்டதால் நாட்டின் பரப்பளவை அதிகரிக்கத் தொடங்கியுள்ளார்கள். எப்படித் தெரியுமா? கடலிலேயே பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டி வரு கிறார்கள். ✱ உச்சக்கட்டமாக கடலுக்குள் பாதாளம் அமைத்து அங்கு ஒரு நகரை உருவாக்கவும் மொனாக்கோவில் திட்டமிட்டு வருகிறார்கள்.

## வியக்க வைக்கும் அதிசய நாய்!





N.Janice Nesathurai
School: Franklin Street Public School
Grade 8 Graduation: June 23, 2016

இங்கிலாந்தில் ஒரு ஐபோன் உயரத்தை விட குறைவாக உயரம் கொண்ட நாயொன்று அடையாளம் காணப்பட்டது. நாயின் உயரம் 11 செ.மீ. மட்டுமே. இது தான் உலகில் மிக மிக சிறிய நாய் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இதன் தலை கோல்ப் பந்து அளவில் உள்ளது. இந்த நாயை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்து வருகின்ற னர். லண்டனிலுள்ள ரோஸ்மேரி மெக்லின்டன் - அந்தோணி தம்பதியினர் இந்த நாயை வளர்த்து வருகின்றனர்.

## எனக்குப் பிடித்த செல்லப் பிராணி



யாழினி கிறிஸ்ரி

எனக்கு நாய்க் குட்டி என்றால் விருப்பம் அதிகம். அதிலும் விசேசமாக - குறிப்பிடத்தக்க இனமான 'யோக்ஸ்செர் ரெறியர்' என்கிற நாயை எனக்கு மிகவும் பிடிக்கும். இது மிகவும் சிறிய- ஆனால் உயர் ஜாதி நாயாகும். இது 17 செ.மீ. மட் டுமே உயரமாக வளரும். இதன் நிறை 7 இறாத்தல் ஆகும். இது விசேச நாய் இனமாக இருப்பதற்குக் காரணம்; இதனது ஒவ்வாமையற்ற (allergic) தன்மையேயாகும். ஏனைய நாய்களைப் போல அல்லாது, இதற்கு முடி கொட்டுவது குறைவு என்பதால், மனிதருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய ஒவ்வாமை இதற்கு இல்லை. இதனைப் பொதுவாக எல்லோரும் அன்பாக நடத்துவார்கள்.



இதன் அளவை வைத்து எவரும் இதனை ஏமாற்ற முடியாது. இது சிறிய பிராணிகளை வேட்டையாடும் இதனுடைய தைரியம், தன்னம்பிக்கை, புத்திசாலித் தனம், தோழமை. சுதந்திரமான போக்கு என்பன (என்னைப் போலவே) காரணமாக எனக்கு இந்த இன நாயை மிக மிகப் பிடிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்தளிர் விண்ணப்ப படிவம்

பூந்தளிர்களுக்கான பகுதி.. அன்புத்தம்பி தங்கைகளே இது உங்கள் பக்கம், பூந்தளிர் பகுதியில் உங்கள் பெயர் களுடன் புகைப்படங்களும் இடம்பெறவேண்டுமாயின், உங்கள் முகவரி மின் அஞ்சல் கல்வி பயிலும் பாடசாலை, தரம், என்பவற்றைத் தமிழில் எழுதி உங்களது புகைப் படத்துடன் எமது பூந்தளிர் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

**பூந்தளிர் விண்ணப்பப் படிவம்**

**பெயர்** ...........................................................

**வகுப்பு தரம்** ...........................................................

**பாடசாலை** ...........................................................

**தொலை பேசி இல** ...........................................................

இதனை பூர்த்தி செய்து எமது மின் அஞ்சலுக்கோ அல்லது முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

## போட்டி இல. 10

அன்பின் தம்பி தங்கைகளே! வணக்கம். தளிர் தரும் 10வது சொல்லாக்கப் போட்டி. கடந்த தளிரில் 16 எழுத்துக்களை கொண்டு சொற்களை எழுதி அனுப்பி வைத்தீர்கள், பலரும் முயன்று பல சொற்க்களைக் கண்டுபிடித்து எழுதியிருந்தீர்கள். உங்கள் முயற்சிக்கு எங்கள் வாழ்த்துக்கள். இம்முறையும் 16 எழுத்துக் களைக்கொண்டு சொற்களை ஆக்கப்போகிறீர்கள். நீங்கள் யாருடைய உதவியுடனும் சொற்களை ஆக்கலாம். ஆனால் நீங்கள் எழுதி அனுப்பும் சொற்களின் பொருளை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். தளிரில் பூந்தளிராகிய உங்களின் மொழி அறிவைக் கூட்டும் நோக்குடன் தான் இப்போட்டி நடத்தப்படுகிறது. நீங்கள் எழுதி அனுப்பும் அதிகூடிய சொற்களின் அடிப்படையிலேயே போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| த | ள் | ங் | ம் |
| வி | ன் | லை | பு |
| வ | ர | ல் | ஐ |
| டு | ள | அ | க |

அன்பு தம்பி தங்கையர்களே நாம் மேலே கூட்டினுள் தந்திருக்கும் எழுத்துக்களைக்கொண்டு சொற்களை அமைத்து எதிர்வரும் புரட்டாதி (செப்டம்பர்) 2016 - 25ம் திகதிக்கு முன்னர் எமது மின் அஞ்சல் thalir. thalir@yahoo.ca அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது எமது முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்

### போட்டி இல 9ல் தெரிவான போட்டியாளர்கள்

சிறுவர்களாகிய உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுக்கும் வகையில் கடந்த பூந்தளிரில் நாம் கொடுத்த சொற்களத் தைச் சரியாகப் பயன்படுத்திக் கூடுதலான சொற்களை உருவாக்கிய தம்பி தங்கைகளில் இம்முறையும் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் சொற்களத்தளிரில் போட்டி இல 9இல் பங்கு பற்றி பரிசில் பெறும் தம்பி தங்கையர்களின் பெயர்கள் பின்வருமாறு முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**முதலாவது இடத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்**

**செல்வன் கேசிகன் தில்லைநாதன்,**
6ம் ஆண்டு, Seasons Drive , Scarborough,

**இரண்டாவது இடத்திற்காக தெரிவு செய்யப்பட்டவர்**

**செல்வி பவித்ரா தேவதாஸ்**
5ம் ஆண்டு, Gor Road, Brampton,

**மூன்றாவது இடத்திற்க்காக தெரிவு செய்யப்பட்டவர்**

**செல்வன் சஞ்சையன் தேவநேசன்**
4ம் ஆண்டு, Morning Side Drive, Scarborough

பூந்தளிருக்கான சொற்களப்போட்டியில் வெற்றி பெற்றோர் பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொண்டு தளிர் சான்றிதழ்களையும் பரிசில் களையும் பெற்றுக் கொள்ளலாம்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இல:

**பூந்தளிர்:**

**647 657 0910**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜித்தின் 'தல 57'ல் டபுள் கொண்டாட்டம்!

தல அஜித்தின் 57வது படத்தின் எதிர்ப்பார்ப்பு ரசிகர்களிடையே இப்போதே அதிகரித்து விட்டது. என்னை அறிந்தால் படத்தில் அஜித்துக்கு ஜோடியாக நடித்த அனுஷ்கா அவரது 57-வது படத்தில் நடிப்பதாக கூறப்பட்டது. பின்னர், காஜல் அகர்வால் நடிப்பதாக சொன்னார்கள். அதையடுத்து சாய் பல்லவியின் பெயரும் அடிபடுகிறது.

இந்நிலையில், இப்போது அப்படத்தில் வில்லனாக தனிஒருவன் படத்தை அடுத்து போகனில் நடித்து வரும் அரவிந்த்சாமி நடிப்பதாக ஒரு புதிய செய்தி பரவிக் கொண்டிருக்கிறது. அதோடு, சினேகாவின் கணவர் பிரசன்னாவும் அப்படத்தில் நெகடீவ் ரோலில் நடிப்பதாக கூறப்படுகிறது. இவர் ஏற்கனவே மிஷ்கின் இயக்கிய அஞ்சாதே படத்தில் வில்லனாக நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த செய்திகளை டைரக்டர் சிவா உறுதிப்படுத்தவில்லை. அப்படக்குழுவை விசாரித்தால், அவர்களும் அதுபற்றி வாய்திறக்க மறுக்கிறார்கள்.

படத்தின் நாயகி தவிர அனைத்து கலைஞர்களும் அறிவிக்கப்பட்ட நிலையில், இப்படத்தில் ஹீரோ, வில்லன் என இரண்டையும் அஜித்தே நடிக்க இருப்பதாக தகவல்கள் வந்துள்ளது.

இந்த செய்தியால் தல ரசிகர்கள் டபுள் கொண்டாட்டத்தில் உள்ளனர்.



## மீண்டும் அஜித்-அமிதாப் கூட்டணி

பழசையெல்லாம் ஞாபகத்தில்தான் வைத்திருக்கிறார் அஜீத். அதற்கு மிக சரியான உதாரணம், சில வாரங்களுக்கு முன்பு மிக முக்கியமான ஒரு பேச்சு வார்த்தை நடந்திருக்கிறது. அப்படி பேசிக் கொண்டவர்கள் அஜீத்தும், அமிதாப்பச்சனும்தான். ஒரு காலத்தில் ஏகப்பட்ட கனவுகளோடு சென்னையில் தன் சினிமா கம்பெனியை துவங்கிய இந்தியாவின் மெகா சூப்பர் ஸ்டார் அமிதாப், "உல்லாசம்" என்ற படத்தை தயாரித்தது ரசிகர்களுக்கு நினைவிருக்கலாம்.

விக்ரம், அஜீத் இருவரும் அப்படத்தில் நடித்திருந்தார்கள். படம் படு சுமார். ஒரு வாரம் கூட ஓடவில்லை. உல்லாசத்துடன் சேர்ந்து அமிதாப் தயாரித்த பிற படங்களுக்கும் இதே நிலைமை. திடீரென பெரும் கடனாளி ஆனார் அமிதாப். அவரது சொத்துகள் ஜப்திக்கு வந்தன. அதற்கப்புறம் காபி, டீ, இஞ்சிமரபா, கடலை முட்டாய் என்று கண்ட விளம்பரங்களிலும் நடித்தார். கடும் முயற்சிக்கு பின் மீண்டு வந்த அமிதாப், படத் தயாரிப்பு ஆசையை பதினாறு துண்டுகளாக வெட்டி, மடித்து மூட்டைக்குள் வைத்து கட்டி, நடுக்கடலில் வீசிவிட்டு நிம்மதியாக தன் வேலைகளை கவனிக்க தொடங்கிவிட்டார்.

போன வாரம் அமிதாப்புடன் பேசிய அஜீத், சார்... நீங்க மீண்டும் படத் தயாரிப்பில் இறங்கணும். அந்த படத்தில் நானே மீண்டும் நடிக்கணும் என்று கேட்டுக் கொள்ள, அஜீத்தின் மார்க்கெட் நிலவரம், வசூல் வேட்டை எல்லாவற்றையும் அடிக்கடி கேள்விப்பட்டு வந்த அமிதாப் மனசார சரி என்று கூறியிருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரை முதல் முள்ளிவாய்க்கால் வரை...

# தமிழ் இன அழிப்பு...

## உண்மைச்சாட்சியங்களுடன் டாக்டர் வரதராஜன்

இலங்கை அரசின் தமிழினப்படுகொலைக்களத்தில் கண் கண்ட உண்மைச் சாட்ச்சியங்களுடன்... டாக்டர் வரதராஜன் அவர்கள்; ரொரண்டோவில் நடந்த மே18இல் தமிழர் தேசிய அவையினால் நடாத்தப்பட்ட இன அழிப்பு நினைவு நாளின் நினைவுப் பேருரை...

கறுப்பு யூலை நினைவு கூறும் நிகழ்வுக்கு என்னையும் அழைத்து இந்த கொடிய இலங்கையரசின் இனப்படுகொலைப்போரில் கொல்லப்பட்ட மக்களுக்கான நினைவு கூர்ந்து வணங்க வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த தமிழர் தேசிய அவை ஏற்பாட்டாளர்களுக்கு எனது நன்றி.

உண்மையிலேயே இலங்கையில் இனப்படுகொலை செய்யப்பட்ட பல ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு இன்று இந்த இடத்திலேனும் நினைவு கூரும் வாய்ப்பு கிடைத்ததையிட்டு நான் சிறிது மனநிறைவு கொள்கிறேன். ஏனென்றால் இந்த கொடிய இனப்படுகொலைப் போர் பல காலமாக நடந்துவந்தாலும் இந்த இனஅழிப்பின் அதி உச்சக்கட்டமாக நடந்த 2009ஆம் ஆண்டு பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு அந்த இறந்த தமிழர்களுக்கு தமிழ்ப் பண்பாடு சார்ந்த இறந்தவர்களுக்குரிய மதிப்போடு சமய சடங்குகள் அனைத்தும் செய்து எமது இறந்த உறவுகளை புதைப்பதற்கோ அல்லது எரிப்பதற்கோ எந்த வாய்ப்புகளும் இல்லாமல் எங்கள் தமிழர்கள் அந்த துன்பங்களை துயரங்களைத் தாங்கியதை நான் அங்கு மருத்துவராகப் பணியாற்றியபோது பார்த்திருக்கிறேன்.

ஒரு தாய் தன்னுடைய இறந்த குழந்தையை எடுத்துச் சென்று அடக்கம் செய்யமுடியாமல் எமது மருத்துவமனையிலேயே இறந்துபோன உடலை விட்டுவிட்டு அழுதுகொண்டு செல்லுகின்ற பல நூற்றுக்கணக்கான நிகழ்வுகளையும் ஒரு கணவன் தன்னுடைய மனைவியின் இறந்த உடலை எடுத்துக் கொண்டுபோய் அடக்கம் செய்ய முடியாத நிலையில் கனத்த மனத்துடன் செல்லுகின்ற நிகழ்வையும் ஒரு கணவனின் இறந்த




உடலைப் புதைக்கமுடியாமல் சென்ற மனைவியையும் பெற்றோரின் இறந்த உடலைப் புதைக்க முடியாமல் சென்ற பிள்ளைகளையும் இப்படியான பல ஆயிரக்கணக்கான நிகழ்வுகளை நேரில் பார்த்திருக்கிறேன்.

இறந்த தமிழர்களின் உடல்கள் எந்த மதிப்பும் அளிக்கப்படாமல் எங்களுடைய சமயச்சடங்குகள் பண்பாடுகள் இல்லாமல் ஒரு வெற்று நிலத்தில் விறகுக் கட்டைகள் போல் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அந்த இறந்த தமிழர்களின் உடல்களை பெரும்பாலான நேரங்களில் உறவினர்கள் கூட வந்திருக்கமாட்டார்கள். அந்த இறந்த தமிழர்களின் உடல்களை மருத்துவமனையில் மருத்துவ பணியாற்றுகின்ற நாங்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தொண்டர்களின் உதவியோடு ஒரு உழவூர்தியிலோ அல்லது வேறு ஒரு ஊர்தியிலோ ஏற்றிச் சென்று ஒரு பொது இடத்தில் அது எந்த இடம் என்று கூட அடையாளப்படுத்த முடியாத பல இடங்களில் அடக்கம் செய்திருக்கின்றோம்.

இறந்த தமிழர்களுக்குரிய முறையான எந்த சமய பண்பாட்டு சடங்குகளும் செய்யக்கூடிய மனநிலையிலோ அல்லது காலநிலையிலோ நாம் எவரும் இருக்கவில்லை. அந்த தமிழர்களின் உள்ளத்தில் அந்த தமிழர்கள் படும் துயரங்களை அந்த நேரத்தில் நினைத்துப் பார்த்ததுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இனப்படுகொலை நடந்த இடத்தில் பணி புரிந்த அரச மருத்துவர்கள் அரச மருத்துவ பணியாளர்கள் கூட இறந்த தமிழர்களுக்கு மதிப்பைச் செய்யமுடியாமல் இருக்கின்ற அந்தக் கட்டத்தில் போர் முடிந்த பின்பாவது இந்த இடத்தில் வந்து நாம் ஒரு பொது இடம் ஒன்றை அல்லது பொது கட்டிடம் ஒன்றை நிறுவி இங்கு பேர் குறிப்பிடப்படாமல் அந்த இடத்தில் யாரை அடக்கம் செய்தோம் என்று குறிப்பிடமுடியாத அனைவருக்கும் நினைவு கூறவேண்டும் என்று பல தடவைகள் கூறியிருக் கிறோம். ஆனால் இலங்கை இனவெறியரசு பல ஆண்டு களாக அந்த இடத்தில் தமிழர்கள் தாமாக விரும்பி இறந்த தமிழர்களுக்கான நினைவுகூர கூட முடியாத பல



தடைகளை போட்டிருந்தது. தமிழின அழிப்புப்போரில் தமிழர்கள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் அந்த மக்களுக் கும் எனக்கும் என்ன தொடர்பு என்பதை நான் சற்று விரி வாகக் கூற வேண்டிய நிலையில் நான் இருக்கிறேன்.

எனது வாழ்க்கை ஓட்டம் என்பது கிட்டத்தட்ட இலங்கையில் இருந்த அனைத்து மக்களுக்குமான ஓட் டம். இங்கிருக்கின்ற பலர் தமிழினப்படுகொலையின் காணொளியூடாகவும் நிழற்படமாகவும் பார்த்திருப்பீர் கள். சிலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். சிலருக்கு முற்று முழுதாக அறிந்து கொள்ள வாய்ப்பு இருந்திருக்காது.

நான் சிறுவனாக இருந்தபொழுது 1983ம் ஆண்டு தமிழின அழிப்பின் மூலம் இனஅழிப்பை தொடங்கிய சிங்கள இனவெறியரசும் இனவெறி அரசபடைகளும் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் நடந்த உச்சக் கட்ட தமிழின படுகொலை வரையிலான காலப் பகுதியில் நான் இலங்கையில் வாழ்ந்திருக்கின்றேன். என்னுடைய சிறு அகவையில் பல தடவைகள் இடம் பெயர்ந்து இலங்கை சிங்கள இனவெறி அரசின் தாக்குதலுக்குள்ளாகி வேறு வேறு பிரதேசங்களில் வாழ்ந்திருக்கின்றேன். இடப்பெயர்வு எங்களுடைய மாணவர்களின் கல்வியை சீர்குலைத்தது மட்டுமல்லாது பல கொடுமைகள் வறுமைகள், பசி, பட்டினி எல்லாம் எங்களுக்கு வந்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி யில் இருக்கின்ற பிரதேசங்களுக்கு உணவுத்தடை, மருந்துத்தடை இத்தனைக்கும் மத்தியில் எறிகணை வீச்சுக்கள் போன்ற கொடிய தமிழின அழிப்புப் போரின் காரணமாக மருத்துவமனையில் நோயாளர்கள் படும் துயரங்களும் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாத அந்தக் குறைபாடுகள் என்னை மட்டுமல்ல பல தமிழ் மாணவர்களை மருத்துவராக உருவாக்கியது.

நான் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாம் மதநெறியைப் பின்பற்றும் தமிழ்பேசும் ஊரில் மருத்துவராக பணியாற் றிக் கொண்டிருந்த போது அமைதிக்கான காலம். உங் கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும் சரத்பொன்சேகா வுக்கு ஒரு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தக் குண்டுத் தாக்குதலுக்கான திட்டம் வன்னியில் இருந்து விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது என அறிந்திருந்தார்கள். அதற்கு பழி வாங்கும் முகமாக தாங் கள் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதாக கோரியிருந்தார்கள். உண்மையிலேயே அதற்கு பழிவாங்கும் முகமாக அந்த தாக்குதலை மேற் கொண்டிருந்தால் வன்னியில் இருந்து திட்டமிட்ட தாக்குதலுக்கு பதிலாக வன்னியில் தாக்குதலை நடத்தி யிருக்கவேண்டும். ஆனால்...

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த யாழை மீட்டுவார் யாரோ...?

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கன்னிகாபுரத்தைச் சேர்ந்தவர். நான்கு வயதில் தாயை இழந்தவர். சிறு வயதில் இருந்தே புத்தகங்களை உலகமாகக் கொண்டார். தொடக்கத்தில் இயக்குனராகப் பணியாற்ற விரும்பி இயக் குனர் பாலுமகேந்திராவிடம் நான்கு ஆண்டுகள் பணி செய்தார். இயக்குனர் சீமானின் வீர நடை என்ற படத்தில் பாடல் எழுதினார். கிரீடம் (2007) மற்றும் வாரணம் ஆயிரம் (2008) போன்ற சில படங் களுக்கு வசனம் எழுதினார். இதுவரை கிட்டதட்ட 1500 பாடல்களுக்கு மேல் எழுதியுள்ள இவர், 2016 வரை தமிழ்த் திரையுலகின் முன்னணி பாடலாசிரியராக இருந்தவர். இவர் 2006 ஆண்டு ஆணி மாதம் 14 ஆம் திகதி, வடபழனியிலுள்ள ஜீவலக்ஷ்மி என்பவரை திருமணம் செய்தார். இவர்களு க்கு நாகராஜன் என்ற மகனும் ஜோகலக்ஷ்மி என்ற மகளும் உள்ளார். நா. முத்துக்குமார் பத்தாண்டு களுக்கும் மேலாக தொடர்ச்சியாக பல வெற்றிப்பாடல்களையும், பல படங்களின் முழுப்பாடல்களையும் எழுதி வந்தவர். அநேகமாக காவியக் கவிஞர் வாலியின் பதினைந் தாயிரத் திற்கும் அதிகமான பாடல்கள் எனும் சாதனையை முறிய டித்திருக்கக் கூடும்.



கவிஞர். நா.முத்துக்குமார்
அவர்களின் நினைவுகளோடு தளிர்...

இளங்கலை பட்டப்படிப்பில் இயற்பியலில் தேர்ந்த நா.முத்துக்குமார் தமிழ் ஆர்வம் காரணமாக முதுகலை தமிழ் படித்தவர். கவிஞர் அறிவுமதியிடம் பாடல் எழுத பயிற்சி எடுப்பதும், இயக்குநர் பாலு மகேந்திராவிடம் உதவி இயக்குநராக பயிற்சி எடுப்பதுமாக கழிந்த அக்காலத்தில் இறுதியாக உதவி இயக்குநர் ஆவலை முற்றாகத் துறந்தார். தமிழில் முனைவர் பட்டம் பெறுவதா? பாடலாசிரியராக மாறுவதா? எனும் வாய்ப்புகளில் பாடலாசிரியராக முடிவெடுத்த அவர் வெற்றிகரமான பாடலாசிரியராக வலம் வந்தவர். தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகள் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருது பெற்றவர்.

கல்லூரிக் காலத்தில் இவரது 'தூர்' கவிதை எழுத்தாளர் சுஜாதாவால் பெரிதும் பாராட்டப்பட்டு புகழ் வெளிச்சம் பெற்றதாகவும் பல்வேறு சூழல்களில் இவரே குறிப் பிட்டுள்ளார். தொடர்ந்து கவிதை எழுதச் சொன்ன சுஜாதா அவர்களிடம், எனக்கு திரைப் படங்களில் பாடல் எழுதவே ஆசை என்று தெரிவித்துள்ளார். யாரும் எதிர்பாராத இவரது மறைவு தமிழ்த் திரையுலகத்திற்கு ஈடு செய்ய இயலாத இழப்பா கும். இவர் பாடலெழுதிய படங்கள்: மாற்றான், 7ஜி ரெயின்போ காலனி, நந்தா, வெயில் (சிறந்த பாடலாசிரியருக்கான விருது), சந்திரமுகி, சிவாஜி த பாஸ் (சிறந்த பாடலாசிரியருக்கான விருது), கற்றது தமிழ், கஜினி (சிறந்த பாடலாசிரியருக்கான விருது), காதல் கொண்டேன், காதல், மன்மதன், சண்டக் கோழி, தீபாவளி, போக்கிரி, பீமா, அழகிய தமிழ் மகன், சத்தம் போடாதே, கல்லூரி, சந்தோஷ் சுப்பிரமணியம், ஆறு, வாரணம் ஆயிரம், சிவா மனசுல சக்தி (சிறந்த பாடலாசிரியருக்கான விருது), அயன் (சிறந்த பாட லாசிரியருக்கான விருது), யாரடி நீ மோகினி, பையா, அங்காடித் தெரு, சிங்கம், மதராசப்பட்டினம், எங்கேயும் காதல், தெய்வத் திருமகள், நண்பன், பில்லா 2 மற்றும் பல படங்கள்... குறிப்பாக சமீபத்திய தங்கமீன்கள் படத் தில் இடம்பெற்ற ஆனந்த யாழை... சைவம் படத்தில் இடம் பெற்ற அழகே அழகே என்ற பாடல்களையும் குறிப்பிடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HOMELIFE/CHAMPIONS REALTY INC., BROKERAGE*
*INDEPENDENTLY OWNED & OPERATED

# NOW HIRING

FULL TIME/ PART TIME REAL ESTATE AGENTS

## 90/10 SPLIT OR FLAT FEE



UTAYAN PONNUTHURAI, Bsc (Hons)
BROKER OF RECORD

DIRECT: 416 505 2120

DIRECT: 416 505 2120
OFFICE: 416 646 8849

MORTGAGE ALLIANCE
Access Inc.
Fsco Lic: 11404 | Independently Owned & Operated

# NOW HIRING

THE RIGHT AGENT
TO DO THE RIGHT MORTGAGE
WITH THE RIGHT BROKER

UTAYAN PONNUTHURAI ,BSc(Hons), AMP
Principal Broker

8130 Sheppard Avenue East Suite 209 | Toronto, ON, M1B 3W3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீடுகளில்
முக்கிய முதலீடு **வீடு**

என்னூடாக வாங்கும்
வீடுகளுக்கு
ஒரு வருட
உத்தரவாதம்






GOLD 2009
DIAMOND 2010
CHAIRMAN 2011
TOP 5% SALES REP IN CANADA 2010, 2011

வீடு வாங்க விற்க
அழையுங்கள்

## சங்கர் மாணிக்கம்

## 416.453.6666

### உங்களுக்குத் தெரியுமா?

வீட்டு உரிமையாளர்கள் பெரிதளவு பணத்தைச் சேமிக்கின்றார்கள்

| வீணாகும் உங்கள் பணத்தை சேமியுங்கள் | Condo | Townhouse | Bungalow | Detached |
|---|---|---|---|---|
| **House Amount** | Start form **$100,000** | Start form **$200,000** | Start form **$300,000** | Start form **$350,000** |
| Down Payment | $5,000 | $10,000 | $15,000 | $17,500 |
| Loan Amount | $95,000 | $190,000 | $285,000 | $332,500 |
| **Mortgage Payment** | **$420** | **$840** | **$1261** | **$1472** |
| Property Tax | $100 | $200 | $225 | $250 |
| Condo Maintenance Fee | $500 | $200 | - | - |
| Utilities | - | $200 | $300 | $300 |
| Total Payment | $1020 | $1640 | $1786 | $2022 |
| Room Rent Income | $300 | $400 | - | - |
| Basement Rent Income | - | - | $700 | $800 |
| **TOTAL** | **$720** | **$1240** | **$1086** | **$1222** |

Down Payment 5%

உங்களுக்காக வீடு விற்க வாங்க தகுதியான
**Real Esate Agent ஐ தெரிவு செய்யுங்கள்**

### About Shankar Manickam...

- Full Time Realtor
- Top 5% Sales Rep in Canada
- Highest award winner - Chairman 2011
- Working 7 days a week 9am to 9pm
- Home inspector
- Former Mortgage Advisor

**Home Life/Future** Realty Inc.,Brokerage* **905.201.9977** Cell: **416.453.6666**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org